
www.padippakam.com

# Erde மண்

Germany 100/2003



**100*100 Jubiläumsheft 100*100**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்




## விளையாட்டுச்செய்தி

### விம்பில்டன் ரெனிஸ் போட்டி (Wimbledon)

வருடா வருடம் நடாத்தப்படும் உலகவீரர்கள் பங்குபற்றும் விம்பிள்டன் ரெனிஸ் போட்டி வழமைபோல் பிரித்தானியாவில் இடம்பெற்றது. இப் போட்டியின் ஆண்வீரராக சுவீஸ் நாட்டைச் சேர்ந்த Federer வெற்றி பெற்றார். பெண்கள் போட்டியில் அமெரிக்கநாட்டுப் பெண்மணி Serena Williams வெற்றிபெற்று இருவரும் 2003க்கான விம்பிள்டன் கிண்ணத் தையும் பணப்பரிசுகளையும் பெற்றுக்கொண்டனர். 117வது வருடங்களாக நடைபெற்ற ஆண்கள் போட்டிகளில் வெற்றி நாடுகள் வரிசையை இங்கெ காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| **பிரித்தானியா** | ~ | **35** | **தடவை** |
| **அமெரிக்கா** | ~ | **33** | **தடவை** |
| **அவுஸ்த்திரேலியா** | ~ | **21** | **தடவை** |
| **பிரான்ஸ்** | ~ | **7** | **தடவை** |
| **சுவீடன்** | ~ | **7** | **தடவை** |
| **ஜேர்மனி** | ~ | **4** | **தடவை** |
| **நியுஸ்லாந்து** | ~ | **4** | **தடவை** |
| **எகிப்து** | ~ | **1** | **தடவை** |
| **குரோசியா** | ~ | **1** | **தடவை** |
| **நெதர்லாந்து** | ~ | **1** | **தடவை** |
| **ஸ்பெயின்** | ~ | **1** | **தடவை** |
| **செக்கோஸ்லாவியா** | ~ | **1** | **தடவை** |
| **சுவீஸ்லாந்து** | ~ | **1** | **தடவை** |
| | = | **117** | **தடவை** |


படிப்பகம்

www.padippakam.com


29.05.03

- தென் இலங்கைப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மண் சரிவில் 1000 பேர்வரை பலி பல கிராமங்கள் நீரில் மூழ்கிவிட்டன. 500 பேர் வரை காணவில்லை.
- தென் பகுதியில் ஏற்பட்ட வெள்ள நிவாரண அன்பளிப்புக்கு தமிழர் புனர் வாழ்வுக்கழகம் 20 லட்சம் ரூபா பெறுமதியான அன்பளிப்புப் பொருட்களை வழங்கியுள்ளது.

30.05.03

- யாழ்ப்பாணத்தில் மிகக் கோலாகலமாக பொங்குதமிழ் நிகழ்வு நடை பெற்றது. தமிழ், சிங்கள, இஸ்லாமிய பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## உலகம்

01.05.2003

- ஆபிரிக்க நாடான குவாக்கோ நாட்டில் உள்நாட்டுக் கலவரங்களில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.
- துருக்கியின் டிங்கோள் நகரில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியில் 150 பேர் வரைபலியானார்கள். ஆயிரக்கணக்கான வீடுகள், கட்டிடங்கள் இடிந்து அழிவு.
- ஈராக் நிதி அமைச்சராக இருந்த அல் அசாவியை காவல் துறையினர் கைது செய்து அமெரிக்க படைகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

10.05.2003

- இந்தியா-பஞ்சாப் மாநிலத்தில் ரயில் பெட்டிகள் தீப்பிடித்து எரிந்ததில் 38 பேர் பலி. 13 பேர் காயம்.

20.05.2003

- முன்னாள் தி.மு.க. அமைச்சர் தா. கிருஷ்ணன் வெட்டிக் கொலை.
- மொறோக்கோ வர்த்தக நகர மொன்றில் நடை பெற்ற தற் கொலைத்தாக்குதலில் 40பேர் பலி 60 பேர் காயம்.

30.05.2003

- அல்ஜீரியாவில் பாரிய நில நடுக்கம் 1000 க்கும் அதிகமானோர் பலி. 500 க்கும்
- அதிகமானோர் படுகாயம். பல கட்டிடங்கள், வீடுகள் இடிந்து அழிவு.
- உலக நாடுகள் மீது அமெரிக்கா தலையீடு குறித்து சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம்.

06.06.2003

- இந்தியாவில் அதிகரித்த வெப்பத்தால் 1500 பேர்வரை மரணமானார்கள

www.padippakam.com



# செய்திச்சரம்

## இலங்கை;-

01.05.2003

- கண்காணிப்புக்குழுவிற்கு எதிராக பௌத்தபிக்குகள் ஒன்று கூடி நோர்வே தூதரகத்துக்குமுன் மறியல் போராட்டம்.
- மூதூரில் தமிழ் முஸ்லீம் குழுக்களிடையே இடம் பெற்ற மோதல்களில் 8641 தமிழ் முஸ்லீம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து 18 முகாம்களில் தஞ்சம். 60 ஆயிரம் பேர் பாதிப்பு.

80.052003

- தமிழர்களின் சுயநிர்ணயம் சமாதானத்தை வலியுறுத்தி தமிழர் தாயகப்பகுதிகளில் மேதினப் பேரணிகள், தொழிற் சங்கங்கள், பொது அமைப்புக்கள், கூட்டுறவு அமைப்புக்கள் பங்கு கொண்டன.
- 2வது உலக இந்து மகாநாடு கொழும்பில் பிரமாண்டமாக நடை பெற்றது. 500 க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.
- இந்தியா, இலங்கை நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உதவி திட்டத்தின் கீழ் இந்தியா இலங்கைக்கு 20 கோடி டொலரை வழங்கவுள்ளது.

11.05.03

- யுத்தநிறுத்த காலத்தில் 8 ஆயிரம் படையினர் தப்பியோடியுள்ளனர். 500 பேர் மட்டுமே சேர்ந்துள்ளனர்.
- இலங்கைப் படைகள் கிளிநொச்சியில் நிலை கொண்டிருந்த காலத்தில் 57 பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
- நாட்டில் கடந்த 3 மாத காலத்தில் 304 கொலை, தற்கொலைகள், 215 பேர் கடத்தல், 287 பெண்கள் மீது பாலியல் வல்லுறவு, 1357 கொள்ளைகள் இடம் பெற்றிருப்பதாக பொலிஸ் திணைக்கள அறிக்கை தெரிவித்துள்ளது.

16.05.03

- நோர்வே வெளிவிவகார அமைச்சர் வன்னி சென்று விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவினருடன் கலந்துரையாடினார்.

22.05.03

- அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் விருதை அவரின் மனைவியிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் வழங்கிக் கௌரவித்தார்.



படிப்பகம்

Anlage Z 1 zur AWV **ZAHLUNGSAUFTRAG IM AUSSENWIRTSCHAFTSVEF**
Meldung nach §§ 59 ff. der Außenwirtschaftsverordnung (AW

1

52: An Kreditinstitut
Stadtsparkasse Duisburg
Königstraße 23-25
47051 Duisburg

Bankleitzahl
350 50000

Konto-Nummer des Kontoinhabers/Einzahlers
0225000421

Zahlung zu Lasten 1 = Euro-Konto 2 = Währungskonto
Keine Angabe bedeutet Zahlung zu Lasten des Euro-Kontos

32: Währung Betrag
EUR 200,00

50: Name des Kontoinhabers/Einzahlers
VYRAMUTHU-SIVARAJAH, (MANN"ERDE)

Straße
ANGERTALER STR 98

Postleitzahl Ort
47249 DUISBURG

57: Bank des Begünstigten (bevorzugt als S.W.I.F.T.-Code)
BIC (S.W.I.F.T.-Code)
Ist sowohl der S.W.I.F.T.-Code als auch Name und Anschrift der Bank ausgefüllt, wird die Zahlung gemäß S.W.I.F.T.-Code ausgeführt.

Name des Kreditinstituts
HATTON NATIONAL BANK

Straße
MANNAR BRANCE

Ort/Land
MANNAR, SRILANKA

Konto-Nummer des Begünstigten bzw. IBAN
02-1050601-9
Bank-Code/S.W.I.F.T.-Code

59: Name des Begünstigten
REV-FR-S-JESURAJAH

Straße
"VALVUTHAYAM" MAIN Street

Ort/Land
MANNAR - SRILANKA

70: Verwendungszweck (nur für Begünstigten)
SPENDE FÜR KINDER HEIM

Datum
30.06.2003

Telefon/Durchwahl
0203-706480

2

...ine ausfüllen. Bei Handschrift sind Großbuchstaben zu verwenden.

துணிச்சலே என் நட்புக்குத் தோழன்.

மலருமுன் இருக்கும் மொட்டு போன்றது தூய்மைக்கற்பு.

நாகத்தின் நச்சுப்பல்லினும் கொடியது நன்றிகெட்ட துரோகம்.

பூமியே இயற்கையின் அன்னை. பூமியே இயற்கையின் சமாதி.

பணம் ஒரு நல்ல படைவீரன். அவனை ஒழுங்காகக் கையாளுங்கள்.

பணம் முன் செல்லுமானால், எல்லாப் பொய்களும் தம் வாயில்களை திறந்து வைத்திருக்கும்.

பொய்யான சந்தேகத்தை உடையவன், உண்மையான சந்தேகத்தை அடையத்தக்கவனே.

எவரையும் விட்டு வைக்காத மரணம் போல சட்டம் இருக்க வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com



# ஆதரவற்றோர் உதவிநிதி

| | | |
|---|---|---|
| ➢ ஆரம்ப இருப்பு 01.05.2003 | | = 139.90 |
| அன்பளிப்புக்கள்:- | | |
| – திரு. சி. அற்புதராசா – Soest *(தாயார் நினைவுதின அன்பளிப்பு)* | +25.00 | |
| – திரு. அ. ப. பாஸ்கரன் – London | +20.00 | |
| – திரு. சி. யசோதரன் – London | +20.00 | |
| – செல்வன் சிவாஸ்கர் சிவராசா – Duisburg *(பிறந்தநாள் அன்பளிப்பு)* | +50.00 | |
| | 115.00 | 115.00 |
| | | = 254.90 |
| ➢ அனுப்பியது | | |
| – வண. பிதா. யேசுராசா *(„வாழ்வுதயம்" மன்னார்)* | -200.00 | |
| – வங்கிக்கட்டணம் | -6.39 | |
| | 206.39 | 206.39 |
| ➢ மீதி கையிருப்பு 30.06.2003 | | =48.51 |

இம்மாதம் பிறந்தநாள் அன்பளிப்பாக வழங்கிய அத்தனை சிறுவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். மனமுவந்து அன்பளிப்பு வழங்கிய அத்தனை உறவுகளுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகள்.


படிப்பகம்

www.padippakam.com





## வைரவிழாக் கொண்டாடும் அருட்சகோதரி றெஜினா

மன்னார் மாவட்டத்தில் வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த அருட் சகோதரி றெஜினா குருஸ் அவர்கள் 30.7.2003 தனது 60 வருட சன்னியாச விழாவை மடுத்திருப்பதியில் சிறப்பாக கொண்டாடவுள்ளார்.

அருட் சகோதரி றெஜினா அவர்கள் வடபகுதியிலுள்ள பல பாடசாலைகளில் அதிபராகவும், ஆசிரியராகவும் கடமைபுரிந்துள்ளார். அத்தோடு கன்னியர் மடங்களிலும் பல ஆண்டுகள் சேவை புரிந்துள்ளார். இவர் அதிக காலங்கள் நெடுந்தீவுப் பகுதியில் கடமைபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது மடுத்திருப்பதியில் ஆன்மீகப் பணியையும், மதப் பணியையும், சமூகப் பணியையும் மேற் கொண்டு வருகின்றார்.

சகோதரி றெஜினாவின் பணியை நாம் ஒரு போதும் குறைவாக மதிப்பிட முடியாது. வட பகுதியில் கடந்த காலங்களில் போரின் கொடுமையால் இடம் பெயர்ந்து இலட்சக்கணக்கான மக்கள் மடுமாத கோவிலில் தஞ்சம் புகுந்திருந்த வேளையில் அல்லல் பட்டு பல உயிர்களை பறிகொடுத்து தவித்த எம்களுக்கு அளப்பரிய உதவிகளை வழங்கினார். தஞ்சம் புகுந்த மக்களுக்கு உணவு கொடுத்து உடை வழங்கி ஆறுதல் கூறி பல வழிகளிலும் உதவி வழங்கி இந்த உயர்ந்த மனம்படைத்த அருட் சகோதரிக்கு தமிழ் மக்கள் சார்பில் நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மண் சஞ்சிகையோ அவர் கொண்டிருந்த பங்கையும் இவ் வேளையில் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர் தனது சமயப் பணியோடு இருந்திருக்கலாம். அவர் ஏழைகள் மீது அல்லல்பட்டுத் தவித்த மக்கள் மீது கொண்டிருந்த அன்பு, பாசம், உதவும் மனப்பாங்கால் உந்தப்பட்டார். மண் சஞ்சிகையோடும் வாசகர்மீதும் அன்பு கொண்டு தொடர்பு கொண்டார்.

நாம் அவ்வப் போது அனுப்பிய பணங்களை சரிவர உரியவர்க்கு கொடுத்து உதவி புரிந்தார். எத்தனையோ துயரப்பட்டவர்களின் கண்ணீரைத்துடைத்தார். மண் சஞ்சிகைக்கு அவ்வப்போது ஆலோசனை எழுதினார், வாழ்த்துக்களை எழுதினார் மண் சஞ்சிகை வளர்ந்து செல்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து எம்மை உற்சாகப்படுத்திய அருட் சகோதரியை மண் சஞ்சிகையின் வாசகர்கள் சார்பில் வாழ்த்தி மகிழ்கிறோம். தனது 60 வது வருட சன்னியாச விழா இனிதே சிறப்புற வாழ்த்துகிறோம். மேலும் நூறுவருடங்கள் நோய் நொடி இல்லாமல் உடல் நலம் பெற்று ஆன்மீகத்தொண்டும் சமூகப்பணியும் தொடர மடுமாதவின் ஆசிவேண்டி மனதார, உளமார வாழ்த்துவோம்.



படிப்பகம்

www.padippakam.com



# Holy Family Convent

Madhu Church

.........../.........../......200.3..

## வாழ்த்துச்செய்தி

„மண்" சஞ்சிகையே!

100வது இதழாக நீ வெளிவருகின்றாய் என்ற சுவையான செய்திகேட்டு மகிழ்கின்றோம். உனது பெருமைக்குரிய ஆசிரியர் திரு. சிவராசா அவர்களுக்கே இந்த வாழ்த்து!

தாய்நாட்டையும், சொந்த மண்ணையும் துறந்து ஜேர்மனி மண்ணை இன்று தாயகமாகக் கொண்டார் உன் ஆசிரியர். ஆனால் அவர் தமது தாய் மொழியையும், தாய்மண்ணையும் மறந்தவரல்ல.

புலம்பெயர்ந்த மக்களின் குழந்தைகள் தாய் மொழியை மறவாது கற்பதற்கு வழிசமைக்கிறார். போரினால் அல்லல் படும் மக்களின் துயர்துடைக்கும் பணிக்கு சஞ்சிகை வாயிலாகப் பணம்திரட்டி, அநாதை இல்லங்களுக்கு, சிறுவர் பாடசாலைகளுக்கு, அகதி முகாம்களுக்கு அனுப்பி வருகிறார்.

புகழ்பெற்று வரும் „மண்" சஞ்சிகையே உன்னை உருவாக்கி வளர்த்து வருகின்ற ஆசிரியர் திரு சிவராசா, திருமதி சிவராசா, செல்வி சிவதர்சினி மற்றும் உடன் உழைப்பாளர்கள் கொண்டுள்ள, உயர்ந்த உள்ளத்தையும், விசாலமான மனத்தையும், இரக்க சிந்தனையும் வெளிக்கொணர்கின்றாய்.

இப்பெரிய பணியைச் செய்துவரும் „மண்" சஞ்சிகையே! உனது 100 இதழ்நாளில் எமது வாழ்த்துக்களையும் நன்றியையும் அனுப்புகிறோம். உன் மூலம் இவர்கள் ஆற்றிவரும் பணிகளோ, நன்மைகளோ, அனைத்தும் உன்னை உருவாக்கி வளர்த்துவரும் இவர்களுக்கே இப் பெருமை சேரும்.

இன்னும் பல்லாண்டு நீ வாழ
இனிய தமிழ் மணம் எங்கும் பரப்ப
அனாதைகள், ஏழைகள் கண்ணீர் துடைக்க
உலகெங்கும் உன் பெயர் துலங்க
சமூகசேவை மேலும் வளர்ந்திட
எல்லாம் வல்ல இறைவன் ஆசிவேண்டி
இதயபூர்வமான எம் வாழ்த்துக்களை
நன்றியுடன் அனுப்புகின்றோம்!....

அருட்சகோதரி றெஜினா
மடுக்கோவில்



படிப்பகம்

www.padippakam.com


**வாழ்வகம்** விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்
**VAAZHVAHAM** Home For The Visually Handicapped
பதிவு இல: 11 / 04 / 07 / 2147 / 89 / 22 - 11 - 1989
யாழ் வீதி, மானிப்பாய், இலங்கை.
Jaffna Road, Manipay, Sri Lanka.

23.04.23

"மண்" நிறுவன ஆசிரியர்
திரு. வி. சிவராசா அவர்கள்.

பேரன்புடையீர்,

தங்கள் "மண்" எதிர்வரும் யூலை 2003ல் 100ஆவது வெளியீடாக வெளிவருவதை வாழ்வக சமூகம் அறிந்து மகிழ்ச்சியடைகின்றது.

"மண்" பல்லாயிரம் ஆண்டுகள் சீரோடும் சிறப்போடும் தமிழ் மணம் வீசிட வாழ வேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

நன்றி.

விழிப்புலன் வலுவிழந்தோர் சேவையில்,

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்,
இலங்கை.

(ஒப்பம்)
செல்வி அ. சின்னத்தம்பி
தலைவர்
வாழ்வகம்

மண் நூறாவது சிறப்பு இதழ் வாழ்த்துக்களின் தொடர்ச்சி அடுத்த இதழில்.....


படிப்பகம்

www.padippakam.com



SWAMI CHIDRUPANANDA
SRI RAMAKRISHNA
SARADA SEVASHRAMA
POINT PEDRO
SRI LANKA

ஸ்ரீ சாரதாதேவி சேவாசிரமம்
பருத்தித்துறை.
18.04.2003.

கலை, இலக்கிய, சமூக இதழாக திகழ் 1990 ல்
ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சி
யாக மண் சஞ்சிகை 2003 ஆனியில் 100 வது
இதழாக வெளிவருகின்றது பற்றி அறிந்து மட்டற்ற
மகிழ்ச்சி.

சுவாமி விவேகானந்தர் தமது வாழ்நாள்
முழுவதும் ஆத்மீக, சமய சமூகநலனில் அக்கறை
கொண்டு ஆற்றிய பணிகள் சொல்லில் அடங்கா.
இவர் விட்டுச் சென்ற பொக்கிஷத்தை நாம் அள்ளிப்
பருக வாய்ப்பாக பல இலக்கியங்கள் தோன்றி
யுள்ளன. கற்றது கைமண் அளவு கல்லாதது
உலக அளவு என்ற வாக்குக்கு அமைய யாவும்
படித்து முடித்து விட்டோம் என்று சொல்ல
இயலாது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் "வாழும் வரையும்
படிக்க வேண்டும்" என்றார்.

ஆகவே இச் சஞ்சிகைப் பணி
சிறக்கவும், இதன் ஆக்கங்களை மனம் விட்டுப்
படிக்கவும் செய்யுங்கள்.

அன்னையின் ஆசிர்வாதத்துடன்
இறை பணியில்
அன்புள்ள
அன்னையின் அடியவன்
சுவாமி சித்ரூபானந்தா



படிப்பகம்

**Most Rev. Dr. Rayappu Joseph, Bishop of Mannar**
*Bishop's House, Mannar, Sri Lanka*

*Tel – 023 32503; 32710 Fax – 023 32709*
*E-Mail : bisman@sltnet.lk or jrayappu@yahoo.com*

15 – 05 – 03

இவ்வாண்டு ஆடித்திங்களில் ஜேர்மனியில் வெளியாகும் "மண்" சஞ்சிகையின் 100 வது வெளியீட்டைப் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். புலம் பெயர்ந்திருக்கும் எம் உறவுகளுக்கு "மண்" சஞ்சிகை வழியாக தமிழ் மணத்தையும், பண்பாட்டுக் கூறுகளையும், அரசியல் நிலைப்பாடுகளையும் அவ்வப்போது ஊட்டிவரும் மண் சஞ்சிகை ஆசிரியரைப் பாராட்டி நிற்கிறேன்.

எம் மக்கள் புலம் பெயர்ந்திருந்தாலும் எமது மண்ணின் உறவுகளையும், உணர்வுகளையும் மறந்து போகாமல் தொடர்ந்து காக்கும் கருவியாக "மண்" தொடர்ந்து திகழ்ந்திட வாழ்த்துகிறேன்.

"மண்" ஆசிரியர் சிவராசா அவர்களின் பணி சிறக்க எனது நல் ஆசீர்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

அன்புடன்

+

மன்னார் ஆயர்.

அன்னை தெரசாவிற்கு 1979ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு அளிக்கப்பட்டது. அமைதிக்கான பிரிவில் பரிசு பெற்ற முதல்வர் இவரே. 69 ஆவது வயதில் அன்னை தெரசா இப்பெருமையைப் பெற்றார். ஒதுக்கப்பட்டவர்களுக்கு அன்புப் பணி செய்தவர் அன்னை தெரசா. 29 ஆண்டுகள் கழித்துதான் தெரசாவின் சேவையை உணர்ந்து நோபல் குழு இப் பரிசை அளித்து கௌரவப்படுத்தியது.



படிப்பகம்

www.padippakam.com



# கிளி / ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

யாழ் வீதி, கிளிநொச்சி

இலங்கை

தலைவர் : செல்வி T. ஜெகதீஸ்வரி

இயக்குனர் : வண. ஜேம்ஸ் பத்திநாதன் Dip.in Soci.Dev.M.Sc.in Soc.Pol.

திட்ட இணைப்பாளர் : வண. சகோதரி ஜூட் எம்பிறாசெய Dip.in CBR(U.K.)

குழுச்செயலாளர் : திரு. பொன். நித்தியானந்தம் B.A.(Cey.) திட்டமிடல் அதிகாரி, கச்சேரி

உபசெயலாளர் : செல்வி B. புஷ்பகாமேலா

பொருளாளர் : செல்வி கெ. விஜயலட்சுமி

WE FOR ALL ALL FOR US

எங்கள் இல........................................

உங்கள் இல........................................

பதிவு இல. NEP/SS/26

ஆரம்பம் 1990

16. 05. 2003.

ஆசிரியர்,
திரு. வ. சிவராஜா அவர்கள்,
"மண் சஞ்சிகை"
ஜேர்மனி.

ஐயா,

## வாழ்த்து செய்தி

தங்களின் தளரா முயற்சியினால் 1990 ம் ஆண்டில் மண் சஞ்சிகை ஆரம்பித்து 2003 ம் ஆண்டில் 100 வது சிறப்பு மலருக்கு வாழ்த்து தெரிவிப்பதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

தங்களின் சேவை இவ் வன்னி வாழ் மக்களுக்கு கட்டாயம் தேவை என்ற அடிப்படையில் இச் சஞ்சிகை ஆலம் விழுதினைப்போல் 100வது விழுதாக அகிலமெங்கும் பரவி „மண்“ வளத்தோடு மலர் பூத்துக் குலுங்கிட நாம் வண்டுகளாக மலரின் நறுமணத்தை என்றென்றும் முகர்ந்திட பல்லாண்டு காலம் மண் சஞ்சிகை வாழ இறை ஆசிர் வேண்டி வாழ்த்துக் கூறும்.

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க
அங்கத்தவர்கள், பணியாளர்கள்,
நிர்வாகத்தினர்.

வங்கியாளர்
செலான் வங்கி A/c. SA 574240
வவுனியா கிளை
வவுனியா
இலங்கை



மருத்துவ ஆலோசகர்
Dr. சிவபாலசுந்தரன்
தள வைத்தியசாலை D.M.O.
கிளிநொச்சி
இலங்கை

படிப்பகம்

## வாழ்த்துரை

ஜேர்மனியிலிருந்து வெளிவரும் மண் சஞ்சிகை தனது நூறாவது இதழை வெளியிடுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். 1841இல் இலங்கையில் உதயதாரகை தொடங்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை ஈழத்தில் நூறுக்கும் அதிகமான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் மலர்ந்து மணம்பரப்பி வந்துள்ளன. அதன் அடியொற்றி புகலிடத்திலும் ஈழத்தமிழரின் அந்தப் பாரம்பரியம் தொடரலாயிற்று.

ஒரு சஞ்சிகையின் காலப்பகுதியின் அடிப்படையில் இலக்கிய வளர்ச்சியைப் பார்ப்பது எமது பாரம்பரியமாகும். தமிழகத்தில் மணிக்கொடி காலம், சரஸ்வதி காலம் என்று கூறப்படுவதைப்போல ஈழத்திலும் தமக்கென ஒவ்வொரு காலகட்டங்களை ஏற்படுத்தி மிகச் சிறிய காலமென்றாலும் அக்காலகட்டத்தில் பல புதுமைகளை-புரட்சிகளைச் செய்து பல இலக்கியகர்த்தாக்களையும் உருவாக்கிவிட்ட பெருமை ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி, மல்லிகை போன்ற இதழ்களுக்கு உள்ளது.

புகலிடத்தில் மண் சஞ்சிகையும் தனக்கென ஒரு பாதையை வகுத்து அதன்வழி நின்று இன்று 100வது தடத்தைப் பதித்த பெருமிதத்துடன் நிமிர்ந்து நிற்கின்றது. மண் சஞ்சிகையுடனான எனது தொடர்பு ஏற்பட்டுச் சிறிய காலமேயானாலும், அதன் வித்தியாசமான இயங்குதளம் என்னை இந்தப் புகலிடச் சிற்றிதழின்பால் அதிக கவனத்தை செலுத்தத் தூண்டிவிட்டது. சமூகசேவையை ஒரு சஞ்சிகையின் வாயிலாகவும் முன்னெடுத்துச் செல்லலாம் என்பதை ஜேர்மனியிலிருந்து வெளியாகும் மண் சஞ்சிகை வெற்றிகரமாகச் செய்து காட்டியுள்ளது.

தன் வளர்ச்சிப்பாதையில் பல புகலிடத்து எழுத்தாளர்களை வெளிக்கொணர்ந்ததும் அது தவறவில்லை. இன்று புகலிடத்தில் வெளிவரும் பல நூல்களில் மண் சஞ்சிகை பற்றியோ அதன் ஆசிரியர் பற்றியோ குறிப்பொன்று வருவது தவிர்க்கமுடியாததாகி வருகின்றது.

நூலின் வடிவமைப்பு பற்றிய கருத்து வேறுபாடு பலருக்கும் இல்லாமலில்லை. மண் சஞ்சிகையில் அழகியல் அம்சங்கள் குறிப்பிடத்தகுந்ததாகக் காணப்படாதது ஒரு குறையாகத் தோன்றலாம். மண் சஞ்சிகையின் மூலம் கிடைக்கும் வருவாயை தாயகத்தின் அவசியத் தேவைகளுக்கான நிதியாக அனுப்புவதா அல்லது சஞ்சிகையின் வடிவமைப்பை மெருகூட்டுவதற்குப் பயன்படுத்துவதா என்ற நிலையில், அதற்கான தீர்வை எடுக்க நேரிடும் போது ஆசிரியர் முன்னையதற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குத் துணிந்தமையே இந்த அழகியல் நிலைப்பாட்டுக்குக் காரணம் என்று கருதவேண்டியுள்ளது.

எமது தாயக மண்ணின் மணம் புகலிடத்தில் தொடர்ந்தும் எம் நெஞ்சங்களில் கமழ்ந்திருக்க இந்த மண் சஞ்சிகை தொடர்ந்தும் தன் வெற்றிப் பயணத்தைத் தொடர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

என். செல்வராஜா

நூலகவியலாளர்.
இலண்டன்
23.06.2003

## நாங்களும் வாழ்த்துகிறோம்.

"மண்" சஞ்சிகை நூறாவது இதழ் விரிக்கும் இவ்வேளை மனம் மகிழ்கிறது.புலம்பெயர் நாட்டில் பிறந்த சஞ்சிகைகளில் அதிககாலம் யேர்மன் நாட்டில்வாழும் பெருமைமண்சஞ்சிகைக்கே சேரும். இந்த நூறு இதழும் நூறு வயதுக்கு ஒப்பானது. முடிந்த அளவில் தமிழுக்கும் புலம் பெயர்வாழ் தமிழ்வாசகர்களின் தமிழ்வளர்ச்சிக்கும், முடிந்தளவில் தனது பங்கினைச்செலுத்தி வருவதை அனைவரும் அறிந்ததே. புதிய ஆக்கதாரர்களின் வரவும் சிறுவர் இலக்கிய வட்டங்களின் ஆரம்பமும் வளர்ச்சியில் முன்னேற்றத்தைத்தோற்றுவிக்கின்றன.

இதைவிட ஈழப்போரின் அனர்த்தங்களினால் பாதிப்படைந்த மக்களுக்கு உதவி புரியும் மகத்தான சேவை "மண்" சஞ்சிகையின் தனித்துவமானது.ஜேர்மன் நாட்டில் மாத்திரமல்லாது உலகம் முழுவதும் வாழ்கின்ற மண் சஞ்சிகை தமிழ் வாசகர்களின் கரங்களில் இதழ் விரிக்கும் "மண்" சஞ்சிகை மேலும் தரமானதாக வெளிவர ஆசிரியர் குழுவுடன் தரமான ஆக்கதாரர்கள் முன் வரவேண்டும். இலக்கியமென்பது காலத்தைப்பிரதிபலிப்பது .இன்றைய நடைமுறை வாழ்க்கையில் ஆதுவும் புலம்பெயர் வாழ்வியலில் சஞ்சிகையை நூறுஇதழ்வரை கொண்டுவருவது முயற்சியின் முதிர்ச்சி. இந்தப் பெருமை மண் ஆசிரியர் திரு சிவராசாவிற்கும், ஆசிரியர்குழுவிற்கும் சேரவேண்டியது. அதைவிடவும் தங்கள் இலக்கியச்சேகரிப்புகளை வெளிக் கொணர்வதற்குக் களமாக அமைந்த சஞ்சிகையை மனமாரப் பாராட்டுவதும் "மண்" சஞ்சிகை ஆக்கதாரர்களைப்பாராட்டுவதும் நன்றிக்கு ஒரு நன்றி சொல்வதுபோல் மகிழ்ச்சியே! சஞ்சிகை வளர்ச்சிக்கு உதவும் ஆசிரியர் திரு சிவராசா குடும்பத்திற்கும் நன்றியைச்சொல்வது பொருத்தமாகும். அவர்கள் எல்லோருமே இதற்காக உதவுகின்றார்கள் என்பதை நாம் அறிகிறோம்குடும்பம் என்கின்ற கடமையினூடாக அவர்களோடு இலக்கிய வளர்ச்சிக்கு உதவுவது சந்தோசமானது. மேலும் இச்சஞ்சிகை பல ஆண்டுகள் தொடர்ந்து வெளிவர வேண்டும்.இதற்கு ஆக்கதாரர்களும், வாசகர்களும் ஆதரவு வழங்க வேண்டு மென்று ஆசைப்படுகின்றேன். மலரும் என்னும் பலநூறு இதழ்களாக என்று வாழ்த்துகின்றேன்! )நானும் எனது குடும்பத்தாரும்.

*நன்றி,*

*அன்புடன்*

பொன்-புத்திசிகாமணி
குடும்பத்தினர்



படிப்பகம்

www.padippakam.com



Tamilischer Sprachdienst und Kulturverein e.V
தமிழ் மொழிச்சேவை கலாச்சார மன்றம்

Mittwegstr- 21,
45127 Essen.
10.06.2003

திரு. வி. சிவராசா
ஆசிரியர்
மண் சஞ்சிகை
டுயிஸ்பேக்

# வாழ்க வளர்க

மண்ணை மண் என்பாரும் மண்ணை மணி என்பாரும் உண்டு. புலம்பெயர் நாட்டில் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை 100 இதழ்களாக மலர்ந்த மண்ணுக்கு வாசனை உண்டு. வாசனையற்ற மண் எப்படி 100 இதழ்களைப் பூக்கும்? மண்ணின் வாசனையை நுகர்பவர்களுக்கே அதன் மணம் புரியும். “ அறிவான் அறிவான் அரியாலைப் பனாட்டை“ என்பதுபோல் மண்ணின் பெருமையை அறிபவரே அறிவார்.

மண்ணின் தொண்டு மணியானது. மண்ணுக்கு உதவ விரும்புபவர்கள், தமிழ் கற்கும் சிறார்கள், எழுத்தாளர், கவிஞர், இலக்கியவாதிகள் என்று இன்னோரன்ன பலருக்கும் மண் தளமாக இருந்து பணியாற்றுகின்றது. கதை, கட்டுரை, கவிதை, சிறுவர்பகுதி, சித்திரம் பேச்சுப்போட்டிகள்; விழாக்கள் என்பவற்றை நடத்தித் தன் தொண்டை விரிவுபடுத்தி தமிழ்நெஞ்சங்களில் அழியாத இடத்தைப் பிடித்துள்ளது.

நதிமூலமும் ரிஷிமூலமும் ஆராயப்படக் கூடாதவை என்பார்கள். அந்நியநாட்டின் அந்நியச் சூழலில் மண்சஞ்சிகை தன்னை நிலை நிறுத்தி சாதனை படைக்க அது கடந்து வந்த பாதைகளும் கற்றுவந்த பாடங்களுமே ஊன்றுகோலாயின. இன்றைய அதன் வளர்ச்சிக்கு அதன்பின்நின்று உதவியவர்களுக்கும் அதன் ஆசிரியர் திரு. வி. சிவராசா அவர்களுக்கும் எமது மன்றத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள். மண்சஞ்சிகை குன்றுபோல் நின்று, நிலைத்து, நீண்டு எம்மக்களின் சுதந்திர விடியலுக்காய் தொண்டாற்ற வாழத்துகிறோம். வாழ்க! வளர்க!

அன்புநிறை நட்புடன்

ஆ.வேலாயுதம்



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு தமிழ்மொழி, தமிழின வளர்ச்சிக்கான நடவடிக்கை களில் கவனத்தை மேற்கொண்டு செயற்பட்டுவரும் திரு. வ. சிவராசா அவர்கள் சேவை மேலும் மேலும் வளர்ந்து சிறப்புற வேண்டும் என்றும், அவர் மூலம் வெளிவரும் மண் சஞ்சிகையின் பயன் நம் தமிழ் மக்கள் யாவருக்கும் சென்றடைய வேண்டுமென்றும், நூறாவது மலர் பல சிறப்புக் களுடன் வெளிவந்து மேலும் மேலும் வளர்ந்து சிறப்புற வேண்டுமென வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

நன்றி.

இங்ஙனம்
பொ.ஸ்ரீஜீவகன்
தலைவர்
ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

## சாதுரியத்திறன் கேள்வி 18. விடைகள்.

1. சீனாவில் உள்ள யூமென் நகரம்
2. கார்ல்மாக்ஸ் எழுதிய மூலதனம் என்னும் நூல்
3. குளோனிங் முதல் ஆட்டுக்குட்டி டாலி
4. வயிறே இல்லாத உயிரினம் ஈசல்
5. கௌரவர்களின் பெயர் துசைலா
6. கி.மு.4000 ஆண்டில் தோன்றிய மரம் பனைமரம்
7. நாதஸ்வரம் செய்யப் பயன்படும் மரம் ஆச்சா மரம்
8. கலண்டரை வடிவமைத்தவர் போப் கிரிகோரி
9. ஆசியாவில் மட்டும் பயிராகும் மரம் சந்தன மரம்.
10. விமான டயர்களில் நைட்ரஜன் வாயு நிரப்பப்படுகிறது.

தொகுப்பு: அருந்தவம், சோஸ்ற்.


படிப்பகம்



## ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

(இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய)

## Tamilischer Bildungsverein Deutschland e.V.

„கேடில விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

# வாழ்த்துரை

ஜேர்மனியின் டுய்ஸ்போர்க் நகரத்திலிருந்து வெளிவரும் "மண்" சஞ்சிகையின் நூறாவது மலர் மலர்வதை அறிந்து, மட்டற்ற மகிழ்வு கொண்டு, வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

புலம்பெயர் நாடுகளில் இருந்துகொண்டு பொது வாழ்விலும், சேவையிலும் ஈடுபடுவதென்பது மிகக் கடினமான ஒரு செயற்பாடாகும். அதிலும் சஞ்சிகை வெளியீடு செய்வது என்பது மிக மிகக் கடினமான ஒரு காரியமாகும். இவ்வாறான ஒரு கடினமான காரியத்தில், திரு. வை. சிவராசா அவர்கள், தொடர்ந்து பன்னிரண்டு வருடங்களாக ஈடுபட்டு, சிறந்த முறையில் செயற்பட்டு மண் சஞ்சிகையின் நூறாவது மலரை வெளிக்கொண்டு வருகின்றார் என்றால், அது அவரது கடின உழைப்பையும், தொடர் விடாமுயற்சியையும் காட்டுவதோடு, அவர் ஒரு செயல் வீரன் என்பதையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

திருவாளர் சிவராசா அவர்கள் பல்வேறு சமூக சேவைகளைச் செய்து வருபவர். அவர் மிக்க மனிதநேயம் உள்ளவர். மக்களை நேசிப்பவர். மண்ணை மதிப்பவர். இதனால், மக்கள் வாழும் மண்ணையும், மண்ணில் இருக்கும் மக்களையும் மதித்துப் போற்றி வாழ்பவர். அதனால் தாயக மண்ணில் இருக்கும் மக்களுக்கான சேவையை முதன்மையானதாகக் கொண்டு செயற்படுவதை யாவரும் நன்கு அறிவீர்கள். தாயகத்தில் இருக்கும் நம்மவர்களை நினைவு கொண்டு, மண் சஞ்சிகை மூலம் பணம் சேகரித்து, அவர்களின் துயர் துடைக்கும் தன்மையைத் தமிழ் மக்கள் யாவரும் போற்றிப் பாராட்டுதல் கடமையும், உரிமையுமாகும்.

மண் சஞ்சிகை மூலம் ஈழத்துச் செய்திகளையும், அரசியல் நடவடிக்கைகளையும் அறியத்தருவதோடு, புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் தமிழ்ப் பிள்ளைகளின் தமிழறிவு வளர்ச்சிக்கான நடவடிக்கைகளிலும் செயற்பட்டு வரும் தன்மை பாராட்டுக்குரியதாகும். மேலும் புலம்பெயர் எழுத்தாளர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பதிலும் பங்கு பெறுதலும் போற்றுதலுக்குரியதாகும்.

www.padippakam.com

Deutsches Rotes Kreuz
Tamilische Bibliothek
Johnes Joseph
August-Bebel-Str 8
33602 Bielefeld
Tel.0521-52998-31
Fax.0521-52998-52
Datum:19.05.2003

தமிழ் நூல் நிலையம்

"Mann" (ERDE) Tamilische Magazin
" மண் " சஞ்சிகை
Herr V.Sivarajah
Angertaler Str.98
47249 Duisburg

அன்புடையீர்,

தங்களது மண் சஞ்சிகை பத்து இதழாக சிறப்பு மலராக மலர்வதையிட்டு செஞ்சிலுவைச்சங்க தமிழ் நூல்நிலையம் சார்பாக பீலெபெல்ட் தமிழ் மக்கள் சார்பாக எமது வாழ்த்துக்களை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தத்தித் தவழ்ந்த காலமதைக் கடந்து வந்து ஆண்டு பதின்மூன்றானதுவோ. தன் குழந்தை வளர்ச்சி கண்டு தாயவள் பெருமகிழ்ச்சி அடைவதுண்டு. மண் என்னும் இம்மலரும் தன் இதழ் விரித்து நூறாகியதைக் கண்டு,மனமுவந்து நாம் வாழ்த்த.

நம் இனத்திற்கு நல்லுரை கூறிய இருமாதத்திற்கு ஒருமுறை கதை கவிதை கட்டுரை என சிறுவர் தொட்டு பெரியோர்வரை அவர் நெஞ்சம் தொட்டு நல் இதழ் எனவும்.

தாயகத்தில் அல்லலுறும் நம்மவர் நலம் காண நீர் செய்த உதவிகள் நான் மறந்திடுவேனா நன்றி கூறும் நம்மவர் உள்ளது.

மண்ணே உன்னைக் கையிலெடுக்கையில் எம்மண்ணின் நினைவுகளை கண்ணில் கொண்டு வருகிறாய், மனம் விட்டு சொல்லுகிறேன். தமிழீழ மண்ணில் சுதந்திரக்காற்றாய் வீசி இன்று விதையாக நீரும் எம் கனவுகள் நனவாகி விருட்சமாகும் காலம் வெகு தொலைவிலில்லை மண்ணே நீர் வாழ்க,வளர்க பல நூற்றாண்டுகள்

நட்புடன்
செஞ்சிலுவைச்சங்கத் தமிழ் ஆலோசகர்
தமிழ் நூல்நிலைய இயக்குனர் பீலெபெல்ட்

ஜோ-ஜோசப்

Tamilische Bibliothek

வங்கித்தொடர்புகட்கு

Telefon:0521-5299831

Bankverbindung(வங்கித்தொடர்பு)
Tamilische Bibliothek
Deutsche Rotes Kreuz

0521-52998-0

Sparkasse Bielefeld (வங்கி)
August -Bebel-Str. 8
33609 Bielefeld

Konto-Nr.:107813 (வங்கி இலக்கம்)

0521-5299852-62(Telefax)



உலகெங்கும் தமிழ் மொழி ஓங்குக. வாழ்க தமிழ் வளர்க தமிழ்.

படிப்பகம்

www.padippakam.com


ஈழம் பத்திரிகை
ஈழம் கலையகம்
'தமிழ் அமுதம்'
ஏ.பி.சி தமிழ்ஒலி வானொலி
Postfach 2449
58474 Ludenscheld / Germany
tel & fax : 0049-2351 /860156

# வெற்றித்தமிழ்ப்பணி மண் வாழ்க!

காலவெள்ளத்தில் கரைந்து போகின்ற செயல்பாடல்ல மண்ணின் சேவை. காலத்தை வென்று. காலனை வென்றதமிழ்ச்சேவைதான் மண்ணின் இந்த புனிதப்பணி என்றால் மிகையாகச் சொல்லாகும்.

பணத்தினை குறியாகக் கொண்டு வாழும் புலம் பெயர் மக்களுக்கு மத்தியிலும்மனிதநேயம் கொண்டவர்களும் இருப்பது தமிழ்உலகம் இன்றும் செழுமையுடன் புலம்பெயர்வுகளுக்கிடையிலும் வெற்றி நடைபோட்டு தமிழ் வளர்ந்துக் கொண்டு இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. என்றால் அதற்கு காரணம் மண் ஆசிரியர் போன்ற சமூதாய பொறுப்புள்ளவர்கள் இருப்பதால் ஆகும்.

மண் சஞ்சிகை நூறாவது இதழை தொடுவது புலம்பெயர் இலக்கியத்திற்கு கிடைத்த மாபெரும்வெற்றியாகும். இப்பெருமகனின் தமிழ்ப்பணி தொடரவும். *மண் ஆசிரியர் சிவராசாவை* வாழ்த்துகின்றேன்.

**நன்று நன்றி.!**

தமிழன்புடன்
என்றும் உண்மையுள்ள

---

ஈழம் தமிழ் அமுதம் , பிரதம ஆசிரியர்
25.6.2003


படிப்பகம்

www.padippakam.com

கலை, இலக்கியம், மொழி,சிறுவர் கல்வி,வாசிப்பு வளர்ச்சிக்காய், மண் இல்லை எனில் மொழியில்லை, இனமில்லை,மனிதமுமில்லை என்ற பொருளடங்க மண் மீட்புப் போர் காலகட்டத்தில் மண் என்ற மகத்தான சஞ்சிகையினை ஆரம்பித்து,பொருளாதார சமூகப்பிரச்சனைகளுக்கு மத்தியில் எதிர் நீச்சல் போட்டு வளர்த்ததோடு நில்லாமல் ,எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் தாயக மண்ணில் விடுதலைப் போரின் அனர்த்தங்களால் பாதிப்புற்ற எம் உறவுகளை காத்து நிற்கும் பாதுகாப்பு இல்லங்களுக்கும்,புனர்வாழ்வு அமைப்புக்களுக்கும் பணம் சேர்த்து அனுப்பும் புனித பணியை செய்து, எழுத்துலகத்திற்கு ஓர் மாறுபட்ட விழிப்பான பாதையினை திறந்துகாட்டி, எமது தாயக விடுதலைப் பணியில் தன் பாணியில் சிறந்த பணியினை செய்து உயர்ந்து நிற்கும் மண்ணே!

***மன்னவனே உன் பணி தொடர கரங்களைப் பற்றி நிற்கின்றோம்.***

மண்ணே! இத்தோடு நீ வெளியிடும் மலரோ - நூறு
என்னே ! இன்னும் மாறவில்லை உன் - வீறு
மலர்ந்தன புலத்தில் சஞ்சிகைகள் பல - நூறு
ஏற்பில்லா கருத்துக்கள் தாறு - மாறு
அதனால் ஆகியது சுக்கு - நூறு
துணிந்து நீ எழுது தரமான - சாறு
தொடரட்டும் பணி-புகழ் ஏணியில் - ஏறு
உன் சேவைக்கு இல்லை கை - மாறு
என்ன குறையுனக்கு தயங்காமல் - கூறு
கரங்களைப் பற்றி நிற்போம் அது - வேறு
வாழ்த்துக்கள் மீண்டும் பல - நூறு..நூறு...

ருயூ ஸ்பேர்க்
தமிழர் விளையாட்டுக்
கழகத்தினர்

இந்தியா மீது படையெடுக்கும் முன் அரிஸ்டாடில் என்ற தத்துவ அறிஞரை அலெக் சாண்டர் சந்தித்தார். நான் இந்தியா மீது படையெடுக்கப் போகிறேன். அங்கிருந்து உங்களுக்கு என்ன கொண்டுவர வேணும் என்று அலெக் சாண்டர் கேட்டார். அதற்கு அரிஸ்டாடில் சொன்னார் ஒன்றும் வேண்டாம் புனிதமான கங்கை தண்ணீர் மட்டும் கொண்டுவா என.


படிப்பகம்

01.07.2003



# தமிழர் விளையாட்டுக் கழகம்

## டுயூஸ்பேர்க்-ஜேர்மனி

புலம் பெயர் மண்ணில் தமிழ்க்கலை, இலக்கிய ,சிறுவர், அறிவியல்,மனிதநேய மரமாக வேரூன்றி இன்று தனது 100 வது மலரினைப் பூரிப்புடன் பூத்து, சிரித்து மணம்வீசி நிற்கும் மண் சஞ்சிகையே உன்னைப் பார்க்கும்போது புலம் பெயர் மண்ணுடன் உன்னைப்பெற்ற மண்ணும் பிரமிப்புடன் பூரிப் டைந்து நிற்கின்றது.உன்னைப் பனிகொட்டும் மண்ணில் நட்டு,உன்மேல் குளிர் படாமல்,பனிவிழாமல் கண்படாமல் காத்து நிற்கும் காவற்காரன்,ஆசிரியர், வைரம் முத்து சிவராசா அவர்களுக்கும், இன்றும் இனி என்றும் துணை நிற்கும் ஆசிரியர் திரு.ப.சவுந்தரராஜா அவர்களுக்கும் மனமுவர்ந்த வாழ்த்துக் களுடன்,பாராட்டுக்களையும் டுயூஸ்பேர்க் வாழ் தமிழ் மக்கள் சார்பில் எமது விளையாட்டுக் கழகம் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கின்றது.

இன்று ஜேர்மனியில் நூற்றுக் கணக்கான தமிழ் பாடசாலைகளும்,விளையாட்டுக் கழகங்களும்மலிந்து விளங்கினாலும், இற்றைக்கு 17,18 வருடங்களின் முன்பு புலம் பெயர்ந்து நாம் அகதிகளாகிஎமது தனித்துவத்தை இழந்து நின்ற ஆரம்பகாலத்தில் ,எதிர்காலத்தில் எம் குழந்தைகள் தாய் மொழியிலிருந்து தனித்துவிடக் கூடாது என்ற தீர்க்க தரிசனத்துடன் டுயூஸ்பேர்க் நகரில் தமிழ் பாடசாலையினையும்,தமிழர் விளையாட்டுக் கழகத்தினையும் ஆரம்பித்து போட்டிகளை நடாத்தி வீட்டிற்குள் முடங்கிக் கிடந்த சிறுவர்களும்,இளைஞர்களும் தளத்திற்கு வர முன்னின்று உழைத்தவர்களில் திரு.சிவராசாவினதும், மண் சஞ்சிகையினதும் அளப்பரிய கடமையை டுயூஸ்பேர்க் மக்கள் இன்றும் நெஞ்சில் நினைவில் கொள்வர்.

## அவலம் தீர்க்கும் மண் மலரே.....

தேன் சொரியும்
வண்ண மலர்களைத்தேடி
அழகழகான பட்சிகளும்
ரீங்காரமிடும் வண்டினங்களும்
சிறகடித்துப் பறந்து வருவதுண்டு
.......ஆனால்

சிறகொடிந்து கூடிழந்து
காலுடைந்து கையுடைந்து
வாழ்விழந்து தவித்து நிற்கும்
எம்மின அவலம் தீர

கறையான் மண்ணெடுப்பது போல்
தேன்சுமந்து சொரிந்துவர
சுழன்று சுழன்று பறக்கின்றதே
அமைதி மலரொன்று
சிரித்த இதழொன்று -அதுதான்
மண் என்ற கற்பக மலர் -அதுவேதான்
மண் என்ற மாறுபட்ட மலர்

மனிதன் என்றால் அவன்
மண்ணைப்போல் இருக்க
வேண்டும் என்பர் -இங்கே
மண்ணும் Man ம் (Mann)
ஒருருவாய் வலம் வருகின்றதே !

வாழ்த்துக்களுடன்
இ.ஸ்ரீஸ்கந்தராஜா(Duisburg)

சீனாவிலேயே முதன் முதலாக ஒரு லட்சத்து 30 ஆயிரம் பக்கங்கள் கொண்ட புத்தகம் 972ம் ஆண்டு அச்சடிக்கப்பட்டது.

மக்ஸ் பிளங் நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய பௌதிகவியலாளர்.



படிப்பகம்

www.padippakam.com



## நூறாவது இதழ் விழா காணும் மண் மலரே!

புலம் பெயர் நாடதனில் புகழுடன் பூத்த மண்மலரே!
நிலமதன் பெருமையை நிலைநாட்டும் செல்விதழே!
நூறாவது இதழாக நூலறிவு கண்ட மலரே!
சீராக சிறப்பாக வளர்ந்த மண் மலரே!
பேரும் புகழும் பெருமையும் பெற்ற இதழே!
நாடும் நாமும் போற்ற வளர்ந்தாயே!
போரின் அவலத்தையும் வேரின் வெதும்பலையும்
சீராக காட்டி சிறப்பு பெற்றாயே!
ஏழ்மையாய் வாழ்ந்த தாயகத்து உறவுகளை
ஏற்றமுடன் அரவணைத்து உதவினாயே
அன்னைத் தமிழை அன்னிய நாட்டிலும்
அள்ளிப் பருக சிறார்களுக்கு இடமளித்தாயே!
எழுத்தாளர் பலரை இனம் காண வைத்தாய்
எழுத்தாலே மண்ணிற்கு பெருமையும் சேர்த்தாய்
13 வருட சிவராசாவின் சிறப்பு அறுவடை
உறுதியுடன் உழைத்த உன்னத உழைப்பு
இயந்திர வாழ்விலும் இடர்களையும் சந்தித்தும்
தொடர்களால் வெளிவந்த செவ்விதழ்
100வது இதழாக நூற்றாண்டு காணும் வேளை
அக மகிழ்ந்து வாழ்த்துகின்றேன் உன்னை
மண் பல அகவையில் காலடி வைத்து
மக்கள் போற்றும் நல்லேடாய்
காலமெல்லாம் வாழ வாழ்த்துகின்றேன்.

நகுலா சிவநாதன்
குடும்பத்தினர்

### ஓம் முருகா

ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்க ஆதரவில்
விழி நூல் வெளியீட்டு விழாவும் கலைவிழாவும்
உணர்வின் விழிப்பு
கலைகளின் வெளிப்பு

செல்வி.வாசுகி குணராஜா அவர்களின்

விழி கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவும் கலைவிழாவும் நடைபெறவுள்ளது. இது புலம்பெயர் தேசத்தின் வெளிக்கொணர்வு.இந் நிகழ்வில் தாங்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் -19.07.2003 சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு.

இடம்: INTERNATIONAL ZENTRUM
NIEDER Str.5
47051 DUISBURG

படிப்பகம்

www.padippakam.com

அன்பின் „மண்" சஞ்சிகை ஆசிரியர்க்கு!

உங்கள் „மண்" சஞ்சிகையின் நூறாவது நிறைவு இதனையொட்டி மனம் தன்னிறைவு கொள்வதோடு உளம் பூரிக்க, தமிழ்நாத வானொலி சார்பாகவும், கனோவர் வாழ்மக்கள் சார்பாகவும், எமது குடும்பத்தார் சார்பாகவும் வாழ்க, வளர்க என வாழ்த்தி நிற்கின்றோம்.

## "மண்" என்னும் அன்னைக்கு தமிழ்நாதம் தரும் வாழ்த்துப்பா

மண்ணே! என் கண்ணே! இனிய பெண்ணே!
உன் இதழ்நூறா உண்மையா! அது இன்று
என்றோர் வளர்ச்சியிது! என் அன்புக்கண்ணவளே
என் அன்னையாய் நானினைத்து தந்திடும் வாழ்த்து இது!
அன்னையர் தினத்திற்கு தமிழ்நாத மகள் தரும் வாழ்த்து இது!

தாய்மண்ணைப் பிரிந்ததற்கு உறவுப்பாலம் நீ
தாய்மண்ணில் உள்ளவர்க்கு இன்னல்கள் துடைப்பவள்
வாய்வழியே வார்த்தையில்லை உன் மகத்தான சேவைகட்கு
சேயாக நானிருந்து மனதார வாழ்த்துகின்றேன்!

இரண்டுமாதமொருமுறை மலர்ந்து நீ மணம் பரப்பிட
இருண்ட எம் நெஞ்சங்களில் ஒளியாக நீ வந்தாய்
கலை, கலாச்சார பண்போடு சிறுகதை வடிவோடு
கலைஞர்களின் படைப்புகளை கனிவுடனே தாங்கிடுவாய்!

கவிஞர்களின் கவிதையும், சிறுவர் பக்கமுமாய்
புவிதனில் எழுத்தாளர்களை, வருடியே வலம்வருவாய்
தமிழ்மொழி வளர்ச்சிக்காய் தளராது பாடுபட்டாய்
தமிழ்நாதம் வளர்வதற்கும் உற்றதுணை நீ புரிந்தாய்!

புலத்திலுள்ள உன் வளர்ச்சி நிலம்வரை கண்டேனம்மா
நிலத்திலுள்ள உறவுகளும் உன்தனை வாழ்த்துதம்மா
அங்கு அன்னை தந்தை அற்றவர்க்கு அன்னை, தந்தை நீயம்மா
தங்குதடை ஏதுமின்றி தரணியிலே வலம் வருவாய்!

வளமுடன் நீ மலர்ந்து உனை பெற்ற ஆசானின் புகழ்காத்து
உலகில் தமிழ் உள்ளவரை நூறாண்டு வாழ்ந்திடவே
தமிழ்நாதம் சார்பாக உளமார வாழ்த்துகிறேன்!
நன்றியுடன்....

ராஜேஸ்வரி லோகநாதன்
தமிழ் நாதம் வானொலி - Hannover


படிப்பகம்

www.padippakam.com


# வெற்றியுடன் வாழ்க! வாழ்க!!

ஆற்றுப் புறத்துச் செழிப்புடன்
ஆழமாக வேரூன்றி
ஈற்றே இல்லா மலர்வெனவே
இன்றுவரை வெளிவந்து
ஊற்று நீராய் தெளிவுடனே
உண்மைகளை உரைத்திடும்
மண்

ஏற்றம் கொண்ட வளர்ச்சியாய்
எழுத்தில் எண்ணம் வடித்து
சோற்றுக்கின்றி வாடுவோருக்கு
சொந்தங்களாகிச் சுமைதாங்கி
காற்றிலும் கடிதாய் கைகொடுத்து
கலங்கிடுவோரைக் காப்பாற்றிடும்
மண்

சேற்றிடை நாற்று நட்டு
செந்நெல் விளைவிக்கும்
பேற்றுடை உழவர் உழும்
போற்றுதற்குரிய நம் மண்ணை
மாற்றிடாது என்றும் முகப்பிலிட்டு
தோற்றிடாப் புகழ் படைத்திடும்
மண்

மாற்றுக் கருத்துக்களையும்
மறுப்பின்றிப் பிரசுரித்து
வேற்று மொழி ஆக்கங்களை
வெகுமதியாய் எமக்களித்து
ஆற்றிய பணியால் உயரத்தில்
வீற்றிருக்கும் வெகுமதி
மண்

ஆதிக்க சக்திகளின்
ஆக்கிரமிப்புகளால்
பாதிப்படைந்து பரிதவித்து
நாதிகளற்று நடுக்கடலில்
தத்தளித்த
ஆதரவற்றோருக்கு
சோதரராகி, சோர்வு நீக்கிட
சோதனைகளைக் கடந்து
நீதிவழி நின்று
நிதிபெற்று வழங்கி
சாதனை படைத்திடும்
மண்

ஆளுமையுடனான
அழுத்தமான எழுத்து
ஈழவர் சந்ததி
இழந்திடாவகை–மொழி
ஊழியம் செய்யும் சிறப்பு
தொழில் என்று கொள்ளாது
தொண்டென்று செய்து
தோழமையுடனே
தோள் கொடுக்கும்
மண்

சாற்றுகின்ற சங்கதிகளில்
சாற்றினை ஒத்த உயர்ச்சி
கூற்றுவனையும் அஞ்சவைக்கும்
கூற்றுக்களில் நேர்மைத்திறன்
ஏற்றுக் கொண்ட பணியில்
ஏற்றிய தீபமாய் ஒளிவீசும்
மண்

பொன்னிதழ் கண்டு
பெருமிதம் கொள்கிறோம்
பன்நெடுங்காலம் மலர்ந்து
பாரினில் தொண்டு செய்து
இன்னல்களைக் கடந்து
ஈகையுடன் வாழ்க! வாழ்க!!

தன்னலமில்லாத் தகவுடனே
தாரணியில் தலைநிமிர்ந்து
இளைய தமிழருக்காய்
இனிய தமிழ் படைத்து
வெள்ளம்வரை வெளிவந்து
வெற்றியுடன் வாழ்க! வாழ்க!

மேழிக்குமரன்

படிப்பகம்

# மனதோடு நிற்கும் மணி

கவியோடு கலந்த நெஞ்சங்கள்

மண்ணின் சேவையும் மகத்தான செயலும்
கண்ணின் மணியாய் கருத்திடை நின்று
புலம்பெயர் தமிழர்க்கோர் களமாய் என்றும்
இனிய நல் உறவுகளுக்கு செய்யும் பணியும்
இயம்பிட வார்த்தையேது
ஊனமுற்றோர்க்கு உதவி செய்யும்
உனது மனம் உயர்வுக்கு உரியதாம்
கலைகளை வளர்த்திங்கு காவியமாய் நீயும்
நூறாவது இதழ் விரித்து நுண்ணூர்வாம்
மகிழ்வு தந்து புகழும் கொண்டாய்
புலம்பெயர் தமிழர்தம் வாழ்விநிலே
நல்லசேதி சொன்னாய் நயமாய்
நியாயம் நீதி தவறாத நெறியும்
நீ சுமந்து வரும் செய்திகளும்
இருமாத இதழாய் பரிவோடு
எம் இல்லம் நோக்கியே உரிமையாய்
வரும் இன்ப சுகமே தனியாய்
உந்தன் சேவை சொல்லிட இத்ழ்களும்
போதாமை கொண்டு நிறைவான மனங்கொண்டு
வாழ்த்தி உன்னை நாளும் பணிசெய்கவென்று
நூற்றாண்டு காணவென
பல்லாண்டு பல்லண்டு வாழ வாழ்த்துகிறேன்

வாழ்த்துவது
சுகந்தினி. சுதர்சன்
கேர்கைம் ரெக் யேர்மனி

- புத்தகங்கள் நமது மனத்தோடு பேசுகின்றன, நண்பர்கள் நமது இதயத்தோடு பேசுகின்றனர்.
- அன்னையின் இதயம் என்றும் வாடாமலர்.
- பரிசுத்தமான இதயத்தைப் பெற்றிருப்பதை மனிதனின் முதல் தகுதி.


படிப்பகம்

அழைக்கும்போது ஒரு ஒத்தடம் தந்த சுகம் கண்டேன். நதிஷ் என்னை விட்டுப்பிரிந்த நாளன்றும் துள்ளி ஓடிவந்து... „ஆன்டி... இதுக்கை கொஞ்சம் மண்போட்டு தருவீங்களா" என்று கேட்டு ஒரு பிளாஸ்டிக் டப்பாவை நீட்டினான். நாலே வயதான நதீசை அணைத்தபடி ஏன்? ஏதற்கு என்று கேட்டேன்... „என்ர ரீச்சருக்கு கொடுக்கப் போறன்..." என்று அவன் பதில் சொல்ல நான் புரியாமல் விழிபிதுங்கினேன். அவனோ படுசுட்டி... ஆன்டி நான் ஊருக்கு போறதாய் ரீச்சருக்கு சொல்லிவிட்டு வந்தேனில்லை. இதைக் கொண்டு போய்க் குடுத்திட்டா அவங்கள் சந்தோசப்படுவாங்கள் இது எங்கையும் காசு குடுத்து வாங்கமுடியாதில்லை... என்றான். இதைக் கேட்டபோது என் உடல் புல்லரித்தது. நாலுவயதுக்குழந்தையா இவன், இல்லவே இல்லை. ஐம்பது ஆண்டின் முன் எழுத்துலகில் நடைபோட்ட ஒருவரின் சொந்த மண்ணையல்லவா இன்று இவனும் கேட்டு நிற்கிறான். அள்ளிக்கொடுத்தேன் ஒரு பிடி என் அன்புப் பரிசாக அது லண்டனுக்கு பறந்து போனது.

*திருமதி சுந்தராம்பாள் பாலச்சந்திரன்*
Differten

## நன்மொழிகள் சில

- மனிதனின் கொடிய பகைவர்களுள் ஒன்று பசி.
- பல் இருந்தால் தவளையும் எம்மைக் கடிக்கும். இது இயற்கை.
- பொறுமை உடையவனிற்கே உலகம் சொந்தம்.
- மெளனம் எனும் மரத்தில் சாந்தம் எனும் கனி தொங்கும்.
- இரவு உணவைக் குறைத்தால் ஆயுள் நீடிக்கும்.
- ஏழை மனிதனிற்கும் இதயம் உண்டு.
- உண்பதை உழைப்பினால் நிரப்பிவிடமுடியும்.
- தாயின் இதயம் குழந்தையின் பள்ளிக்கூடம்.
- ஒழுக்கம் என்பது நெடுநாள் வழக்கம்.
- முதியவர்கள் இரண்டாவது தடவையும் குழந்தைகள்.

*திருமதி புஸ்பா அருமைத்துரை* - Wieslohe



படிப்பகம்

கண்ணுக்கு வேறுகறுப்புக் கண்ணாடி அலங்காரம். ரேகா இப்போது எங்கள் கிராமத்து கிளியேயல்ல. நாகரீகமோகத்தில் நடை, உடை, பாவனை எல்லாமே மாறியிருந்தது– நாலு வார்த்தை இங்கிலீசில் எடுத்துவிடத்தெரிந்து வைத்திருந்தாள். இதைப் பார்த்தவர்களில் சிலர்... மார்புக்கு மறைப்பு துணிபோடாதவளுக்கு மானம் இருக்குமோ... இல்லை மண் பற்றுத்தான் இருக்குமோ... சும்மா பணப்பவிசு காட்ட வந்திருக்கிறாள் என்கிறார்கள்.

பசிவந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். இப்போ பணம் வந்தால் பத்தும் கிடைக்கும் என்றுதான் சொல்ல தோன்றுகிறது. ரேகா பெரிய போடீஸ்வரிமாதிரி வந்து இறங்கினாள். பழசுகள் எதுவும் அவள் நினைவில் இல்லாதது போல நடந்கொண்டாள். நான் தான் வலிந்து வலிந்து அவளோடு பேச்சைத் தொடர்ந்தேன். அவளோ என்னை அலட்சியப்படுத்துவது போல மெல்ல மெல்ல விலகிப் பேசினாள். மச்சாள்... மச்சாள் என்று வாய்க்கு வாய் கூப்பிட்டவள், வரதா என்று வாய் கூசாமல் கூப்பிட்டபோதுதான் அவள் உறவு கொண்டாட துளியளவும் விரும்பாமல் தவித்ததைப் புரிந்தேன். சுதந்திரப்பறவைக ளாக வீடுவளவு, தோட்டம்துரவு, வயல்வரப்பு பட்டிதொட்டியெனப் பாடித்திரிந்த எமக்கிடையில் இப்படி ஒரு பெரிய மாறுதலைக் கண்டபோது மனம் அழுதது.

அன்று... ரேகாவுக்கு திருமணம் நிட்சயமானபோது என்னைவிட்டுப் போகப்போகிறாளே நான் தனித்து நிற்கப் போகிறேனே என்று துயரப்பட்டேன். அந்தத் துயரத்தை மறைத்து அவளோடு சிரித்துப் பேசி மகிழமுடியாமல் தவித்தேன். இருந்தாலும் அவள் எதிர் காலத்தை நினைத்தபோது மனதின் ஒரு பக்கம் சந்தோசத்தில் துள்ளி குதித்தது... ரேகா நீ குடுத்துவைத்தவள். லண்டன் மாப்பிள்ளை கிடைச்சிருக்கு இனியென்ன ராணிமதிரி இருப்பாயென்று வாழ்த்தி அனுப்பினேன்.

லண்டன் போனவளோடு மடல்மூலம் மனம்விட்டு பேசினேன் தான் கனவிலும் காணாத கற்பனையும் செய்யாத ஒரு இனிய வாழ்வு கிடைத்துள்ளதை தெரிவித்து மகிழ்ந்தாள். கணவனின் அன்புப் பிணைப்பில் வாழ்வில் வசந்தத்தைக் காண்கிறோம் என்று எழுதிய ரேகாவிடமிருந்து இடைவெளிவிட்டுவந்த மடல் ஆண்டு ஒன்று கழிய அடியோடு நின்றுபோனது. என் இதயச்சிறகு ஒவ்வொன்றாக ஒடிந்துவிழுந்தது. உலகம் சூனியமானது. அவளுக்கோ வாழ்வு இனிக் கிறது. அந்தத் தெவிட்டாத தேனில் மயங்கியே என்னை மறந்து போயிருக்கிறாள் எனச் சற்று ஒதுங்கியிருந்தேன். இதுவே நாலு ஆண்டுக்குமேல் தொடர்ந்து சென்றபின் கடந்த முறை வந்திருந்தாள். வந்தவள் என் பழைய ரேகாவாக இல்லாதிருந்ததால் என் காத்திருப்பும் கதைகளும் கானல்நீராய் காணாமல் போனது. அழுதேன். அமைதி தேடி அடிக்கடி அலைந்தேன். ஆறதல் தரு வதில் அவள் மகன் நதிஷ்மட்டும் என்னோடு நின்றான். ஆன்டி... ஆன்டி என்று



படிப்பகம்

மொறமொறவெண்டு கடிச்சு... விரலை வாய்க்கை வைச்சு, கடை வாயிலையும் கைவிரலிலையும் எச்சில் கரியாய் வழிய நிண்டது. உது நாளைக்கு லண்டனுக்குப் போய்க் கரிக்கு என்ன செய்யப்போகுது?" அக்காவின் கதையைக் கேட்ட மாமி வாய்விட்டுச் சிரித்தா. ஆனால் அக்கா மட்டும் சிரிக்காமல், „என்ன மாமி சிரிக்கிறியள்?... உண்மையைச் சொல்றன் உந்த முட்டைமா, பணியாரங்களோடை சேர்த்து கொஞ்சம் கரியுங் கட்டி வையுங்கள். அங்கை அரிசி, பருப்பு, சீரகம் மட்டுமில்லை திருவலை இடியப்ப உரல் எல்லாம் வாங்க லாமாம். இப்ப அம்மிகுளவியும் வேண்டலாமெண்டும் கதைக்கினம். ஆனால் இந்தக் கரியை மட்டும் எங்கடை ஆக்கள் இன்னும் ஏத்தி இறக்க நினைக்கேல்லைபோல..."அக்கா சொல்லச்சொல்ல செவிட்டு அலியன் மாதிரி நீண்ட ரேகா போனவருஷம் வந்துபோட்ட கூத்து.

...பிள்ளை வரப்போறாள்... அதுக்கிடையிலை இந்தக் கக்கூசைக் கட்டிமுடிச்சிடவேணும்." என்று மாமா குதித்து திரிந்தார். நல்லம்மா மாமியும் முள்ளுக்கு மேலை குந்தி இருக்கிறமாதிரி இருப்புக்கொள்ளா மல் அந்தரப்படு[illegible]தைப் பார்த்த செல்வியக்காவின் வாய்..., ஏன் மாமி இந்த நொச்சிப்பத்தை கிஞ்ஞாப்பத்தையளை மறந்திருப்பாளெண்டு நினைக்கிறியளோ... போனமாதம் லண்டனிலை இருந்து வந்த கந்தையாண்ணையின்ரை பெடியன் குட்டிக்கிளியன் இப்ப நல்லாய் மாறீட்டான். முந்தி வீட்டுக்கை கூட லோங்ஸ் போட்டுக்கொண்டு திரிஞ்சான். அண்டைக்கு, சாரத்தோடை சந்திக்கு வந்து மீன்வாங்கிக் கொண்டு போறான் எண்டால் பாருங்கோவன்... அக்காதான் கதைசொல்லிக் கொண்டிருந்தாளே தவிர மாமி எதையும் காதில் வேண்டிக்கொள்ளவேயில்லையென்பதை நானுணர்ந்தேன். எனக்கு மாமியைப் பற்றி நல்லாகவே தெரியும். போனவருசம் மூத்தவன் ரகுவின் கலியாணத்திற்கென்று இந்தியா போய் வந்தபோது கால் சங்கிலி போட்டுவந்தா... ஐயோ இதென்ன நல்லம்மா... கால்சங்கிலி கட்டித்திரியிறா. கலிகாலம் பேரப்பிள்ளையைக் கண்டாப் பிறகும் இதென்ன பரிசுகேடு... என்று கதைக்காத சனமே ஊரில் இல்லை யென்று சொல்லலாம். இவவின்பிள்ளைதானே ரேகா. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்று சும்மாவா சொன்னார்கள்.

...போனவருசம் ரேகா வந்தபோது அதையே கண்டேன். நீட்டி இழுத்துப் பின்னிவிடும் அவளது சுருட்டை முடி தோள்பட்டையோடு பரட்டையாகப் பறந்துகொண்டிருந்தது. குதி உயர்ந்த செருப்போடு அவள் கெந்தி கெந்தி வந்ததைப் பார்த்தபோது முள்மிதியடியிலா நடக்கிறாள் என்ற அச்சம் எனக்குள் ஏற்பட்டது. கட்டை வைத்துக் காலை உயர்த்தியது போல இருந்த அந்தப் பாழாய்ப்போன செருப்பு தான் அவளது அழகான நடையைப் பாழ்படுத்தியிருந்தது. பக்கத்து வீட்டுப் பத்மா மாமியிடம் பல்லுக்காட்டி வாய் சிவக்க வெத்திலை போட்ட காலம் மலையேறி பழுத்துச் சிவந்த கொவ்வையாக அவள் உதடுகள் பளபளத்திருந்தது. வெயில் தாங்கமுடியவில்லையென்று

**„மண்" சஞ்சிகையின் 100வது சிறப்பு இதழ்**
**2003) வாசகர் சிறுகதைப்போட்டியில் 1வது பரிசு பெற்றது.**

## „சொந்தமண்"

காலைவெள்ளம் எத்தனை வேகமாக அடித்துப் பாய்ந்து ஓடிக்கழிந்து போகிறது. அதற்குள் நடந்துமடிந்தவை தான் எத்தனை... எத்தனை. கடந்த ஆண்டு இதே மாதம் நடந்தது எல்லாமே நேற்றுத்தான் நடந்ததுபோல் இன்னும் என் நெஞ்சத்தில் தகித்துக்கொண்டிருக்கின்றது. அதற்கிடையில் மீண்டும் அவள் வருகிறாள்...

மீண்டும் விடுமுறையைக் கழிக்க ஊருக்கு வருகிறாளாம் என்பதைக் கேட்ட போது என் காதில் ஈயம் காய்ச்சி வார்த்ததுபோல் இருந்தது. அளவிடமுடியாத வெறுப்பும் ஆத்திரமும் கூடவே வந்தது. சொந்த மண்ணில் கால்வைக்க முடியவில்லையே என்று எத்தனையோ உறவுகள் அந்நிய தேசங்களில் தவித்துக்கொண்டிருக்க இவள் மட்டும் வருஷம் தவறாமல் வந்து எங்களுயிரை பிடிங்கியெறிந்து மகிழ்கிறாளே. இந்த மண்ணில் பிறந்ததைத் தவிர வேறு எந்த ஒட்டுறவும் இல்லாத இவள், ஏனிங்கு வரவேண்டும்? என் நெஞ்சு பொருமி வெடித்தது, போன வருஷமும் இதே வசந்தகாலத்தில் வந்து அவள் போட்ட ஆட்டம்... அப்பப்பா... அவள் வரவை ஒட்டி நடந்தேறிய விடையங்கள் எல்லாம் பெரிய தடல்புடல். இவற்றையெல்லாம் மனசு இன்னும் ஒவ்வொன்றாக ஆசை போட்டுப்பார்த்து அழுகிறது.

ஐந்தாறு வருடத்துக்கு முன் ரேகா லண்டனுக்குப் போக வெளிக்கிட்டது எங்களுக்கு மட்டில்லாத மகிழ்ச்சி. ஆனால் மாமி மட்டும் அடிக்கடி அழுது, சோர்ந்து, துவண்டுபோய் பிள்ளையை கண்காணத தேசத்திற்கு அனுப்பிப்போட்டு எப்படி நான் உலாவித் திரியப்போறனோ என்று கலங்கினா. அதைப் பார்த்து பல தடவை நானும் அழுதிருக்கிறேன். ஆனால் என் அக்கா செல்வி மட்டும் அழவேயில்லை. அவளுக்கு யாரும் அழுதாலும் பிடிக்காது. அப்படி இப்படி என்று எதுவெல்லாமோ செய்து அழுபவர்களை ஆறதல்படுத்துவதில் வலு கெட்டிக்காரி. மாமியின் கவலையைப் போக்க எப்போதும் போலவே கலகலத்து... „உவள் ரேகாவை நினைச்சு நீங்கள் ஏன் மாமி அழுகிறியள். அவன் பெடியன் இவளைக் கட்டி என்ன செய்யப் போறான் எண்டெல்லோ என்ர மனுசன் அழுகிறார்... நாளைக்கு லண்டனுக்குப் போகப்போற பொம்பிளையை அங்கை பார்... எண்டு காலமை விடியவே தொடங்கீட்டார். மாமி உந்தச்சனியன் என்ன செய்தவள் தெரியுமே?... கோழியள் கிளறிவிட்ட அந்த சாம்பல்மேட்டை தானும் கிளறி ஒரு துண்டு கரியையெடுத்து வாயிலை போட்டு



படிப்பகம்

www.padippakam.com



மழுங்கடித்து மக்களிடம் அதிக செல்வாக்குப் பெற்றுள்ளன. எனவே தான் ஊடகங்கள் எனும்போது இவை பற்றியே இக்கட்டுரையில் பெரும்பகுதி அலசப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு சிறுவட்டத்தினருடன் தான் பத்திரிகை, சஞ்சிகைகள் இன்று உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களைவிரல்விட்டு எண்ணினால் பெரும்பாலும் எழுத்தாளர்களே அதன் வாசகர்களாக இருக்கிறார்கள் என்றே உண்மையையும் கசப்புடன் ஏற்கத்தான் வேண்டும்.

இறுதியாக வெளிநாட்டவரும் தமிழ்க்கலாசாரங்களையும், கலைகளையும், விழுமியங்களையும் அறிந்து கொள்ளச் செய்வதில் இந்த ஊடகங்களின் பங்கு முக்கியமானது. "தமிழ் மெல்லச் சாகும்" என்ற அபாயத்தினின்றும் தமிழைக் காத்துக்கொண்ட பெருமை இந்த ஊடகவியலாளர், ஸ்தாபகர்கள், உரிமையாளர்கள், அறிஞர்கள், தமிழார்வலர்கள், (கல்விநிலையங்கள்) அனைவரையுமே சாரும் என்பதில் ஐயமில்லை.

ஆக்கம்

வேலணை வீணா

# உங்களுக்கும் தெரியுமா ?

1. அதிக மனித இரத்தத்தை ஏற்றுமதி செய்யும் நாடு ? தென் ஆபிரிக்கா
2. அதிகமாக சிகரெட் குடிப்பழக்கமுடைய நாடு ? பங்களாதேஷ்
3. அதிகமாக கொலைகள் நடக்கும் நாடு ? பிரேசில்
4. அதிகமாக தேங்காய் உற்பத்தி செய்யும் நாடு ? பிலிப்பைன்ஸ்
5. உலகிலே அதிக கள்ளக்கடத்தல் செய்யும் நாடு ? கொலம்பியா.
6. உலகிலே கால் சடை உற்பத்திக்கு பெயர் போன நாடு ? இந்தியா.
7. உலகின் மிகப்பெரிய தங்கு விடுதி (Hotel) உள்ள இடம் ? தாய்லாந்து கோட்டேல்.
8. உலகில் பெண்களுக்கு வாக்குரிமைகொடுத்த நாடு ? நியூ சிலாந்து
9. உலகில் ஒவ்வொரு வருடமும் தேர்தல் நடக்கும் நாடு ? சுவீஸ்லாந்து
10. உலகிலே அதிகமாக மொரிசா ஓவியம் இருக்கும் நாடு ? பிரான்ஸ்
11. உலகிலே தொலைத்தொடர்பு இல்லாத நாடு ? பூட்டான்.
12. உலகிலே சுதந்திரம் பெறாத நாடு ? இங்கிலாந்து.
13. உலகிலே பெண் அரசியல் வாதிகள் (எம். பிக்கள்) உள்ளநாடு ? சுவீடன்
14. உலகிலே அதிக வானொலி நிலையம் உள்ள நாடு. ? ஐக்கிய அமெரிக்கா.

திருமதி .ஜெயா நடேசன் Havixbeck (யேர்மனி)



படிப்பகம்

ஊடகங்கள் இயங்க வேண்டுமாயின் நிகழ்ச்சிகளுக்கு ஒவ்வொரு ஊடகங்களும் எங்கே போவது? எனவே ஆரோக்கியமற்ற நிகழ்ச்சிகளும் நேயர்களை வந்தடைந்து வெறுப்பைப் பெறுவதும் உண்டு. இந்தப் போட்டா போட்டிக்கு முன்னே சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் ஓரங்கட்டப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடியும்.

ஊடகங்களின் பெருக்கத்தால் வாசகர், நேயர்களிடையே போட்டிகளையும் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளையும் ஏற்படுத்தியும் வருவது கண்கூடு. ஒரு வானொலி, ஒரு தொலைக்காட்சி இருந்தால் தரமான நிகழ்ச்சிகளுடன் இயங்க வாய்ப்பு உண்டு என்பது தெரிகிறதல்லவா?

அடுத்து முன்னணியில் நிற்கும் ஊடகங்களிலே எம்மவரின் ஆக்கங்கள் மிகக்குறைவாகவே உள்ளன. பெரும்பாலானவை இந்தியக் கலைஞர்களை. அறிஞர்களையும், இந்திய மண்வாசனையையும் சினிமாவையும் காட்சிப்படுத்துவதில் எமது ஊடகங்கள் முன்நிற்கின்றன. இது ஒரு வகையில் இந்தியத் தமிழரின் திறமைகளை ஊக்குவிப்பதாகவும் வளர்ப்பதாகவும் இருக்கின்றன. எமது தாயகக் கலைஞரின் பேட்டிகள், அறிமுகங்கள், சிந்தனைகள் மிக மிகக் குறைவே. இத்தன்மை எம்மினத்து ஆற்றலைக் குறைப்பதாகவே உள்ளது.

இன்னும் உன்னிப்பாக நோக்கினால் இந்த ஊடகங்கள் அதாவது வானொலிகள், தொலைக்காட்சிகள் ஒவ்வொன்றுக்கும் ஒலி, ஒளி, கணனி, கலையகம், ஊழியர் வருமானம் என்று எத்தனையாயிரம் ஒய்ரோ (நுரசழ) செலவாகின்றன? திறமைமிக்க தொழில்நுட்பவியலாளர் இவற்றுக்குள் முடங்கியுள்ளார்கள்? இவர்கள் தம் திறமைகளை வாழ்நாடங்களிலே நிறுவனங்களிலே பயன்படுத்தி அதிக ஊதியத்தைப் பெறலாமே, எவ்வளவு உபகரணங்கள்? அவற்றுக்கான மின்சாரம் எனப் பல வகையில் பணம் புலம் பெயர்நாட்டிலேயே எமது ஊடகங்களால் புதைக்கப்படுகின்றது? சிந்திப்பவர்கள் யார்?

பல தமிழ் ஊடகங்கள் (தொலைக்காட்சி, வானொலி) இயங்குவதில் ஓரளவு வயதானவர்கள் வாழ்விட மொழிகளில் அக்கறையின்றி நாளும் பொழுதும் தமிழ் நிகழ்ச்சிகளைப் பார்த்தும் கேட்டும் பொழுதைக் கழிக்கின்றனர். இதனால் வாழ்விடநாட்டு மொழியை ஓரளவாவது விளங்கிக் கொள்ளும் வாய்ப்பை இழந்தே விடுகின்றனர். விளங்காத மொழி என்றாலும் அடிக்கடி அடிக்கடி பார்க்க, கேட்க, அது பரிச்சயமாக வரும். இந்த நிலைமைகள் இப்போது பெரும்பாலான வரைப் பொறுத்தவரையில் மிகக்குறைவு என்றே சொல்லலாம்.

(சினிமா) திரைப்படப் பாடல்கள் கொண்ட ஒளிப்பேழை ஒலி நாடாக்கள் போன்றவற்றின் விற்பனையாளர்கள் வியாபாரவீழ்ச்சி அல்லது விலைச்சரிவை எதிர் நோக்கியுள்ளனர். இவர்களைப் பொறுத்தவரையில் இந்த ஊடகங்கள் நட்டத்தை ஏற்படுத்துகின்றன, எனக் கூறுகின்றனர். இன்னும் இந்த ஊடகங்களால் மற்றவர்களுடனான தொடர்பு, வேலைகள் தாமதம், சின்னத்திரையால் போட்டது போட்டபடி இருத்தல் என்ற குற்றச்சாட்டு வருகின்றது. மற்றும் தொடர்ந்து இருப்பதால் கண் உட்பட உடல் பாதிப்படைகின்றது. இவ்வாறாக ஊடகங்களின் வருகையால் தீமைகள் உண்டெனினும் நன்மையே மேலோங்கியுள்ளது.

தொலைக்காட்சி, வானொலியே ஊடகங்களின் முன்வரிசையில் நின்று சின்ன மீனைப் பெரிய மீன் விழுங்குவது போல, சஞ்சிகை, பத்திரிகைகளை விழுங்கி, அல்லது



படிப்பகம்

www.padippakam.com



நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு அம்சங்கள், சின்னத்திரை, திரைப்படங்கள் எனப் பலதரப்பட்ட அம்சங்கள் எம்மவர் மனங்களிலே பூமழையைப் பொழிகின்றன. இலைமறைகாய்களாக இங்கு வாழும் எழுத்தாளர்களுக்கு இவைகள் அமைத்துக் கொடுத்தன.

பல வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன இருப்பதால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிகழ்ச்சியைக் கேட்கவும், பார்க்கவும் முடிகின்றது. மாறி மாறி ஒவ்வொரு நிகழ்ச்சிகளை விரும்பியவாறு இரசித்துக் கொள்வதற்கு இந்த ஊடகங்கள் வழிசமைத்ததோடு, வாசகர்கள், நேயர்களையும் குழுவாகப் பிரித்துக் கொண்டன என்றும் கூறலாம். இந்த ஊடகங்களின் வரவு, வெளியிற் பலநேரப் பொழுதுகளைக் கழித்தோர் நாடகம், திரைப்படம், செய்திகள், தாயக நிகழ்வுகள் என்பனவற்றின் ஈர்ப்பினால் வீட்டுக்கு வந்து விடுகின்றனர். இது ஒரு நல்ல பழக்கத்துக்கு வழி அமைக்கிறது, சிறுவர்களுக்கு தமிழறிவு, அறிவூட்டும் நிகழ்ச்சிகள், போட்டி நிகழ்ச்சிகள், சமய நிகழ்ச்சிகள் என்பனவற்றால் எம்மவர் தனிமை என்ற உணர்வை மறந்து வாழக்கூடியதாயுள்ளது. மற்றும் தமிழைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தொலைக்காட்சியில் வரும் படங்கள் மூலம், காட்சிகள் மூலம், பெரும்பாலான பொருட்களை இனங்காண்பிக்க முடிகிறது. இங்கு பிறந்த சிறுவர்கள் அல்லது சிறுவயதில் வந்தவர்கள் தொலைக்காட்சியிலே தாயகக் காட்சிகளை, தற்போதுள்ள நிலைமைகளைப் பார்த்து தாய்நாட்டு அவலங்களைச் சிந்திக்க வைப்பதாக இந்த ஊடகங்கள் தொழிற்படுகின்றன.

புலம் பெயர்ந்து குடியேறியுள்ள வயோதிபப் பெற்றோர்களுக்கு ஒரு வலக்கரமாக இந்த ஊடகங்கள் அவர்களுடன் ஒன்றிவிட்டன. இந்த ஊடகங்கள் தமிழால் ஒன்றிணையும் தன்மையை ஏற்படுத்துகிறது. மேலும் இந்து ஊடகங்களின் ஊடாகப் பல நேயர்கள் நண்பர்களாகவும் குடும்ப உறவுகளாகவும் மாறிவரும் தன்மையைக் காணக் கூடியதாயுள்ளது. இவ்வாறாக நமது உறவுப்பாலத்தைப் பெருப்பித்துக் கொள்ள இந்து ஊடகங்கள் முன்நிற்கின்றன. இவ்வாறாகத் தமிழ் ஊடகங்கள் எம் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் நுழைந்து எமக்கு ஒரு கைங்கரியமாக புதலிட மண்ணைச் சிறிது மறந்து வாழ்வதற்கு உதவி செய்கின்றன.

இவ்வாறாக ஊடகங்கள் பலவழிகளில் பயன்படுவது போல சில நீமைகளைச் சுமந்து வருகின்றன எனக் கூறின் மறுக்கமுடியாது. எந்த ஒரு விடயத்திலும் நன்மையும் உண்டு, தீமையும் உண்டே. ஒட்டுமொத்தமாகக் கூறின் இந்த ஊடகங்களால் வாசிப்புத்தன்மை குறைந்துவிட்டது. தோலைக்காட்சியால் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகள் பின் தள்ளப்பட்டுவிட்டன. இது பத்திரிகைத் துறைக்கு ஒரு விழுக்காடு எனலாம். வாசிப்புக் குறைய நூலறிவும் குறைந்துவிடுகின்றது என்பது உண்மையே. இன்னும் பல வானொலிகள், தொலைக்காட்சிகள் முதலிடத்தில் நிற்பதில் இவற்றுக்கான பணச்செலவைச் சிந்தித்துப் பார்க்ப் பலர் தவறிவிடுகின்றனர். எம்மவர் உழைக்கும் பணம் இங்கேயே இந்த ஊடகங்களுக்குச் செலவாக்கி விரயமாக்குகின்றனர். குறிப்பாக ஓரிரண்டு தொலைக்காட்சி, வானொலி இருந்தால் போதாதா? மேலதிக ஊடகங்களுக்குச் செலவழிக்கும் பணத்தை எமது நாட்டிலுள்ள ஆதரவற்றோர்களுக்கு, தாயகப் புனர்வாழ்வுக்கு, அங்கவீனர்களுக்கு மறுவாழ்வு, மகிழ்வு கொடுக்கலாமே. இவ்வாறு செய்தால் எத்தனை ஆன்மாக்கள் ஒளியுடன் வாழும்? அடுத்து ஒவ்வொரு வானொலியும், தொலைக்காட்சியும் இருபத்தினான்கு மணித்தியாலங்களும் இயங்கவேண்டும் என்பதனால் மறு ஒலிபரப்பு, கூறியர் கூறல், நேயர்கள் - அறிவிப்பாளர் அதிகநேர உரையாடல், தனிப்பட்ட பேச்சு விசாரிப்புகள் என்பன ஊடகங்களுக்கு ஆரோக்கியமானதல்ல. இருபத்துநான்கு மணித்தியாலங்களும்

படிப்பகம்

**„மண்" சஞ்சிகையின் 100வது சிறப்பு இதழ் 2003 வாசகர் கட்டுரைப்போட்டியில் 1வது பரிசு பெற்றது.**

## புலம் பெயர் நாடுகளில் தமிழ் ஊடகங்களின் நிலை

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்” என்ற பாரதியாரின் கனவு பலித்தது போன்று வானலையிலே தமிழ்மொழி, அத்துடன் பத்திரிகை, சஞ்சிகை, நூல்கள் என அவனி எங்கும் தமிழ்ப் பிரவாகம், புலம் பெயர் நாடுகளிலே தமிழினமும் தமிழ் மொழியும், தமிழின முத்திரைகள் என தமிழ் மொழியின் பவனி என்றும் இல்லாதவாறு இந்நூற்றாண்டில் கொடி கட்டிப் பறக்கின்றது. இவை தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் என்றே கூறலாம். தாயகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சுதந்திரப் புனிதப்போர் காரணமாக வெளிநாடுகள் தாண்டிய தமிழீழத் தமிழர்களால் அதாவது எம்மவர்களால் தமிழ்மொழி உலகிலே வளர்க்கப்படுகிறது, அறிமுகப்படுத்தப்படுகிறது எனும்போது பெருமையடையக் கூடியுள்ளது.

ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே தாய்நாடு தாண்டி எம்மவர் பெருவாரியாகப் புலம் பெயர்ந்த போது, அன்று தமிழ் அட்சரங்களையே காணமுடியாமல் இருந்தது. கையெழுத்துப் பிரதிகளாக சில சஞ்சிகைகள் மட்டுமே அன்று வெளிவந்தன. பின்னர் காலத்தின் வேகம், தட்டச்சுயந்திரத்தில் ஒரு சில சஞ்சிகைகள் பிறந்தன. பின்பு காலம் செல்ல காலத்தின் கடிதான வேகம், விஞ்ஞான வேகம், தொழில்நுட்ப வளர்ச்சி என்பவற்றால் கணனி அறிமுகமாக, பத்திரிகைகள் தோற்றம் பெற்றன. கையெழுத்துப் பிரதிகள் கணனிக்குள் புகுந்து கொண்டன. 1990ம் ஆண்டில் பின்னர்தான் பத்திரிகை ஐரோப்பாவில் தோற்றம் பெற்றது எனலாம். பொதுவாக கணனியின் வரவுக்குப் பின்னர் சஞ்சிகைகள், நூல்கள் என படைப்புக்கள் விரிவடைந்தன, வானொலிகள் தோன்றின, ஐரோப்பாவை எடுத்துக் கொண்டால் 1996ம் ஆண்டுக்குப் பின்னரே முதன் முதலாக “ஷுகவு” தொலைக்காட்சி வான்பரப்பினூடே ஒளிரத் தொடங்கியது எனலாம். இத்தினம் தமிழர்வரலாற்றிலே ஒரு பொன்னாளாகும். இவ்வாறாக தற்போது ஏறக்குறைய ஐந்துக்கும் மேற்பட்ட வானொலிகள், சஞ்சிகைகள் எனப்பலகிப் பெருகிவிட்டன. இந்தக் கணிப்பீடு ஐரோப்பாவை எல்லைப்படுத்தியே கூறப்பட்டுள்ளது.

பொதுவாக இந்த ஊடகங்களின் வரவாலே தமிழ்மங்கையானவள் புதுப் பொலிவுடன் உலகிலே பவனிவரத் தொடங்கியுள்ளார். மூளை துருப்பிடித்து தனிமையையே வாழ்வுத் துணையாக்கிக் கொண்டு வாழ்ந்த எம்மவர்களுக்கு தாயகச் சூழலையும், அங்கு வாழ்வது போன்ற உணர்வையும், நினைவு மீட்டலையும் நாளாந்தம் புத்துணர்வுடனே சுமந்து வாழ்வதற்கு இந்து ஊடகங்கள் வழிவகுக்கின்றன. புலம் பெயர் மண்ணில் புரியாத மொழியுடன் விளங்கியது பாதி, விளங்காதது பாதியாக வாழ்விட மொழியிலுள்ள ஒளிப் பிம்பங்களைத் தொலைக்காட்சியில் பொழுதைக் கழித்த எமக்கு தமிழ்த் தொலைக்காட்சியின் வரவு ஒரு வரப்பிரசாதமே. பல் வகையான


படிப்பகம்

www.padippakam.com



**„மண்" சஞ்சிகையின் 100வது சிறப்பு இதழ்**
**2003, வாசகர் கவிதைப்போட்டியில் 1வது பரிசு பெற்றது.**

## மண்ணின் 'மா' வீரர்கள்

மண்ணின் மாவீரர்கள் மறையாத ஓவியங்கள்
எண்ணில் அவர்கள் திறமை என்றுமே நீங்காது
விண்ணில் அவர்கள் தேவரே வியக்கும் வண்ணம்
நண்ணிய நோக்கமதைத்தம் கண்ணாரக் காணுவரே – மாவீரர்கள்

உண்டி வெறுத்தனர், உறவை வெறுத்தனர்
கண் தூங்க மறந்தனர், கனவுகளை நனவாக்கத்
தம் வாழ்வை வெறுத்தனர், வருங்காலத்தை மறந்தனர்
தமிழீழம் காணத் தவியாய்த் தவிக்கின்றனர்

இரவுபகலின்றி, வருங்காலத் தமிழினம் காக்கவும்
நிகரிலாப் போரிலே நித்தமும் தம்மைச் சேர்த்தனர்
கறையிலாத் தம் கனவு கனிவாக வருமெனவே – தமது

எதிர்காலம் தன்னை உள்ளளவும் கருதாது
வதிவிடங்களின்றி நாட்டு வளம் காணத்துடிக்கிறார்கள்
சதியுடைய சக அரசின் சல சலப்பை அகற்றிடவே
மதியுடனே மாவீரர் மனதுடனே போராடுகிறார்.

தமிழீழம் காண்பதற்குத் தம்முயிரை மதியாது
உமியாக மாறுகிறார், உரமாக மாறுகிறார்
பூமியில் அவர்கள் உயிர் புதையுண்டு போனாலும்
நாமிருக்கும் போதிற் காண்போமே தமிழீழம்.

திருமதி புஸ்பா முத்துக்குமார்
Mönchengladbach

அவுஸ்திரேலியாக் கண்டத்தை கண்டறிந்த மாலுமி ஜேம்ஸ் குக் இங்கிலாந்தைச் சேர்ந்வர். இவர் ஒரு திறமையான கடலோடி. இவரது வாழ்வில் பெரும்பகுதி கப்பலிலேயே கழிந்துள்ளது. அந்தளவிற்கு கடற்பயனங்களிலே வாழ்க்கையை செலவிட்டார்.



படிப்பகம்



# „மண்" சஞ்சிகை ஜேர்மனி போட்டிமுடிவுகள் - வாசகர்கள்



**"மண்" சஞ்சிகையின் 100வது இதழ் வெளியீட்டையொட்டி வாசகர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்.**

## (1) கவிதைப்போட்டி

1வது இடம்: திருமதி. புஸ்பா முத்துக்குமார் - Mönchengladbach
2வது இடம்: திருமதி. சுகந்தினி சுதர்சன் - Kirchheim-Teck
3வது இடம்: திரு. இ. சிறிஸ்கந்தராசா - Duisburg

## (2) சிறுகதைப்போட்டி

1வது இடம்: திருமதி. சுந்தராம்பாள் பாலச்சந்திரன் - Differten
2வது இடம்: திருமதி. இராஜேஸ்வரி லோகநாதன் - Hannover
3வது இடம்: திருமதி. பகீரதி சுதேந்திரன் - Heidenheim
திருமதி. ஜேயா. நடேசன் - Havixbeck

## (3) கட்டுரைப்போட்டி

1வது இடம்: திருமதி. விக்னா பாக்கியநாதன் - Dortmund
2வது இடம்: திருமதி. ஜெயா நடேசன் - Havixbeck
திருமதி. நகுலா சிவநாதன் - Selm
3வது இடம்: திருமதி. மீனா சிவலிங்கம் - Hennef
திரு. இ. நடராசா - Bonn

பிரான்சின் முதலாவது சுரங்கபுகையிரத சேவை வன்சனுக்கும் நிக்லிக்கும் இடையில் 19.07.1900ல் ஆரம்பமானது.

www.padippakam.com



## (3) 13~16 வயதினருக்கு (மத்தியபிரிவு)

### 1. கட்டுரைப்போட்டி

1வது இடம்: செல்வி. ஷாமினி மோகன் - Mönchengladbach
2வது இடம்: செல்வன். பிரசன்னா செல்வராசா - Castrop-Rauxel
3வது இடம்: செல்வி. கீர்த்தனா ஞானகிருஷ்ணன் - Sinsheim

### 2. ஓவியப்போட்டி

1வது இடம்: செல்வன். பிரசன்னா செல்வரசா - Castrop-Rauxel
2வது இடம்: செல்வன். ரூபன் சின்னத்தம்பி - Denmark
3வது இடம்: செல்வி. சாந்தி தயாளன் - München

## (4) 17~20 வயதினருக்கு (மேற்பிரிவு)

### 1. கட்டுரைப்போட்டி

1வது இடம்: செல்வி. ரஜனி. கமலநாதன் - Solingen
2வது இடம்: செல்வி. மயூரி சிறிகரன் - Denmark
3வது இடம்: செல்வன் சிவநேசன் சிவபாலன் - Holland

### 2. ஓவியப்போட்டி

1வது இடம்: செல்வி. ரஜனி கமலநாதன் - Solingen
2வது இடம்: செல்வி. பானுரேகா முத்துக்குமார் - Mönchengladbach
3வது இடம்: செல்வி. தர்சினி கமலநாதன் - Solingen

அமெரிக்காவில் டெக்சாஸ் மாநிலத்தில் வாலண்டைன் என்ற நகரம் இருக்கிறது இது காதலர் தினத்தைக்குறிக்கும்.அதேபோல் ஒகியோ நகரில் லவ்லேண்ட் நகரம் உள்ளது. இதுவும் காதலர் தினத்தைக்குறிக்கும்.



படிப்பகம்

# „மண்" சஞ்சிகையின் 100வது இதழ் சிறுவர்போட்டிகள் 2003

„மண்" சஞ்சிகையின் 100வது இதழ் வெளியீட்டையொட்டி சிறார்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்:-

## (1) 8 வயதிற்குட்பட்டவர்கள் (பாலர்பிரிவு)

### 1. உறுப்பெழுத்துப்போட்டி

1வது இடம்: செல்வி. வந்தனா முருகதாஸ் - Weeze
2வது இடம்: செல்வன். ஷங்கீத் சண்முகராஜா - Mönchengladbach
3வது இடம்: செல்வன். அஸ்மிர்தன் சிவறஞ்சன் - Wesseling
செல்வி. மயூரணி சண்முகரட்ணம் - Weeze

### 2. ஓவியப்போட்டி

1வது இடம்: செல்வி. துளசி சிவபூரணன் - London
2வது இடம்: செல்வி. துவாரகா தேவராசா - Meerbusch
3வது இடம்: செல்வன். ஷநீகன் சிவநாதன் - Selm

## (2) 9-12 வயதினருக்கு (கீழ்ப்பிரிவு)

### 1. உறுப்பெழுத்துப்போட்டி

1வது இடம்: செல்வி. அகல்யா றவீந்திரன் - Kamen
2வது இடம்: செல்வன். விதுர்சன் மோகன் - Mönchengladbach
3வது இடம்: செல்வன். பிரவீனா ஞானறஞ்சன் - Korschenbroich

### 2. ஓவியப்போட்டி

1வது இடம்: செல்வி. பிரியந்தா யோகீஸ்வரன் - Göttingen
செல்வன். நிலக்ஷன் சாந்தகுமாரன் - Northeim
2வது இடம்: செல்வன். பார்த்திபன் பாலச்சந்திரன் - Differten
செல்வன். பிரணவன் யோகராசா - Düsselodrf
3வது இடம்: செல்வி. கீர்த்தனா ஞானகிருஸ்ணன் - Sinsheim


படிப்பகம்

www.padippakam.com



கீ.—மே.

30-09: தொற்றுநொய் ஒன்று.
35-21: புற்றில் வாழ்வது, படையும் நடுங்கும் என்பார்கள்.
48-20: நகை, பவுண் எனப்பொருள்படும்.
49-42: பறவை ஒன்று.

- முடிவுதிகதி 20.08.2003 -

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு — 76

(வைகாசி — ஆனி 2003)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தொ | லை | க் | கா | ட் | சி | றை |
| ண் | ண | ம் | கி | டி | வ | லை |
| ட | ன் | த | ர | ப | பு | யி |
| ம | கி | சு | வா | சி | ப் | பு |
| னா | டு | ட் | ப | பா | | கை |
| று | ட் | டி | ய | ப் | பா | ன் |
| நா | மு | மெ | ம் | ய் | சி | ஊ |

பங்குகொண்டவர்கள்:

திருமதி:— புஸ்பா. அருமைத்துரை - Wiesloh
திருமதி:— சத்தியா. தேவராசா - Meerbusch
திருமதி:— ஜெயா. நடேசன் - Havixbeck
திருமதி:— செல்வி. யோகராசா - Düsseldorf
திருமதி:— றஞ்சனா. தவராஜ் - Wadgassen
திருமதி:— சுகந்தி. யோகீஸ்வரன் - Göttingen
திருமதி:— சுலோசனா. புவனேந்திரன் - Duisburg
திரு:— ம.யோ. ஜீவரத்தினம் - Böblingen
செல்வன்:— பிரசன்னா. செல்வராசா - Castrop-Rauxel

**இவர்களுக்கு „மண்" சஞ்சிகை பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது. இவர்களில் அதிஸ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசு பெறுபவர்:**

திரு ம.யோ. ஜீவரத்தினம் - Böblingen

படிப்பகம்

www.padippakam.com


# குறுக்கெழுத்துப்போட்டி – 77
## (ஆடி – ஆவணி 2003)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 |
| 08 | 09 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ. – வ.**

01-06: தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மடிந்த முதல் வீரன் தியாகி என்று அழைக்கப்படுபவன்.
13-14: இந்த மாதத்தை இலங்கைத் தமிழர்களின் துயர்படிந்த மாதம் என்று கூறுவார்கள்.
19-21: தென்னம்பொருள், சிறுகைத் தொழிலுக்குப் பயன்படுத்துவர்.
30-31: சமூகத்தில் அழியா இடம்பிடிப்பவர்களுக்கு நம்மவர்கள் இது வைப்பார்கள்.
43-46: விஞ்ஞான, தொழில்நுட்பத்தில் வளர்ந்த ஆசிய நாடு.
48-49: உயிரினங்களில் நீண்ட காலம் வாழ்வது.

**வ. – இ.**

10-08: கடல்வாழ் உயிரினம்... இந்துக்கோவில்களிலும் பயன்படுத்துவர். (கு)
39-37: இத்தொழில் புரியும் மலையகமக்கள் இன்றும் வறுமையிலும் உரிமை யற்றும் தான் வாழ்கிறார்கள்.

**மே. – கீ.**

01-36: இலங்கையில் வாழும் பெரும்பான்மை இனமக்கள்.
03-31: இலக்கியத்தில் ஒருத்தி. (கு)
04-32: முக்கனிகளில் ஒன்று.
07-14: பெண்யானையை இப்படி அழைப்பர்.
12-47: யாழ்ப்பாணத்தில் இது எரியூட்டப்பட்டு 22 வருடங்கள் சென்று விட்டன. தமிழர்களின் அரிய பொக்கிசம்.
39-46: மிக மிக இனிப்பானது. மருத்துவத்துக்கும் பயன்படும்.


படிப்பகம்

உப. தலைவர்:
Vice. President:
திரு. வே. ஞானகாந்தன்
பி. ஏ. (கல்வி டிப்ளோமா)
Mr. V. Ganakanthan
B. A (Dip. in. Edu)

செயலாளர்:
Secretary:
திரு. செ. மெற்றாஸ்மயில்
பி. ஏ. (சிறப்பு)
Mr. S. Madrasmyle,
B. A (Hons)

பொருளாளர்:
Treasurer:
திரு. வ. சி. செல்வராசா
(யாழ். பல்கலைக்கழகம்)
Mr. V. S. Selvarajah
(Jaffna - University)

## மரபுவழிக் கலைகளை ஆவணப்படுத்தலும், எழுச்சி விழா நடத்துதலும்.

எம்முன்னோர் வழிவந்த பாரம்பரியக் கலைகள், இனத்தின் அடையாளங்களை காட்டும் அரும்பெரும் சொத்து. கடந்த காலங்களில் போரின் அனர்த்தங்களினால் அழிந்தொழிந்து வருவதுடன் கலைஞர்கள் பலரும் இறந்தும் வருகின்றனர்.

இந்நிலையில் எச்சசொச்சங்கள் பாதுகாத்து ஆவணப்படுத்தும் முயற்சியிலும் நாம் பணிசெய்ய முன்வந்துள்ளோம்.

கடல் கடந்து தாங்களும், எமது மக்களும் வாழ்ந்து வந்தாலும் எமது இனத்தை, நாட்டை மொழியை கலையை மறந்து வாழமாட்டீர்கள் என்பது உறுதி.

எனவே மேலே கடிதத் தலைப்பில் குறிப்பிட்ட செயற்திட்டங்களைச் செயற்படுத்த சுமார் 13 லட்சம் ரூப தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தாங்களும் தங்களுக்குத் தெரிந்தவர்களிடம் உதவி பெற்றும், எமது கழகத்திற்கு முடிந்தளவு நி உதவியை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். "சிறுதுளி பெருவெள்ளமாகும்". நீங்கள் அனுப்பும் பணத்தை "பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்" கணக்கு இல - 500-1-1137-1 இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி, 2வது கிளை, யாழ்ப்பாணம், என்ற கணக்கிற்கு அனுப்பி எனக்கு விபரத்தை அனுப்பலாம். அல்லது எனக்கு நேராகவும் அனுப்பலாம்.

நீங்கள் அனுப்பும் தொகைக்கு கழ்ப் பற்றுச் சீட்டு அனுப்பிவைக்கப்படும். அனுப்பும் பணம் எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்ற விபரமும் தங்களுக்கு பின்பு அனுப்பி வைக்கப்படும் என்ற உறுதி வழங்குகின்றேன்.

எமது கலைப்பணிக்கு நீங்கள் செய்யும் உதவி காலத்தால் மதிக்கப்படும் உதவியாகும்.

மிக விரைவில் உங்கள் பதிலை எதிர்பார்க்கின்றேன்.

கலைப்பணியில்
(கலாபூ சணம் செ.மெற்றாஸ்மயில்)
செயலாளர்
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்
Society for the Development of Traditional Arts

# பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்
## Society for the Development of Traditional Arts
### பத்து ஆண்டு நிறைவு விழா
1993-2003

**Festival of 10th Anniversary**

திட்டமிட்ட நிகழ்வுகள்

*Planning of Programme*

- 10 இசைநாடகங்களை ஒலிப்பேழையில் வெளியிடல்
  *Launching of 10 Folk Music Dramas Audio Cassettes.*
- 8 இசைநாடகங்களை ஒளிப்பேழையில் வெளியிடல்.
  *Launching of 8 Folk Music Dramas Video Cassettes.*
- நாட்டுக்கூத்துக்கள், இசைநாடகங்கள், கிராமியக்கலைகள் போட்டி வைத்தலும், பரிசு வழங்கலும்.
  *Competition and Presentation of Prizes for the Traditional Arts.*
- பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி மூன்று நாட்கள் விழா.
  *Function for Three Days to Mark the 10th Anniversary.*
- 3 நாட்டுக்கூத்துக்கள் ஒலிப்பேழையில் வெளியிடல்
  *Launching of 3 Folk Dance Dramas Audio Cassettes.*
- 3 நாட்டுக்கூத்துக்கள் ஒளிப்பேழையில் வெளியிடல்.
  *Launching of 3 Folk Dance Dramas Video Cassettes.*
- 50க்கு குறையாத கிராமியக் கலைகளை வீதி ஊர்வலத்தில் பங்குபற்றச் செய்த
  *Procession of Various Folk Arts (Over 50)*

12/1, Moothavinayagar Lane,
Kachchari-Nallur Road, Nallur, Jaffna.
Registration : NEP / ED / Cul / J / 03 / 98

12/1, முத்தவிநாயகர் லேன்,
கச்சேரிநல்லூர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
பதிவிலக்கம் : வகிமா / கஅ / பண் / யா / 03 / 98

தலைவர்:
**President:**
லயன் வைத்தியகலாநிதி
வை. தியாகராசா
**Lion Dr. V. Thiyagarajah**

8. 5. 2003

MR. V. SIVARAJAH . Esq.,
Angertaler Str. 98.
47249 Duisburg,
GERMANY.

அன்புடையீர்,

# பொங்குதமிழ் நிகழ்வு

பொங்குதமிழ் எழுச்சிநிகழ்வு 28.06.2003 சனிக்கிழமை அன்று யாழ்நகரில் நடந்தேறியது. பல திக்குகளிலும் இருந்து திரண்டுவந்த சுமார் 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் யாழ்பல்கலைக்கழக மருத்துவப்ட மைதானத்தில் கூடினர். தமிழர்களின் அடிப்படை அபிலாசைகளுக்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தை கோரும் விதத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் செல்வன் ப. பக்ரதன் தலைமயில் நிகழ்வு ஆரம்பமாகியது. பொதுச்சுடரினை யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் சு. மோகனதாஸ் ஏற்றிவைக்க, தமிழ்ழத் தேசியக்கொடியினை விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து எழுச்சப்பாடல்கள் இடம்பெற்றன. விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பருதி சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து சர்வமதத்தலைவர்களும், மனிதநேய அமைப்பின் பொறுப்பாளர்களும் ஆசியுரை நிகழ்த்தினர்.

இலங்கைப் பிரதமரின் பிரதிநிதிகள் உட்பட உலகசமாதானத்துக்கான ஒத்துழைப்பு மன்றத்தினரும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் குறிப்பாக சகல மதத்தலைவர்களும் கலந்துகொண்டனர். சமாதான முயற்சிகளுக்கு குறுக்கே ஊதாகரமாக நிற்கும் உயர்பாதுகாப்பு வலையவிவகாரம் இப்பொங்குதல் எழுச்சிநிகழ்வில் பிரதான நிகழ்வாக இடம்பிடித்தது. எழுச்சிப்பாடல்களின் நிறைவில் இலட்சக்கணக்கில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் பொங்குதமிழ் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. „நாம் இந்த சர்வதேசத்துக்கு ஒரு உண்மையை பிரகடனம் செய்கிறோம். இனியும் எம்மால் இழுபடமுடியாது. எங்கள் வீடுகளுக்க நாங்கள் போகவேண்டும். உங்கள் வீடுகளுக்கு நீங்கள் போங்கள்.“ எனப் பாட்டுப்பாடி உணர்ச்சிகளை வெளிப்படுத்தினர். „தமிழ்ழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால அரசைக் கையழிக்கப்படவேண்டும். அந்த இடைக்கால அரசை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும். ஆக்கிரமிக்கப் பட்ட தமிழர்களின் தாயகத்திலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும். தனித் தேசிய இனம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, என்பவற்றின் அடிப் படையில் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு இனப்பிரச்சனைக்கு நீதியானதும் கௌரவமானதுமான தீர்வு வேண்டும். அதனூடாகவே ஒரு நிரந்தர சமாதானம் சாதத்தியம் என்பதை நாம் பிரகடனம் செய்கிறோம். உயர்ந்தவர்கள் நாம் எல்லோரும், உலகத் தாய்வயிற்றில் உதித்த மைந்தர், நசிந்து பயந்து இனியும் கிடக்கமாட்டோம். நாமெல்லோரும் நிமிர்ந்து நிற்போம்.“ எனப் பொங்கு தமிழ் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டது.

2001, 2002 ஆண்டுகளில் யாழ்பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வுகளுக்கு சிகரம் வைத்தாற் போல் இந்த பொங்குதமிழ் எழுச்சிநிகழ்வு அமைந்தது.

*சில்லையூர் சிங்கராசா*
Olfen

www.padippakam.com



## ஈழத்தின் இசைவிற்பன்னர்
## தயாகப்பரணி 2003

மங்கல காலத்திலும் அமங்கல வேளையிலும் தன் வடிவத்தை விழுங்கச் செய்வது கலை. கலையின் முகங்கள் பல. இன்று எமது தாயக மண்ணில் எண்ணற்ற அழிவுகளைக் கண்டுவிட்டோம். விடுதலைப்போராட்டத்தின் அர்ப் பணிப்புகளுக்கு மத்தியிலும் எமது தாயகக் கலைஞர்கள் தங்கள் கலைச்சேவையின் ஊடாக எமது தமிழ்ப் பாரம்பரிய கலைகளைப் பாதுகாத்து, அக்கலைகளுக்கு புத்துயிர், புதுவடிவம் கொடுத்து வருகிறார்கள். புலம் பெயர்ந்த நம் மக்கள் அந்நிய மண்ணில் எமது கலை, கலாச்சார பண்பாடு களை சீரழித்து விடாமல் வளர்ச்சிபெறவேண்டும் என்ற ஆவலோடு தாயகத் தமிழ்மண் வாசனையை புலம்பெயர் நாடுகளில் வீசிச்சென்றுள்ள தாயக இசைக்குயில்களின் கலைச்சேவை நம் எல்லோராலும் பெரிதும் போற்றப்பட வேண்டியது. இது ஒரு மாபெரும் சிறந்த நிகழ்வாகும்.

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்து பல கலைநிகழ்வுகளை நடாத்திச் சென்றுள்ள இக்கலைஞர்களின் சேவையை பாராட்டுவோம். இந் நிகழ்வு புலத்தில் வாழும் மக்களிடையே புத்துணர்வு, பொலிவு, வேட்கையையும், புதிய பரிநாமத்தையும், பெரும்புகழையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இசையமைப்பாளர் கள், பாடகர்கள், கவிஞர்களின் விடுதலைக்கானங்களும், வீர உரைகளும் புலம்பெயர்ந்த தமிழர்களின் உணர்வுகளை உரமூட்டி உயிர்கொடுத்தது எனலாம். இசையால் எம் எல்லோரையும் தம்வசமாக்கி அரங்கில் அமைதியாக, மெய்மறந்து உள்வாங்கிக்கொண்டிருந்த எம் தமிழ் உறவுகளின் வேட்கையை கொழுந்துவிட்டெரியச் செய்வதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மயிர்கூச்செறியவைக்கும் வீர உரைகளும் அவர்கள் இசைத்த சோகப் பாடல்களிலே இளையோடியது.

எங்கள் சொந்த மண்ணில் சோகம் சுமந்து வாழும் சொந்தங்களினதும், சோகத் தின் வெளிப்பாடுகளையும், எமது நம்பிக்கையையும், எமது எதிர்காலத்தை நோக்கிய தெளிவான பார்வையையும், அழகுதமிழில் இசையாக்கி, கலைவடி வில் கொண்டுவந்து மேற்குலகெங்கும் பெருவிருந்து படைத்த எமது தாயகக் கலைச்செல்வங்களின் சேவை போற்றப்படவேண்டும், பாராட்டுவோம்.

*தில்லையூர் சிங்கராசா*
Olfen

*பாவம் செய்யும் அளவு உன்னிடம் பலவீனம் இருந்தால் அந்த உண்மையை எற்றுக்கொள்ள முடியாத அளவில் நீ கர்வமாய் இருப்பது பொருளற்றது - லூயிஸ்ஈவல்லி.


படிப்பகம்

ஒரு மொழி தெரிந்த இருவர் இருப்பதைவிட இரு மொழி தெரிந்த ஒருவர் இருப்பதனால் ஏற் படும் செலவு மிகவும் குறைவே. அதேபோன்று அனைத்து விடயங்களும் அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படவேண்டும். அது பெரியளவில் செலவினை ஏற்படுத்தும் விடயமல்ல. ஒரு நாட்டில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நாட்டிற்குள் எங்கு சென்றாலும் தனது சொந்த மொழியிலேயே தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய நிலை தோற்றுவிக்கப்படவேண்டும்.

இலங்கையின் பிரச்சினைகளுக்கும் கனடாவின் கடந்தகால அனுபவங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் உண்டு. கனடாவிலும் பெரும்பான்மை மொழியாக ஆங்கிலமும் சிறுபான்மை மொழியாக பிரெஞ்சும் உள்ளன. ஆங்கிலமொழி பேசுவோர் 75 சதவீதமாகவும். பிரெஞ்சு மொழி பேசுவோர் 25 சதவீதமாகவும் உள்ளனர். அதேபோன்றே இலங்கையிலும் பெரும்பான்மை சிங்கள மொழி பேசுபவர்கள் 80 சதவீதமாகவும் சிறுபான்மை தமிழ் மொழிபேசுவோர் 20 சதவீதமாகவும் உள்ளனர். நானும் கனடாவின் சிறுபான்மை இன மொழியைப் பேசுபவனாகையால் இவ்விவகார குறித்து எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு

கனடாவில் சிறுபான்மையின பிரெஞ்சுமொழிபேசும் கனேடியர்களுக்கு ஆரம்பத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. ஆங்கில மொழி பேசும் கனேடியர்களால் அடக்கப்பட்ட னர். அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டன. இதனால் 1968 இல் பிரெஞ்சுமொழிபேசும் கனேடியர்கள் உள்நாட்டுப் போரைத் தொடங்கினர். 1968 – 1972 வரையில் இப்போர் நீடித்தது

அந்நேரம் பதவியில் இருந்த கனேடியப் பிரதமர் மூலம் இந்தச் சிக்கலைக் தீர்க்கக் கூடிய நிலைமை எமக்கு கிடைத்ததால் நாம் அதிர்ஸ்டசாலிகளானோம். சிறுபான்மை மொழிபேசுபவர் என்ற சிக்கலே இன்றி இன்று எம்மால் எமது மொழியிலேயே கனடாவில் எங்கும் எமது தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக இருக்கிறது

எமது நாட்டிலும் உள்நாட்டுப் போர் தொடங்கக் காரணமாக இருந்தது மொழியே. மொழிக்கும் இனத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றமையினாலேயே சிக்கல்கள் தோன்றுகின்றன. போர் இடம்பெறுகின்றது. அவற்றையெல்லாம் கனடாவினால் தீர்த்துக் கொள்ள முடியுமென்றால் இலங்கையால் ஏன் முடியாது?

நன்றி. தினக்குரல்



படிப்பகம்

www.padippakam.com


சிறுபான்மையினமக்கள் தமது கலாசாரத்தின் அடையாளமான அடிப்படை மனித உரிமை யான மொழிக்கு பெரும்பான்மை இன மக்களது மொழியைப் போன்று சமமான அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். அதாவது தாம் ஏனைய பெரும்பான்மை இனமக்களைப்போன்று சமமாக நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்

ஒரு நாட்டில் ஒவ்வொரு குடிமகனுக்கும் அந்நாடு தொடர்பாக சில கடப்பாடுகள் உண்டு. ஒரு நாட்டில் ஒருவருக்குக் குடியுரிமை இருந்தால் அவர் அந்நாட்டு அரசிற்கு வரி செலுத்துதல் போன்ற கடமைகளைச் செய்ய வேண்டும். அதை எவரும் மறுக்க முடியாது. அதேபோன்று தனது குடிமக்கள் தொடர்பாக நாட்டில் அரசிற்கும் கடமைகள் உண்டு. குடிமக்கள் ஒவ்வொருவரும் தமது மொழிகளில் பல்கலைக்கழகங்களில் கல்விகற்பதற்கோ தொழில்கள் சேவைகள் செய்வதற்கோ முழு உரிமையையும் அரசு வழங்கவேண்டும்

பெரும்பான்மை இனகுடிமக்களை அரசு எவ்வாறு நடத்துகிறதோ அதே போன்றும் சிறுபான் மையின குடிமக்களும் நடத்தப்படவேண்டும். அவ்வாறான உரிமைகள் அரசால் மறுக்கப்படும் போதே பிரச்சினைகள் உருவாகின்றன

நான் அறிந்தவரையில் இலங்கையின் அரசியல் யாப்பில் சிங்கள மொழியும் தமிழ் மொழி யும் உத்தியோகபூர்வ மொழிகளாக உள்ளன. இரு மொழிகளுக்கும் சம உரிமைகள் வழங் கப்பட்டுள்ளன. ஆனாலும் யதார்த்தத்தில் நடப்பவை அரசியல் யாப்பிற்கு ஏற்றதாக இல்லை. இரு மொழிகளும் சமமான நிலையில் நடத்தப்படவில்லை. சிங்களமும் அதற்குப் பின்னர் ஆங்கிலம் தமிழ் என்ற ரீதியிலான கணிப்பே இங்கு நிலவுகிறது

சிறுபான்மையின மக்கள் தமது நாட்டில் எங்கு சென்றாலும் தமது சொந்த மொழியிலேயே தமது தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக இருக்கவேண்டும். அதற்கேற்ப பொது நிறுவன ங்களிலோ தனியார் நிறுவனங்களிலோ எங்கும் இரு மொழி தெரிந்தவர்கள் இருக்க வேண் டியது மிகவும் அவசியம்


படிப்பகம்

# "இரு மொழித் தன்மையும் தேசிய ஒருமைப்பாடும்'

தொகுப்பு. அருந்தவம். சோஸ்ற்

இலங்கை மன்றக் கல்லூரி கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு 20.06.03இல் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற போது "இரு மொழித் தன்மையும் தேசிய ஒருமைப்பாடும்' என்ற தலைப்பில் கனடா ஒட்டாவா பல்கலைக்கழகத்தின் சட்ட பீட பேராசிரியர் மார்க்குசினோ அவர்கள் ஆற்றிய உரை

மொழி என்பது தொடர்பாடல் ஊடகம் மட்டுமன்றி ஒரு இனத்தின் கலாசாரத்துடன் தொடர் புபட்டு அந்த இன மக்களின் அடையாளமாகவும் உள்ளது. எனவே ஒரு இனத்தின் மொழி மறுக்கப்படுவதென்பது அடிப்படை உரிமையை மீறும் செயலாகும். மக்கள் மொழி தொடர்பாக மிக அதிகமாக கவனம் செலுத்துகின்றனர். ஏன் மக்கள் மொழிக் காக போரில் ஈடுபடுகின்றனர்? குண்டுத் தாக்குதல்களை நடத்துகின்றனர்? மொழித் தொடர்பாடல் ஊடகமாக மட்டுமல்லாது கலாசாரத்தினதும் இன அடையாளத்தினதும் வெளிப்பாடாக இருக்கின்றமையே காரணம்

மொழி என்பது மனிதரின் அடிப்படை உரிமையாக இருப்பதுடன் மனித விழுமியத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையது. எனவே ஒரு இனத்தின் கலாசாரத்தையோ மொழியையோ தாக்குவதென்பது அவர்களையே தாக்குவதற்கு ஒப்பானது. அந்த நிலையில் மனித விழுமி யங்கள் தாக்கப்படுகின்றன. ஒரு இனத்தின் அடிப்படை உரிமை மீறப்படுகின்றது

ஒரு நாட்டில் பெரும்பான்மை இனமோ அல்லது சிறுபான்மை இனமோ மொழி என்பது அவர்களது அடிப்படை உரிமையாகும். மொழியினூடாகவே இனத்துவம் அடையாளப்படுத் தப்படுகின்றது. இனத்துவத்திற்கும் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனவே மொழி தொடர்பில் மக்கள் பாரபட்சமாக நடத்தப்படும் போது அது இனத்துவத்தை பாதிக்கி றது. அத்துடன் அவர்களது அடிப்படை உரிமை மீறப்படுகின்றது



படிப்பகம்

www.padippakam.com



மக்களான தமிழ்பேசும் மக்கள் ஒன்றிணைந்து போராடுவதை விடுத்து, ஆயுதபலம் கொண்டோர் தமது ஆதிக்கத்தை நிறுத்தவேண்டி நடாத்திய இயக்க அழிவு நடவடிக்கைகளும், இயக்கங்கள் தமக்குள் மோதிக் கொண்டதுமாகப் பிரிந்து நின்றனர். ஆதிக்க சக்திகளான பௌத்த சிங்களப் பேரினவாதிகள் தமக்குள் ஒன்றிணைந்து பிரித்தாளும் தந்திரத்தை கையாண்டு நம்மை சின்னாபின்னப்படுத்தி பலவனமுறச் செய்து நமது போராட்டத்தை அழித்தனர் என்பது கண்கூடு.

உலகின் சமபலக் கொள்கையில் வறாப்புடன் முதலாளித்துவ முகாம்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய கம்யூனிச முகாம்கள் வழ்த்தப்பட்டன, அழிக்கப்பட்டன. சோவியத் யூனியன் சின்னாபின்னப்பட்டுப் போனது. பதினைந்து நாடுகளாகப் பிரிந்து வறுமைக்குள் தள்ளப்பட்டன. நவன உலகுக்கு வேண்டித் தம்மை சுயவிமர்சனம் செய்ய வேண்டியதை கம்யூனிச முகாம்கள் தவிர்த்துக் கொண்டதால் முதலாளித்துவக் கொள்கைகளுக்கு ஈடு கொடுக்க முடியாது அழிந்து போயின. அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் கைகொட்டிச் சிரித்தன. அமெரிக்கா தானே உலகின் சர்வாதிகாரி என்று தனக்குத்தானே மகுடம் சூட்டிக் கொள்வதாக நினைத்து முள்முடி தரித்துக் கொண்டது. பலமிழந்து போன ரஷ்யவின் இப்போதைய நிலைப்பாடு என்ன என்பதனை பரிசோதித்துப் பார்ப்பதற்கும் அமெரிக்காவுக்கு ஈராக் ஆக்கிரமிப்பு உதவியுள்ளது.

அமெரிக்காவுக்கு இங்கிலாந்தும், அவுஸ்திரேலியாவும் நிபந்தனையின்றி ஆதரவு தெரிவித்தார்கள். இவர்கள் எல்லோருமே இங்கிலாந்தின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் 15ம் நூற்றாண்டிலிருந்து 20ம் நூற்றாண்டு வரை உலகெங்கும் காலனி ஆதிக்கங்களை ஏற்படுத்திச் சுரண்டலை ஏற்படுத்திக் கொழுத்தவர்கள். இன்று வரலாற்று மாற்றங்களினூடே நவீன காலனித்துவச் சுரண்டலை ஏற்படுத்த முயன்றிருக்கிறார்கள். இதனையே ஈராக் ஆக்கிரமிப்புக் காட்டுகிறது. இதற்கு எதிர்ப்புகள் பெரிதாக இல்லாதவிடத்து தொடரும் என்பதனை உலகம் எதிர்பார்க்க வேண்டும்.

(முற்றும்)

✣ ✣ ✣ ✣ ✣ ✣

முயல் தண்ணீர் குடிப்பதற்கென்று நீர் நிலைகளைத் தேடிச் செல்வதில்லை. அதன் தாகத்தைத் தணிக்க அது சாப்பிடும் புல்லில் அடங்கியுள்ள தண்ணீரே போதுமானது. அதிகாலை வேளையில் புல்லின் மீது படிந்திருக்கும் பனித்துளிகளும் அதன் தாகத்தைத் தணித்து விடுவதுண்டு.



படிப்பகம்

ஏற்படுத்தியுள்ளமை அமெரிக்காவுக்கு சற்றுத் திருப்தியளிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஒன்றிணைந்து ஒரு பாதுகாப்பு இராணுவத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்து அண்மையில் வெளியிடப்பட்டது. நாடுகள் ஒன்றிணைவதை வரவேற்கிறோம். ஆனால் அது அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக இருக்கக் கூடாது என்று அமெரிக்கா வரிந்து கட்டிக் கொண்டு அறிக்கை விட்டுள்ளது. நானே உலகின் பொலிஸ்காரன் எனக்கு எதிராக யாரும் இயங்கக்கூடாது என்பதன் தொனியே இந்த அறிக்கையாகும்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு அதாவது 1985களின் முன்பு நாம் பின்னோக்கிச் செல்வோமாயின் அமெரிக்காவின் சுவாசம் முழுவதும் ஒரே சிந்தனைதான் நிறைந்து கிடந்தது. வலுவில் தன்னைவிட எல்லாவழிகளிலும் சிறந்து விளங்கியதும், கனவில்கூடத் தன்னை மிரட்டிக் கொண்டிருந்த கொள்கையான கம்யூனிசக் கொள்கையைக் கொண்டு உலகின் தன்னிகரில்லா வல்லரசாகத் திகழ்ந்த சோவியத் யூனியனை எவ்வாறு அழித்து அந்த இடத்தைத் தனதாக்கிக் கொள்வதென்பதுதான் அந்தச் சிந்தனை.

அதனைச் செய்து முடிக்க அமெரிக்கா தனது அனைத்துவழிச் சக்திகளையும் பிரயோகித்து தனது கூட்டாளிகளுடன் இணைந்து செயற்பட்டது. அதில் கம்யூனிச முகாம்களில் உள்ள பலவீனமானவர்களை விலைக்கு வாங்குவது, கம்யூனிச செயற்பாடுகளில் உள்ள சில நடைமுறைப் பிழைகளைக் கண்டு பிடித்து அதனை ஊதிப் பெரிதாக்கி மக்களை கம்யூனிசக் கொள்கையின்மீது வெறுப்பேற்பட வைத்தது. முதலாளித்துவ நாடுகளில் உள்ள அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டாலும், ஆடம்பர, உல்லாசத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மாயாஜால விளம்பரங்களைக்காட்டி மக்களை மதிமயங்க வைத்தது. கம்யூனிச முகாம்களுக்கிடையிலான குழப்பங்களை, கொள்கை முரண்பாடுகளை தோற்றுவித்து பெரிதாக்கியது போன்ற பலநூறு வழிகளைப் பிரயோகித்து சோவியத்யூனியனையும், கம்யூனிச முகாம்களையும் அழித்து அமெரிக்காவும் அதன் முதலாத்துவ நண்பர்களும் தற்காலிகமான பெருவெற்றி கண்டனர். உலகளாவிய இடதுசாரிகள் தங்களுக்குள் உள்ள நட்பு முரண்பாடுகளை தவறாக பகைமுரண்பாடாகக் கருதினர். தமது பொதுஎதிரி முதலாளித்துவம் என்பதனை மறந்து தமக்குள் உள்ள கொள்கை முரண்பாட்டாளர்கள் அழிந்துபோகக் கண்டு கைகொட்டிச் சிரித்தனர். தங்களுக்குள் ஒன்றுபடாது வேறுபட்டுப் பிரிந்து நின்றனர். அமெரிக்காவும் அதன் முதலாளித்துவக் கூட்டாளி நாடுகளும் பிரிந்து நில்லாது இணைந்து நின்று தமது கைங்கரியத்தை சரியாகச் செய்து வெற்றி கண்டனர். இது கம்யூனிச வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய விடயமாகும். இடதுசாரிக் கொள்கைகள், கம்யூனிச சித்தாந்தங்களைப் படிப்போர், அதன்வழி நடக்க முயல்வோர், அதுசார்ந்த இயக்கங்களில் இணைபவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சித்தாந்த அடிப்படைக் கருவாகும்.

இலங்கையில் நடந்து முடிந்த, நடந்தேறிக் கொண்டிருக்கும் விடுதலை யுத்தத்தில்கூட நாம் இதனையே காணமுடிகிறது. நமது பொது எதிரியான பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக அதனால் ஒடுக்கப்பட்ட


படிப்பகம்

www.padippakam.com



கோடி டொலர்களும், படைவீரர்களுக்கு 6ஆயிரம் கோடி டொலர்களும், ஆயுதச் செலவாக 4ஆயிரம் கோடி டொலர்களும் அடங்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த யுத்தத்தில் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலை அசட்டை செய்துவிட்டு அமெரிக்கா நடந்து கொண்டதற்கு எந்த எதிர்ப்பலையும் பெரிதாகக் கிளம்பாதது அமெரிக்காவுக்கு பெரிய வெற்றியாகும். இது இன்னும் பல ஆக்கிரமிப்புகளை நடாத்த அமெரிக்காவுக்கு வலுவூட்டியுள்ளது. தொடர்ந்து சிரியா, வடகொரியா எனத் தொடரும் என எதிர்பார்க்கலாம். ஆனால் தனது படைபலம் முழுவதையும் ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் கொட்டி வைத்துள்ளதால் அமெரிக்காவுக்கு சற்றுச் சிக்கல் உள்ளது.

அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் நீண்டகாலமாக செய்து வைத்திருந்த புதியரக அனைத்து ஆயுதங்களையும் பரட்சித்துப் பார்ப்பதற்கு ஈராக் ஒரு களமாகப் பாவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள பொருளாதார வீழ்ச்சியை சரிப்படுத்துவதற்கு ஈராக்கை அழித்துவிட்டு பின்பு புனர்நிர்மாணம் செய்வதையும் அமெரிக்காவே மேற்கொள்வதன் மூலம் அமெரிக்காவில் உள்ள பொருளாதார வீழ்ச்சியை சரிப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.

ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் சிக்கவில்லை என்று பென்டகன் தெரிவித்துள்ளது. இது ஏற்கனவே ஓரளவு அமெரிக்காவுக்கும் தெரியுமானாலும் யுத்தத்தைத் தொடுத்தது. ஆகவே அமெரிக்காவின் எண்ணெய் சுரண்டலுக்கு ஈராக் குறுக்கே நிற்கிறது என்பதுதான் யுத்தத்துக்கான அடிப்படைக் காரணம் என்பது தெளிவாகிறது.

உலக நாடுகளில் எங்காவது எந்தப் பிரச்சனைகள் தோன்றினாலும் பேச்சுவார்த்தைகள் மூலம்தான் தீர்க்கப்பட வேண்டும் என்று மாஜாயாலம் காட்டுகிறது அமெரிக்கா. எமது இலங்கைப் பிரச்சனைக்கு அமெரிக்காவின் அறிக்கைகளே இதற்கு நல்ல உதாரணம். அழிவுகள் தவிர்க்கப்பட்டு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்பது இதயசுத்தியாக இருக்கின்றபோதே அது சரியானதாகின்றது. அமெரிக்கா ஈராக் பிரச்சனைக்கு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாமல் அல்லது சாட்டுக்கு சில நகர்வுகளை ஏற்படுத்தி விட்டு போர்முனைப்பில் நாட்டம் கொண்டு நடாத்தி முடித்தது. இது அமெரிக்காவின் இரட்டை நாக்குத் தன்மையை காட்டுகிறது.

ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து ஐரோப்பிய யூனியன் ஒன்றை ஏற்படுத்தயுள்ளனர். யூரோ நாணயத்தையும் அறிமுகம் செய்துள்ளனர். பொருளாதார வளங்களையும் மேம்படுத்தும் திட்டங்களையும் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகின்றனர். இதன்மூலம் யூரோவின் பெறுமதி அமெரிக்க டொலரை விடப் பெறுமதியில் அதிகரித்து வருகிறது. இது எதிர்காலத்தில் அமெரிக்காவுக்கு பலவழிகளில் சவாலாக அமையலாம்.

இதிலுள்ள பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளை அவ்வளவு சுலபத்தில் அமெரிக்கா பகைத்துக் கொள்ள முடியாது. ஆகவே ஐரோப்பிய யூனியனை உடைப்பதற்கு அமெரிக்கா தருணம் பார்த்திருந்தது. ஈராக் யுத்தத்தின் மூலம் அதனைப் பரிசோதிக்க முயன்றது. அதில் ஓரளவு விரிசலை

www.padippakam.com

பகுதியில் உள்ள கூர்திஷ் மக்கள் மீதான தாக்குதலை மேற்கொண்டு தமது அதிகாரத்துக்குள் உட்படுத்துவது எனத் துருக்கி கனவு கண்டது. ஆனால் அதற்கு அமெரிக்கா இடம் கொடுக்க வில்லை.

ஈராக்கில் ஷியா முஸ்லீம்கள், சுனி முஸ்லீம்கள் என இரு பிரிவினர் உண்டு. சதாம்குசைன் தனக்கு எதிரான முஸ்லீம்களை அடக்கி ஒடுக்கி வந்துள்ளார் என ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அவர்களை அமெரிக்கா தனது பக்கம் இழுத்துக் கொண்டது. ஈராக்கின் ஒரு பகுதியில் வாழ்ந்து வரும் கூர்திஷ் மக்களையும் சதாம் குசைன் அடக்கி ஒடுக்கினார் என்றொரு குற்றச்சாட்டும் உள்ளது. அவர்களையும் அமெரிக்கா தனது பக்கம் இழுத்துக் கொண்டது. துருக்கி, கூர்திஷ் மக்கள் மது ஆக்கிரமிப்பு நடாத்திய போது அதற்கு அமெரிக்கா இடம் கொடுக்காததற்கு தான் அவர்களைப் பாவிக்க வேண்டும் என்பதும் ஒரு காரணமாக இருந்தது.

யுத்தம் 19 நாட்கள் நடந்தது. பஸ்ரா நகரில் இருந்து படைநகர்வு தொடங்கப்பட்டது. அமெரிக்க இராணுவம் எதிர்பார்த்த பாரிய எதிர்ப்பை சந்திக்கவில்லை. பாக்தாத்துக்குள் நுழையும்போது ஈராக் இராணுவம் தாக்கும். முடியாவிட்டால் இரசாயன ஆயுதங்களை பாவிக்கும் என்றெல்லாம் யூகங்கள் எழுந்தன. எல்லாமே புஸ்வாணமாகிப் போனது. அழிக்கப்பட வேண்டும் என்ற திட்டமிடல் அடிப்படையில் எதிர்ப்பின்றி ஈராக்கிய நகரங்கள் அழிக்கப்பட்டன.

யுத்தக் காட்சிகள் ஒருபுறம். யுத்தம் வேண்டாம் என்ற யுத்த எதிர்ப்பு ஊர்வல யுத்தம் ஒரு புறம். மக்களுக்கு உதவி செய்யும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிக் காட்சிகள் ஒருபுறம் என உலகம் முழுவதும் வானொலிகள், மின் இணையங்கள், தொலைக்காட்சிகள் எல்லாமே போட்டி போட்டுக் கொண்டு ஈராக் கொழுந்து விட்டு எரிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு அந்த மக்கள் படும் துன்பங்களை காட்டிக் கொண்டு மட்டும் இருந்தன.

தொலைக்காட்சிகளில் பயங்கரப் படங்களைப் போடும் போது சிறுவர்கள் பார்க்கக் கூடாது என்று போடுவார்கள். வீடியோக் கடைகளில் இப்படங்களை சிறுவர்கள் வாங்க முடியாது. அவற்றில் சிறுவர்கள் பார்க்கக் கூடாது. தடைசெய்யப்பட்டுள்ளது என்று எழுதியிருப்பார்கள். தாம் சிறுவர்கள் மனநிலை வளர்ச்சியில் அக்கறையுள்ளவர் களாயுள்ளோம் என்பதனை இதன்மூலம் சித்தரித்தனர். நான் இதனைக் கண்டு மகிழ்ந்து போயிருந்தேன். ஆனால் ஈராக்கில் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் நடாத்திய ஆக்கிரமிப்பில் ஈராக் மக்கள் கொரூரமாகக் கொலை செய்யப்பட்டதையும், இரத்தம் வழிந்து ஓடுவதையும், காயம் பட்ட வயோதிபர், பெண்கள், சிறுவர்கள் அழுது துடிப்பதையும், துன்பப்படுவதையும் எல்லாத் தொலைக்காட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு நேரடி ஒளிபரப்பாகக் காட்டிக் கொண்டிருந்தன. யாருமே இதனை எதிர்க்கவில்லை என்பது வியப்பாக உள்ளது. என அண்மையில் ஜேர்மனியில் நடைபெற்ற மாணவர் கருத்தரங்கு ஒன்றில் சிறிஜீவகன் இராகுலன் என்னும் மாணவன் கூறியிருந்தார். இக்கருத்து எல்லோரும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

ஈராக்கில் இதுவரை நடந்த யுத்தத்துக்கு இருபதாயிரம் கோடி டொலர் செலவாகியுள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறையின் பென்டகன் அதிகாரி டோவ் ஜெக்கெய்ம் தெரிவித்துள்ளார். இதில் போர்ச் செலவாக 10 ஆயிரம்


படிப்பகம்

www.padippakam.com





# எண்ணெய்க்கு ஒரு இரத்த வேள்வி



## அமெரிக்க ஈராக் யுத்தம்

மேழிக்குமரன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இந்த யுத்தத்தில் ஐரோப்பிய யூனியனின் பங்கு என்ன என்பதனை உலகமே எதிர்பார்த்திருந்தது. ஆரம்பத்தில் ஒருவிதமான எதிர்ப்பு இருந்ததாகக் காட்டிக் கொள்ளப்பட்டது. பின்னர் ஐரோப்பிய யூனியனின் உப்புச் சப்பற்ற ஆதரவு வழங்கப்பட்டது. ஐரோப்பிய யூனியனில் உள்ள மிகப் பெரும் நாடுகளான ஜேர்மனி, பிரான்ஸ் போன்றவை உறுதியான முடிவுகள் எடுக்கவில்லை. பிரான்ஸ் தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. ஜேர்மனி மிகவும் அவதானமாக நடந்து கொண்டது. முதலாம், இரண்டாம் உலகப் போர்களின் பழிமுழுவதும் தனது தலையில் விழுந்த கறை இன்னும் அழியவில்லை. இந்நிலையில் இந்த யுத்தம் எதிர்பாராமல் மூன்றாம் உலகப் போராக மாறினால் அதுவும் தனது தலையில் விழக்கூடாது என்பதில் ஜேர்மனி அவதானமாக இருந்து அமைதி காத்தது. கண்துடைப்பு அறிக்கை ஒன்றை ஆம் என்றுமில்லாமல் இல்லை என்றுமில்லாமல் விட்டுக் கொண்டது. ஸ்பெயின் இங்கிலாந்துடன் இணைந்து அமெரிக்காவுக்கு ஆதரவு வழங்கியது.

ஈராக்மீது யுத்தம் நடாத்துவதற்கு பல யுக்திகளை அமெரிக்கா கையாண்டது. தனக்கு ஆதரவாக இயன்றளவு உலக நாடுகள் பலவற்றை தன்பக்கம் வைத்துக் கொண்டது. ஊரில் உள்ள சண்டியருக்குப் பயந்த நிலைதான் பல நாடுகளின் நிலையாக இருந்தது.

இலங்கையில் வான்பரப்பு ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்கா செய்து கொண்டிருப்பது கூட இதிலொன்றுதான் என்பது தெளிவாகிறது. ஒரு புறம் இந்தியாவுக்கான அச்சுறுத்தல். இன்னொரு புறம் ஈராக் யுத்தம் எதிர்பாராமல் விரிவடைந்தால் இலங்கையைப் பாவிப்பது.

ஈராக்மீதான தாக்குதலில் படைநகர்த்தும் போது ஒருபுறம் குவைத்தில் தனது படைகளை தங்கவைத்து நகர்த்துவது. இன்னொருபுறம் துருக்கிக்கு பேரம்பேசி அங்கு படைகளை தங்கவைத்து நகர்த்துவது. இதில் துருக்கி பல பலன்களைப் பெற்றது. ஆனால் அமெரிக்காவுக்கு தனது இடத்தை விட்டுக் கொடுப்பதன் மூலம் தனது பரம எதிரிகளான ஈராக்கின் ஒரு

படிப்பகம்

உன்னையும் வைத்துப்பாதுகாக்கமுடியும்.டெய்சி ரீச்சர் ஆரம்பித்தபோது மகேஸ்தொடர்ந்தாள் ஒண்டைக்காவுகொடுத்தது போதாததே அந்த மனுசன்தன்னால அழிஞ்சுது.ஒண்டையாவது காப்பாற்ற வேண்டாமே!அதுதான் போச்சுது அங்கை அந்தப்பொடியன் இவளைப்பார்த்துக்கொண்டு கலியாணம் கட்டாமல் வாழுது. மகேஸ் சொன்ன போது டெய்சி ரீச்சர் புனிதத்தை ஆச்சரியமாகப்பார்த்ததை புனிதத்தால் மறக்க முடியவில்லை. அவளை அறியாமல் அவளுக்குச்சிரிப்புத்தான் வந்தது. வெளியில் தாயும் ரீச்சரும் கதைச்சுச்சிரித்தது அவளுக்குக்கேட்டது.வெளியில் வருவதற்காகப் படுக்கையை விட்டு எழுந்தாள்.

*தொடரும்...*

## தகவற்துளிகள்

மிகப் பெரிய விமான நிலையம் - காலித் மன்னர் புன்னாட்டு விமான நிலையம் ரியாத்.

மிகப் பெரிய விமானம் - எரோல்லாப்ரஷிய விமானம்.

மிகப் பெரிய விரிகுடா - ஹட்சன் விரிகுடா, வடக்கு கனடா

மிகப் பெரிய குறுக்கணை - பராக்காகுறுக்கணை கல்கத்தா

மிகப் பெரிய நன்னீர் ஏரி - சுப்பீரியர் ஏரி அமெரிக்கா

மிகப் பெரிய ஆறு - அமேசன்

மிகப் பெரிய பூங்கா - உட் எருமை தேசிய பூங்கா கனடா

மிகப் பெரிய கோள் - ஜூபிடர்

மிகப் பெரிய தீபகற்பம் - அரேபியா

மிகப் பெரிய பொருட்காட்சிச்சாலை - இயற்கை வரலாற்று அமெரிக்கன் பொருட்காட்சிச்சாலை

www.padippakam.com


மூவருக்கும் பெரிதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நடந்து முடிந்த வாழ்க்கையின் சோகங்களை மீட்டுப்பார்க்காமல் இருக்கமுடியவில்லை.எந்தக் கதையை எடுத்தாலும் மனம் சுமையாகக்கனத்தது.



அதன்பின்பு ஏனோ தானோ என்று சாப்பிட்டு முடித்தார்கள் நான் ஆசையாகச் சமைச்சு வைச்சன் அந்த அளவிற்கு நீங்கள் சாப்பிடவில்லை.இல்லையக்கா நான் வயிறு நிறையச்சாப்பிட்டேன் நாளைக்குச் சமைக்கத்தேவையில்லை சோறு கறியெல்லாம் இருக்கு. நாளைக்குமிச்சம்பிடிக்கவே சமைச்சனான். டெய்சி ரீச்சர் செல்லமாகக்கடிந்து கொண்டா. இப்படித்தானக்கா தனியஇருந்தாவென்றால் அப்பாவையும் தம்பியையும் நினைத்து அழுது கொண்டிருப்பா.எப்பிடியக்கா இவவைத்தனிய விட்டிட்டு அங்கபோய் நான் நிம்மதியாயிருப்பன். நான் போகேல்லையென்றாலும் கேட்கிறாவில்லை. அப்ப என்ன இப்பிடியே இருக்கப்போறியே!மகேஸ் திடீரெனக்கடிந்து கொண்டாள்.இப்பிடித்தானக்கா இவவுக்கு ஒன்றும் சொல்லக்கூடாது திடீரேனக்கோபம் வந்திடும்.சரி சரி விடுங்கோ அம்மாவில எந்தப்பிழையுமில்லை.பெத்தவளின்நிலையில் இருந்து பார்த்தால் தான் தெரியும். புனிதம்.உனக்கு எத்தனை வயது உன்னோட்டை பிள்ளைகள் குடியும் குடித்தனமுமாக இருக்கேக்கை---- அப்பா கூட உயிரோடையில்லை. பாவம் அம்மா எத்தனை நாளைக்கு

கருகப்பிலையென்று அசத்தியிருந்தார் டெய்சி ரீச்சர். வெள்ளைக்கொச்சிக்காய் இங்க வாங்கலாமே எங்கடை பிலவுக்குள்ள நாங்கள் நிறைய வச்சிருந்தனாங்கள்.என்னம்மா புனிதம் தாயைப்பார்த்தாள். அதெல்லாம் இப்ப அடிக்கெட்டுப் போச்சுதும்மா எங்களைப்போல. மகேஸ் பெருமூச்சுடன் பதிலளித்தாள். இதை நான் தேடித்திரிஞ்சு நீர் கொழும்பு சந்தையில கண்டு பிடிச்சன் ஒரேயொரு மனுசிதான் வைச்சிருந்ததுகருவாட்டுப் பொரியலைப் போட்டுச்சாப்பிடுங்கோ மேரி தானே மீனைக்கீறிஅளவாக உப்புப்போட்டு எனக்காகக் கொண்டு வந்து தந்தது.நல்ல ருசியாக இருக்கும்.இந்தப்பொரியலின்பக்குவம் மேரி எனக்குக்காட்டித்தந்தது.ஒரு சின்னத்துண்டுகருவாட்டுடன் ரெண்டு மூன்று பீங்கான் சோறு சாப்பிடலாம். அவ்வளவு ருசியாக இருக்கும். இந்தக்கருவாட்டுப்பொரியலுக்கு சம்பா அரிசிதான் நல்லம் என்று மேரி சொன்னாள். எனக்கென்றால் சிவத்தப்பச்சை அரிசிச்சோறுதான் விருப்பம் புனிதம் நீ சொல்லிறுதைப்பாரத்தால் ஒவ்வொருகறிக்கும் ஒவ்வொரு சோறல்லோ காய்ச்சவேணும். மகேஸ் பகிடியாகச்சொன்னபோது எல்லோரும் சேர்ந்து சிரித்தார்கள் உங்களுக்கு சிவத்தப்பச்சையரிசிச்சோறுதான் விருப்பம் என்ன? எங்க்டை பகுதியில கமக்காரர் எல்லோரும் அப்படித்தான் ரீச்சர்.ஏன் உங்களுக்கும் தெரியும்தானே. இந்தச்சண்டைக்குப்பிறகு எது என்று கிடக்கு ஒருவேளை கஞ்சிக்குச்சனம் படுகிறபாடு காய்ச்சிய கஞ்சியைக்குடிக்கமுடியாமலே ஓடி ஒழியவேண்டிய கட்டம். பொய்சொல்லேல்ல ரீச்சர் பல வருடங்களுக்குப்பிறகு இவ்வளவு கறிசோத்தை இண்டைக்குத்தான் பார்க்கிறம்.எங்கடை பகுதிச்சனங் களென்ன ஒன்றுமில்லாமல் இருந்தஆட்களே நெல்.காய் கறி மீன் கச்சான் பழங்கள் என்று உங்களுக்குத்தெரியும்தானே ரீச்சர் அந்தக்காலங்களில் பாலும் தேனும் இறைச்சியென்று என்னத்துக்குக்குறை எல்லாம் போச்சுது.கூக்குரலும் குண்டு மழையும் சிதறி ஓடுகிற சனங்களின் அழுகையொலியும் கிப்ர் கெலியென்று காதைப்பிழக்கும் சில வேளை மூன்று நாலு நாளைக்குப்பிறகுதான் தெரியும் எந்த வீட்டில இழவு விழுந்ததென்று... இப்பிடி எத்தனை சனம் உங்களுக்குத்தெரிஞ்சி சனங்களில் கனபேர் போய்ச்சேர்ந்திற்றுதுகள்.பச்சைப்பாலகர் கூட துடிக்கத்துடிக்க ....பெத்ததாயால் பார்த்துக்கொண்டு வாழேலுமே.மகேசுக்கு துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு வந்தது.கண்கள் கலங்கியது கை மட்டும் சோற்றைப்பிசைந்தது.இணேய் அம்மா பேசாமல் சாப்பிடணை.இதெல்லாம் அக்காவுக்கும் தெரியும்.அவவும் சாப்பிடாமல் உங்களையே பார்த்துக்கொண்டு இருக்கிறா.பிறகு ஆறுதலாகக் கதைக்கலாம். அதன்பிறகு சாப்பாட்டின்சுவை

www.padippakam.com


இருக்கிறது.மகேசும் எழும்பி கதிரையில் அமர்ந்து கொண்டாள். பீங்கான்களில் சோற்றை பரப்பிய டெய்சி ரீச்சர் அளவாகக் கறிகளைப்போட ஆரம்பித்தார்.அக்கா நிற்பாட்டுங்கோ இஞ்ச இவ்வளவு போட்டிருக்கிறியள்.அம்மாவுக்கு வேறை அள்ளிப்போட்டிருக்கிறியள்.இவளவும் உவ சாப்பிடமாட்டா.அவ சாப்பிடுவா நீங்கள் சத்தம்போடமல் சாப்பிடுங்கோ டெய்சி ரீச்சர் டக்கென்று பதில் சொன்னார்.புனிதத்திற்கும் சரியான பசிதான்.சாப்பாடு அவள் வாயில் எச்சிலை வரவழைத்தது.சரியாக உட்காருவதற்கு முன்பாகவே கறிகள் எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து வாயில் போட்டு மெதுவாக மென்று ருசி பார்த்தாள்.எல்லாமே சுப்பரக்கா. டெய்சி ரீச்சர் அதைக்கேட்டு சிரித்துக் கொண்டார்.பிறகென்ன இந்தச்சாப்பாடுகள் இப்பமுடியு மாக்கும். எனக்கென்றால் சந்தோசமம்மா. அதுக்காகத் தானே இவ்வளவு ஆசையோடை சமைச்சனான். மகேசும் இதைக்கேட்டுச் சிரித்துக்கொண்டாள்.இப்படியெல்லாம் ஒன்றாக இருந்து சாப்பிட்டு எத்தனை காலங்கள்.ரீச்சர் நீங்களும் எங்களுடன் இருந்து சாப்பிடுங்கோ.நாங்கள் போட்டுச்சாப்பிடுவோம். எனக்கும்பசி குடலைப்பிடுங்கிது டெய்சி ர்ச்சரும் அவர்களுக்குப்பக்கத்தில் இருந்தகதிரையில் உட்கார்ந்து கொண்டார் அக்கா இது முத்துச்சம்பா அரிசி போல இருக்கு என்னம்மா அப்படித்தானே எனக்குச்சம்பா என்று தெரியும் முத்துச் சம்பாவோ என்னவோ தெரியவில்லை உங்களக்குப்பிடிக்கு மென்றுதான் இதை வாங்கினேன். ஏன் புனிதம் நல்லாயில்லையே நல்லாயிருக்கு சும்மாதான் கேட்டனான். புனிதம் சொன்னது சரிதான் இது முத்துச் சம்பாதான் நாங்களும் முந்தி ஒருகாலம்.சாப்பாட்டுக்கென்று விதைக்கிறனாங்கள்.இப்ப எங்கடை பக்கங்களில் விதைக்கிறது குறைஞ்சு கொண்டு வந்திற்றுது இப்ப எங்கை புதிசு புதிசா நெல்லுகளைக்கண்டுபிடிச்சு விதைக்கிறாங்கள் சின்னட்டி .பச்சைப் பெருமாள் நாங்கள் முன்பு சாப்பாட்டிற்கு என்று விதைப்பம் இப்ப அதுகளும் வர வரகுறைஞ்சு கொண்டு வந்திற்றுது.எங்கடைகாலம் வேறை இப்ப் இருக்கிற காலம் வேறை.இப்ப கலிகாலம் மனிதரை மனிதரே! கொல்லுகின்ற காலம்.அம்மாதொடங்கியிற்றா .அக்கா நீங்கள் சாப்பிடுங்கோ! பாரை மீன் குழம்பு கரும்சிகப்புடன் கட்டியாக எண்ணெய்பிறந்திருந்தது.எவ்வொரு கறியையும்புனிதம் ருசித்துச்சாப்பிட்டாள்.தீயலுக்கு நிறையப்புளி மாங்காய் வெட்டிப்போட்டிருக்கிறியள்.இது என்ன? வெள்ளைக்கொச்சிக்காயே! எங்க வாங்கினன்ங்கள்.தீயலுக்கு புளியும் உப்பும் உறைப்பும் சுண்டிக்கொண்டு இருக்கவேண்டும். குழைத்து வாயில் போடுவதற்கு முன்பே வாயில் எச்சில் ஊறியது.நிறையவே மஞ்சள் பவுடர்


படிப்பகம்

www.padippakam.com



தொடர்கதை

அத்தியாயம்-6

# காவல்


மாவிடட்பிரியன்

புனிதம் கண்விழித்தபோது காலை எட்டு மணியாகியிருந்தது. மேரி இரவு போனபின்பே அவர்கள் இரவுச்சாப்பாட்டை முடித்துக் கொண்டார்கள். மகேசும் புனிதமும் மனமாரச்சாப்பிட வேண்டும் என்பதற்காக. டெய்சி ரீச்சர் விதம் விதமாகச்சமைச்சு வைத்திருந்தா. என்னக்கா இவ்வளவு சாப்பாடு சமைச்சு வைச்சிருக்கிறியள்.நாங்கள் இவ்வளவையும் சாப்பிட்டுத்தானாக வேண்டுமோ! பின்ன என்ன?இவ்வளவையும் எனக்கே சமைச்சனான். நீங்கள் இருவரும் தான் இத்தனையும் சாப்பிட்டு முடிக்கவேண்டும். டெய்சி ரீச்சர் சிரித்தபடி சொல்லிக் கொண்டார்.குழம்பு. பொரியல் தீயல். கத்தரிக்காய்க்கூட்டு பிடித்தமானபாரை மீனில்குழம்பு.தீயல் நெத்தலி. கருவாட்டுப் பொரியல்.ஈரப்பலாக்காய் வறை.ஒவ்வொரு பாத்திரமாகப் புனிதம் திறந்து பார்த்தாள்.கறியின் வாசம் மூக்கைத்துளைத்தது. ரீச்சர் நன்றாகச் சமைப்பா என்பது முன்னமே புனிதத்திற்கும்.மகேசுக்கும் தெரியும். டெய்சி ரீச்சரின் கறியைச் சாப்பிட்டு பல தடைவைகள் புனிதம் பாராட்டியிருக்கின்றாள்.அந்த அளவிற்கு சமையலில் பக்குவமும் திறமையும் தெரிந்தவர் டெய்சி ரீச்சர்.புனிதம் எழும்புங்கோ கறியள் ஆறப்போகிது.வாற வழியில நன்றாகவும் சாப்பிட்டிருக்கமாட்டியள். பசியில அம்மாவின்ர முகமும் வாடிப்போயிருக்கு. எழும்புங்கோணை.டெய்சி ரீச்சர் அன்பாக அழைத்தார்.புனிதம் உனக்குப்பிடித்தமான பாரைக்குழம்பு நெத்தலித் தீயல் மேரியிடம் சொல்லி கரவலையிலிருந்து உயிரோடை துடிக்கத் துடிக்கக் கொண்டுவந்து சமைச்சது.

எனக்கு நெத்தலித்தீயல் பிடிக்குமென்பதை அக்கா நீங்கள் என்னும் மறக்கேல்லை.விளையாட்டு விளையாட்டாக எவ்வளவு காலமக்கா நாங்கள் சந்தித்து.அன்று இருந்தது போல் அன்பிற்கும் மரியாதைக்குரியவராகவே டெய்சிரிச்சர் இருந்தார். காலத்தின் இடைவெளியால் உருவத்தில் மாத்திரம் மாற்றமிருந்தது. அவரின் உள்ளம்மட்டும் அன்று பார்த்த டெய்சி ரீச்சராகவே இன்னும் இருந்தது.சொந்த உறவுகளைப்போல் பற்றும் பாசமும் எங்கையோ பிறந்து வளர்ந்த டெய்சி ரீச்சரிடம் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது.பாவம் அக்கா. இந்த மனதிற்குஎன்றைக்கும் அவ நன்றாக இருக்க வேண்டும்.என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள். அம்மா எழும்புங்கோவனணை ஓம்பிள்ளை சாப்பட்டுவிட்டுப்படுப்பம்.உடம்பெல்லாம் ஒரே அலுப்பாக

www.padippakam.com





## புத்தரின் படுகொலை

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.

இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர் பெயர்
இல்லை
பின் ஏன் கொன்றீர்?"
என்று சினந்தனர்.

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஒரு ஈயினைக்கூடச்
சுட முடியாது போயிற்று எம்மால்
ஆகையினால் தான்..."
என்றனர் அவர்கள்.

"சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.

சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச்
சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்.
சிகாலோகவாத சூத்திரத்தினைக்
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும் தான் சாம்பரானது.

—எம். ஏ. நுஃமான்
(1981 அலை–18)
சிகாலோகவாத சூத்திரம், தம்மபதம் ஆகியன
பௌத்த மத அறநூல்கள்.

(நன்றி - நூல்த்தேட்டம்)



படிப்பகம்

www.padippakam.com

ஆடு மாடு இறைச்சிக்கடைகளில்
தமிழன் கறியையும்
சேர்த்து விற்றார் ...!

தோடு
குத்தியிருந்ததால்
எந்தக் கதையுமின்றி உயிருக்கே
விடை கொடுத்தார்...!

உனக்கு
சேர்ந்திருக்கப் பிடிக்காதெனின்
ஒருவார்த்தை போதும் நாங்களாகவே விலகியிருப்போமே
ஏன்
அனுமான் எரித்ததைப் போல்
எங்களை சுடுகாடாக்கினீர்...?

செங்கம்பளம்
விரித்து எங்களை
வழிஅனுப்பி இருக்காவிட்டாலும்
செங்குருதியில் நனைக்காமல் விட்டிருக்கலாமே
அதனால் தான்
இது கறுப்பு யூலை அல்ல
தமிழன் தலையில் விழுந்த நெருப்பு யூலை ....!

கவிதை
மட்டுவில் ஞானக்குமாரன்

## காதல்

கண்டால் உன்னை
மனதில் கண்ணோரும்
உன் குரல் கேட்டால்
செவியில் தேன் பாயும்
கனி இதழ் உண்டால்
இன்பம் பரிமாறும்
மோப்பம் முகர்ந்தால்
மோகம் தலைக்கேறும்
பார்த்தால் பசி தீரும்
இதயம் உன்னிடம் சரணாகும்.

*திருமதி ஜெயா நடேசன்* - Havixbeck


படிப்பகம்

www.padippakam.com


நாட்டின் இரு
குடிகளையும் சமனாக ஏற்காமல்
இனத்துக்கொரு சட்டமாய் உருவாக்கினார்கள்
சாட்சிகள் கூடாதென்று
எச்சங்களை மண்ணுக்குள்
எருவாக்கினர்...!

வெள்ளையனை
வெளியேற்றும் வரை
ஒன்றாகத் தானே பாடுபட்டோம்.
அவன் போனபின்னும் நன்றாகத்தானே இருந்தோம்.

பொன்னண்ணாவிடமிருந்து
புகையிலையும் பனாட்டும்
பெற்றுக் கொண்டு
பொடிமெனிக்கேயிடம் இருந்து
கித்துள்பாணியும் கோப்பியும்
பண்டமாற்று செய்ததும் உண்மை தானே
பிறகென்ன நடந்தது இடையிலே
அப்போ
இராமநாதனை
சிரசிலே சுமந்ததும்
அன்பாக அணைத்ததும் பேசியதும்
வேறென்ன பொய் தானே
ஏன் இப்படியென எண்ணுவதற்கிடையில்
எல்லாம் முடிந்துவிட்டது ..!

கொழும்புக்கு
கொழுப்புப் பிடித்துக்கொண்டது
தமிழனைக் கொன்றதால் இலங்கை
இழுக்கைத் தேடிக்கொண்டது.

கண்ணின்
மணியான தமிழை
நேசித்த குட்டிமணியின் கண்கள்
தோண்டப்பட
வெட்டிச் சாய்க்கப்பட்டனர்
ஏனைய தமிழ் தோழர்கள்.

www.padippakam.com

## கறுப்பு யூலை

அந்தக் காட்சிகள்
இன்னும் தான் மறைய மறுக்கின்றன.
ஆட்சி
நிலைக்க வேண்டி
செய்த அக்கினிக்குண்டத்தில்
எரியாகிப்போன உயிர்களின் ஈர நினைவு நாள் இது

ஆதலால்
இது கறுப்பு யூலை அல்ல
தமிழனின் தலையில் விழுந்த நெருப்பு யூலை ...!

தாரை
தாரையாய் கண்ணீரும்
பீறிட்ட ஆறாக செந்நீரும்
ஓடிய
கொடிய நினைவிது .
நடப்பது என்னவென்று அறியாது
உயிர்கள் நித்திரைப்பாயிலேயே நீறாகிப்போன கதை இது ...


இமைகளாக
இருந்து காக்கவேண்டிய விழிகளை
சுமைகளாக எண்ணி
இமைகளே விழிகளை சுட்டெரித்த சரித்திரம் ..

பேரினவாதம்
எமை அழிக்க
வகுத்த புதிய தந்திரம் ...!

அரசியல்
பேய்கள் குளிர் காய
அப்பாவிகள் ஏராளம் எரியூட்டப் பட்டார்கள்
ஒன்றாய் வாழ்ந்த மக்களை
உரசிப்பார்த்து
வேடிக்கை பார்த்தார்கள்.
தப்பென்று தெரிந்தும் யாரும் தடுக்கவில்லை
எப்படித் துடித்தபோதும் யாருமே
வருந்தவில்லை
ஒரு


படிப்பகம்

www.padippakam.com

## பொதுநூலக அழிப்பு நாள்

ஆசியக்கண்டத்தின் அரும்பெரும் நூலகம்
அறிஞர்கள் பலர் கூடி கட்டிய அறிவகம்
மாட்சிமை மிக்க மகத்தான பொதுநூலகம்
மங்காத் தமிழரின் அறிவான கல்வி அகம்
தங்க தமிழனின் சொத்து அது
தன்மான தமிழனின் உயர்ச்சி அது
திட்டமிட்ட சிங்கள அரசின் தீ வைப்பால்
81 மேமாதம் 31 நள்ளிரவு நேரம்
தீக்கிரையானது எங்கள் அறிவுப்பெட்டகம்
அக்கினிக்கு ஆகுதியாகி அழிந்தது தமிழனின்சொத்து
கல்வியின் கருவை சிதைத்தனர் கொடியோர்
கரும்புகையில் போக்கினர் எங்கள் சொத்தை
சிங்கள காடையரின் சிரங்கெட்ட செயலால்
சின்னா பின்னமாகியது சிறப்பான நூலகம்
வகப்பான் பலரை வாழ வைத்த கல்விச்சொத்தை
வகையாக தீ மூட்டி போக்கினர் காடையர்
சங்க கால சான்றோர் தேடிய அறிவுச் சொத்து
சரித்திரம் இன்றிப் போனது இப்போ
நூலகம் என்ற யாழ் அகத்தை மீண்டும்
பொது நூலக மாக்கி முனைவோம்
நூல்கள் பல சேர்த்து ......
நுண்மதியை வளர்ப்போம்

நகுலா சிவநாதன்
செல்ம் யோர்மனி


படிப்பகம்

www.padippakam.com

# காத்திருந்தது போதும்

சிலையாக நாளிங்கு சீவனற்று இருப்பதுவோ
சிந்திக்காமல் நீங்களும் சீவனம் நடாத்துவதோ
உலைக்களத்தில் என் மனம் உருகி உழலுவதோ
உங்களின் நினைப்பு எனை வாட்டிவதைப்பதோ
தலையணையில் தலைசாய்த்து தூங்கிடாது
தயாகம் நோக்கி தாவியிறங்கி வந்திடுங்கள்......

இலையினை மேலும் துன்பம் என்று சொல்லி
இங்கே தினமும் இன்பம் வழிந்தோடுகிறதே
குலையாத கட்டுக்கோப்பின் கொடுப்பனையால்
கூடிவந்திட்ட அமைதியின் கூரிய உச்சத்தில்
விலைபோகின்ற விண்மானிடராய் ஆகிடாது
வீரிய மனத்தோடு எனை நாடியே வந்திடுங்கள்......

உலக உருண்டையைக் கையில்வைத்து
ஊரூராய் இடம்தேடி அகதியாய் அலைவதுவோ
கலகம் தணிந்ததால் களிப்பான எம் மண்ணில்
கண்முன்னே சமாதானப்புறா பறக்கின்றதே
கலைந்திடாத கனவாக உங்களின் நினைப்பு
கன்னியவளை கனலாகச் சுடுவதை தடுத்திடுங்கள்......

தலையாய கடமைகள் இங்குபல காத்திருக்க
தனிமையில் காலத்தைக் கடத்துவது நியாயமா
விலையில்லா வித்தைகளையங்கு விதைத்துவிட்டு
வேற்று நாட்டில் வெறுமையாய் முடங்குவதோ
கலையிலும் கல்வியிலும் மென்மேலும் சிறந்திட
கண்டிப்பாக தாயகத்துக்கு திரும்பிவந்திங்கள்......

வேலையும் வசதிகளும் வேதனமும் கூடிவிட்டால்
வேற்றுநாட்டில் அடிமையாக விரும்பிவாழ்வதோ
வலையில் சிக்கிய மீனைப்போல இவளையிங்கே
வதைக்கவிட்டு நீங்களங்கே வசதியாய் வாழ்வதோ
மலையாக நிமிர்ந்துவிட்ட எம்தாய் மண்ணுக்கு
மறுபடியும் நீங்கள் வந்து மகிழ்வாய் இறங்கிடுங்கள்......

நிலையாக நீங்கள் நட்டுவிட்ட காதற்பயிரின்று
நின்று தளிர்விட்டு நிரந்தரப்பூ பூத்துவிட்டது
விலையில்லாச் சமாதானம் வந்துவிட்ட பின்னும்
விரும்பியிங்கு வந்திடாததன் மர்மம்தான் என்ன
கலையாத காதலைக் கண்களிலே சுமந்தபடி
காலமெல்லாம் உங்களுக்காகவே காத்திருக்கிறேன்......

- அம்பலவன்புவனேந்திரன்




படிப்பகம்

www.padippakam.com



# கவிதைச் சோலையில்



## ரசனை

பிரயாணத்தின் போது
கேட்ட இனிமையான
பாடல்கள் இதயத்தை
வருடிய போதும்
கண்டக்டர்
தரவேண்டிய மீதிக்காசில்
கவனமிருந்ததால்
ரசனையை மறந்தது மனது!

## முரண்பாடுகள்

வீட்டின் வறுமை நிலையை
மாற்றிட எண்ணி
வெளிநாடு செல்லும்
அம்மா!
வசதிகள் பெருகியதில்
திரும்பியது வாலிபம்
தேடியலைகிறார்
புது மனைவியை அப்பா!

வாசுகி ஆனந்தன்
மட்டக்களப்பு

## அன்பிற்கும் உண்டோ---??

அன்பு என்னும் சக்தி மூலம்
பண்பு என்ற முறைவழியே
நட்புத் தொடக்கம் பாசம் வரை
உண்டாகும் பல உறவு!

உறவு மூலம் உரிமை கொண்டு
உரிமை வழியே கடமை வர
மடமை என்னும் மாயை அகல
உதவுவது இவ்வன்பு!!

அன்பு கொண்டோர் பிரியும் போது
ஆனந்தத்தின் முடிவு காண்பார் ஆயினும்
பழமை பகமை பல எண்ணி
பழகிக் கொள்வதே மனித இயல்பு

இப்படியான மெய் அன்பிற்கும்
உண்டோ?? பொய், களவு, பொறாமை
இல்லை! நிச்சயம் இல்லை!!
இது சந்தேக கிப்பிரிநிங்கலைத் தாண்டி
சந்தோஷக் காற்றில் ஆடி
மனிதனைத் தெய்வமாக்கும்
புனிதத் தன்மை மட்டும் உண்டு

தீபா பாலசிங்கம்
கொழும்பு



படிப்பகம்

www.padippakam.com



# குறளும் பொருளும்

## 17. நண்பரை ஆராய்ந்து அறிதல்

நட்பினை விரும்பி ஒருவனோடு நட்புக் கொண்டபின் அவனை விடுதல் உண்டாகாது; ஆகையால், ஆராயாது நட்புச் செய்தல் போலக் கேடு தருவது பிறிதில்லை. 791

பலகாலும், பல வகையாலும் ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவன், முடிவில் தான் சாதற்குக் காரணமான துன்பத்தைத் தானே உண்டாக்கிக் கொள்வான். 792

ஒருவனது குணத்தையும், குடிப்பிறப்பையும், குற்றத்தையும், அவனது சுற்றத்தையும் அறிந்து நட்புக் கொள்ள வேண்டும். 793

உயர்ந்த குடியில் பிறந்து தனக்கு வரும் பழிக்கு அஞ்சுபவனைப் பொருள் கொடுத்தாவது நட்புக் கொள்ள வேண்டும். 794

உலக வழக்கத்திற்கு மாறுபடச் செய்வதை விலக்கியும், மீண்டும் செய்தால் நெருக்கியும், திருத்தும் வலிமையுள்ளவரை ஆராய்ந்து நட்புக் கொள்க. 795

கேட்டிலும் நல்லறிவு உண்டாகும்; அக்கேடு நண்பரின் இயல்புகளை நீட்டி அளந்து பார்க்கும் அளவுகோல் ஆகும். 796

அறிவில்லாருடன் கொண்ட நட்பை விலக்கிக் கொள்வதே ஒருவனுக்குச் சிறந்த ஊதியமாகும். 797

ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயலை விலக்கி விட வேண்டும்; துன்பக் காலத்தில் கைவிடும் நட்பை விட்டுவிட வேண்டும். 798

கேடு வருங்காலத்தில் விட்டுவிட்டுச் சென்ற நட்பை எமன் கொல்லும் நேரத்தில் நினைத்தாலும் நெஞ்சம் சுடும். 799

குற்றமற்றவர் நட்பைத் தழுவிக்கொள்ள வேண்டும்; ஒப்பில்லாதவர் நட்பை ஒன்று கொடுத்தாகிலும் விட்டுவிட வேண்டும். 800



படிப்பகம்

www.padippakam.com



# குறளும் பொருளும்

## 17. நட்பாராய்தல்

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. 791

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும். 792

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு. 793

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு. 794

அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். 795

கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல். 796

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல். 797

உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணாற்றறுப்பார் நட்பு. 798

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும். 799

மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு. 800

படிப்பகம்

www.padippakam.com

# கவிஞர் யாழ்ஜெயநந்தனின் சிந்தனை முத்துக்கள்:

## நிறைவு

நகைக் கடைக் கண்ணாடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தினக் கல்லைப் பார்த்துத் தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது.

'எனக்கு ஏன் மதிப்பில்லை? நானும் ஒரு கல்தானே....' என்று ஒலமிட்டது.

தெருவோரத்தில் கிடந்த கட்டப்பாறை கூறியது:-

'ஏ குறுணி! காலம் முழுதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக்கொண்டு பலரும் பார்க்க தெருவில் கிடக்கிறாய். ஆனால், இரத்தினக்கல் அப்படியா? நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும் வரை வெளியில் தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத்தானே உரு வாக்கிக் கொண்டிருந்தது.'

'அப்படியென்றால்...?' என்று இழுத்தது குறுணிக்கல்.

கட்டப்பாறை சொன்னது:-

'நிறைவாகும் வரை
மறைவாக இரு'.

## புடம்

காட்டில் இருந்த மூங்கில் ஒருநாள் கத்தியால் வெட்டப் பட்டது. நெருப்புக் கம்பி தன்னைத் துளைத்தபோது 'ஐயோ உடல் புண்ணாகிறதே..' என்று கதறி அழுதது.

'கொஞ்சம் பொறுமையாக இரு...'. என்று மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று.

மூங்கில் புல்லாங்குழல் ஆனது.

மேடையில்—

உலகமே மயங்கும் இசையை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனி சிலிர்த்தது காற்று.

அது சொன்னது

'புண்பட்டவன்
பண்பட்டவன்.'



படிப்பகம்

www.padippakam.com



## சாதுரியத்திறன் கேள்வி 18

1. உலகில் குறைந்த மக்கள் தொகை கொண்ட நகரம் எது??
2. உலகில் பைபிளுக்கு அடுத்தபடியாக அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் எது??
3. குளோனிங் முறையில் முதலில் உருவாக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் பெயர் என்ன??
4. வயிறே இல்லாத உயிரினம் எது??
5. துரியோதனனை மூத்தவராகக் கொண்ட கௌரவர்களின் சகோதரியின் பெயர் என்ன??
6. கி.மு.4000ஆண்டளவில் பூமியில் தோன்றிய தமிழர்கள்வளர்க்கும் மரம் எது??
7. நாதஸ்வரம் செய்யப் பயன்படும் மரம் எது??
8. கலண்டரை வடிவமைத்தவர் யார்??
9. ஆசியாவில் மட்டும் பயிராகும் வாசனை மரம் எது??
10. விமான ரயர்களில் நிரப்பப்படும் வாயு எது??

**பக்கங்களைப் புரட்டுங்கள் விடைகள் கிடைக்கும்.**

- பணத்திடம் நம்பிக்கை வைக்காதே, நம்பிக்கையிடம் பணத்தை வை.
- துன்பமும் மரணமும் திருடனைப் போல் வருவன.
- சிந்திக்காமல் பேசுவது குறிவைக்காமல் சுடுவதற்கு ஒப்பாகும்.
- இன்பத்தை பகிர்ந்து கொண்டால் இரு மடங்காகும், துன்பத்தைப் பகிர்ந்து கொண்டால் பாதியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு – 15

## (வைகாசி - ஆனி 2003)

| | | | |
|---|---|---|---|
| ஆ | ல | ய | ம் |
| டி | ண் | க | ணை |
| ம் | ம | ர | ர் |
| ச | ட் | டி | வ |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி - 18

## (ஆடி – ஆவணி 2003)

| | | | |
|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 |
| 05 | 06 | 07 | 08 |
| 09 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

**இ.–வ.:**

01-04: ஊர்சுற்றிப்பார்த்தல் இப்படியும் கூறலாம்

11-12: கொடிய மிருகம்

**வ.–இ.:**

08-06: இது இல்லாவிடின் உயிரினம் இல்லை

16-15: கூடுகட்டப்பயன்படும்

**மே.–கீ.:**

01-13: நாம் இப்படியாக இருந்தால் சுகவாழ்வுதான்

11-15: மாடுவிரும்பி உண்பது

**கீ.–மே.**

11-03: பாம்பு வாழும் இடம்

14-06: தானியவகை ஒன்று

-முடிவு திகதி 20.08.2003-



படிப்பகம்

www.padippakam.com



# சிறுவர்போட்டி முடிவுகள்

(வைகாசி – ஆனி 2003)

பங்குகொண்டவர்களும் , பரிசு பெறுபவர்களும்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செல்வி: | றொபினா தவராஜ் | - Wadgassen | ✓ | | |
| செல்வி: | சுகிதா தவராஜ் | - Wadgassen | | | ✓ |
| செல்வி: | அனுசியா அருமைத்தரை | - Wiesloch | ✓ | ✓ | ✓ |
| செல்வி: | பிரியங்கா அருமைத்துரை | - Wiesloch | ✓ | ✓ | ✓ |
| செல்வி: | ஆன்வினோலினி நடேசன் | - Havixbeck | | ✓ | ✓ |
| செல்வி: | பானுரதி புவனேந்திரன் | - Duisburg | ✓ | | ✓ |
| செல்வி: | தர்சினி கமலநாதன் | - Solingen | ✓ | ✓ | |
| செல்வி: | ரஜனி கமலநாதன் | - Solingen | ✓ | ✓ | |
| செல்வி: | கிசானா நாகேந்திரம் | - M'Gladbach | ✓ | | |
| செல்வி: | பிரியந்தா யோகீஸ்வரன் | - Göttingen | ✓ | ✓ | ✓ |
| செல்வி: | துவாரகா தேவராசா | - Meerbusch | ✓ | | |
| செல்வி: | ஆரணி வாகீசன் | - Switzerland | ✓ | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செல்வன்: | வியாசன் செல்வராசா | - Castrop Rauxel | ✓ | ✓ | ✓ |
| செல்வன்: | பிரணவன் யோகராசா | - Düsseldorf | ✓ | | ✓ |
| செல்வன்: | சாருஜன் பிறேம்குமார் | - Bad Menenberg | ✓ | | |
| செல்வன்: | அஸ்மிர்தன் சிவரஞ்சன் | - Wesseling | ✓ | | |
| செல்வன்: | சயன் வாகீசன் | - Switzerland | ✓ | | ✓ |
| செல்வன்: | ஜக்ஸன் ஜீவரட்ணம் | - Böblingen | ✓ | | ✓ |
| செல்வன்: | ஜோகான் ஜீவரட்ணம் | - Böblingen | ✓ | | |
| செல்வன்: | பானுஸ்கந்தா புவனேந்திரன் | - Duisburg | ✓ | | |
| செல்வன்: | சுந்துரு அற்புதராசா | - Soest | ✓ | | ✓ |
| செல்வன்: | இலிங்காதரன் கமலநாதன் | - Solingen | | ✓ | |

– கணக்குப்பிடியுங்கள் போட்டியில் பரிசு பெறுபவர்:
செல்வி. கிசானா நாகேந்திரம் - Mönchengladbach

– வினாவிடைப்போட்டியில் பரிசு பெறுபவர்:
செல்வி. அனுசியா அருமைத்தரை - Wiesloch

– சிறுவர்குறுக்கெழுத்துப்போட்டியில் பரிசு பெறுபவர்:
செல்வன். சுந்துரு அற்புதராசா - Soest



படிப்பகம்

# வினாவிடைப்போட்டி – 89
## (ஆடி + ஆவணி 2003)

1. இலங்கையில் பல நதிகள் ஓடுகின்றன. உங்களுக்குத் தெரிந்த ஐந்து நதிகளின் பெயர் களைக்குறிப்பிடுக...

2. இலங்கையின் வட பகுதியில் பல சிறிய தீவுகள் காணப்படுகின்றன. உங்களுக்குத் தெரிந்த தீவுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. உங்களுக்குத் தெரிந்த ஐந்து அரபு நாடுகளின் பெயர்களையும் அவற்றின் தலைநகரங்களையும் குறிப்பிடுக.

4. இரத்தச்சுற்றோட்டத்தைச் கண்டுபிடித்தவர் யார்? இவர் எந்த நாட்டவர்? எத்தனையாம் ஆண்டு?

5. பின்வரும் சொற்களை உயர்திணை, அஃறிணைச் சொற்களாக வகுக்குக...
(யானை, பாகன், ஓலை, மன்னன், பந்து, மந்திரி, மரம், மக்கள், தம்பி, பூவரசு)

| உயர்திணை: | அஃறிணை: |
|---|---|
| ________ | ________ |
| ________ | ________ |
| ________ | ________ |
| ________ | ________ |
| ________ | ________ |

6. „புத்தகம்" என்னும் தலைப்பில் 5 வசனங்கள் எழுதுக...
1.)
2.)
3.)
4.)
5.)

- சரியான விடைகளை எழுதி „மண்" சஞ்சிகையின் முகவரிக்கு 20.08.2003க்கு முன்னர் அனுப்பிவைக்கவும். அதிஸ்டசாலிக்குப் பரிசு வழங்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com


# வினாவிடைப்போட்டி முடிவு – 88
## (வைகாசி + ஆனி 2003)

1. தமிழீழப் பிரதேசத்தில் உப்புவிளையும் பிரதான மூன்று இடங்கள்...
   1. ஆனையிறவு
   2. மன்னார்
   3. செம்மணி

2. இலங்கையிலுள்ள பிரதான நீர்ப்பாசனக்குளங்கள் ஐந்து...
   1. கட்டுக்கரைக்குளம்
   2. இரணைமடுக்குளம்
   3. கல்லோயாகுளம்
   4. வவுனிக்குளம்
   5. பராக்கிரமபாகுசமுத்திரம்

3. உலகில் சில நாடுகளில் கடல் இல்லை. அவற்றில் உங்களுக்குத் தெரிந்த ஐந்து நாடுகள்...
   1. ஆப்கானிஸ்தான்
   2. கஸஸ்தான்
   3. சுவிஸ்லாந்து
   4. ஒஸ்த்திரியா
   5. ருமேனியா

4. மின்காந்தத்தை (Elektromagnet) கண்டுபிடித்தவர் W. ஸ்ரெஜியோன். இவர் இங்கிலாந்து நாட்டவர் 1824ம் கண்டுகண்டுபிடித்தார்.

5. பெயர்ச்சொற்கள் ஐந்து:

| பெயர்ச்சொற்கள் ஐந்து: | வினைச்சொற்கள் ஐந்து: |
|---|---|
| கண்ணன் | பாடினான் |
| பலாமரம் | ஆடினான் |
| வீடு | சிரித்தாள் |
| புத்தகம் | நடந்தான் |
| பாடசாலை | ஓடினாள் |

6. „பனைமரம்" என்னும் தலைப்பில் 5 வசனங்கள்...
   1. பனைமரத்தை தற்பகதரு எனவும் அழைப்பர்.
   2. பனைமரத்தின் அத்தனை பாகங்களும் மனிதருக்குப்பயன்படும்.
   3. பனைவளம் வடகிழக்கு மாகாணங்களில் காணப்படுகிறது.
   4. தமிழர்களின் வாழ்வுக்குத் துணைநிற்பது பனைமரமாகும்.
   5. இனக்கலவரத்தால் பெரும்தொகையான பனைமரங்கள் அழிக்கப்–பட்டுள்ளன.


படிப்பகம்

www.padippakam.com

# 100 சொற்கள்

ஜேர்மனி Göttingen நகரைச் சேர்ந்த செல்வி. பிரியந்தா யோகஸ்வரன் அவர்கள் 100 சொற்களை எழுதி அனுப்பியுள்ளார். இவருக்கு மண் சஞ்சிகை பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கின்றது.

மாணவமணிகளே!
நீங்களும் நூறு சொற்களை கண்டுபிடித்து எழுதி 20.08.2003க்கு முன்னர் அனுப்பிவையுங்கள்.

## "ம" வரிச்சொற்கள்

001) மண்
002) மழை
003) மலை
004) மதி
005) மகி
006) மடி
007) மடு
008) மணி
009) மது
010) மடை
011) மறள்
012) மகன்
013) மலர்
014) மகவு
015) மணம்
016) மகரி
017) மகான்
018) மட்டி
019) மணக
020) மகிமை
021) மகிழி
022) மக்கு
023) மங்கை
024) மண்டை
025) மடம்
026) மரம்
027) மடல்
028) மகம்
029) மட்டை
030) மதன்
031) மதில்
032) மனைவி
033) மதியம்
034) மயிர்
035) மயில்
036) மகமை
037) மகவீர்
038) மருந்து
039) மனிதன்
040) மகுடம்
041) மக்கள்
042) மங்கல்
043) மச்சம்
044) மஞ்சம்
045) மராட்டி
046) மகாராணி
047) மயானம்
048) மகராசி
049) மரணம்
050) மடிப்பு
051) மட்டம்
052) மந்தம்
053) மறுபடி
054) மறுநாள்
055) மஞ்சரி
056) மஞ்சல்
057) மணாளன்
058) மண்புழு
059) மதுயம்
060) மரியாதை
061) மணமகள்
062) மத்தளம்
063) மண்டலம்
064) மந்திரம்
065) மகிழ்ச்சி
066) மங்கலம்
067) மங்களம்
068) மயக்கம்
069) மதித்தல்
070) மழுத்தல்
071) மறுத்தல்
072) மண்வெட்டி
073) மண்டபம்
074) மத்தியில்
075) மன்மதன்
076) மகரந்தம்
077) மன்னிப்பு
078) மதுபானம்
079) மத்தியானம்
080) மனை
081) மறைவு
082) மருதம்
083) மலர்தல்
084) மருட்சி
085) மலிவு
086) மலைப்பு
087) மறவர்
088) மறுப்பு
089) மன்னர்
090) மழித்தல்
091) மறுபக்கம்
092) மலையகம்
093) மன்றாட்டம்
094) மனச்சாட்சி
095) மருத்துவம்
096) மல்லாட்டம்
097) மருட்டுதல்
098) மனக்கோட்டை
099) மகோட்சவம்
100) மரபு

*செல்வி பிரியந்தா யோகஸ்வரன்* - Göttingen

இம்மாதம் சிறுவர்வட்டப்பகுதியில் பரிசு பெறுபவர்
செல்வி பிரியந்தா யோகீஸ்வரன் - Göttingen


படிப்பகம்

www.padippakam.com





ஆத்திசூடி விளக்கம்





## அஃகம் சுருக்கேல்

நெல், பயறு, உளுந்து, துவரை போன்ற தானியங்கள் நாம் உணவு தயாரிக்கத் தேவைப் படும், இல்லையா? இவைகளை எல்லோருமே பயிர் செய்து பெற முடியாது. கடைகளில் தான் வாங்க வேண்டும். வியாபாரிகளை தான் நம்பி இருக்க வேண்டும். மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பதுக்காதே—என் கிறோமில்லையா, இன்று? இதை அன்றைக்கே ஔவை இரண்டே வார்த்தைகளில் அழகாகக் கூறி னார். எல்லோருக்கும் பயன்படும் தானியங்களை உள்ளே வைத்துக் கொண்டு இல்லையென்று கூறாதே, அதிக விலைக்கு விற்காதே—அள வைக் குறைத்துக் கொடுத்து ஏமாற்றாதே என்று வியாபாரி களுக்கு அறிவுரை வழங்குகிறார் தமிழ்ப்பாட்டி. இரண்டே வார்த்தை களில் அஃகம்—தானியம்—சுருக் கேல்—குறைக்காதே, பதுக்காதே,

## கண்டு ஒன்று சொல்லேல்

பள்ளிக்கூடம் வகுப்பறை. ஆசிரியர் இன்னும் வரவில்லை. பாலு ஒரு மாணவனின் பென் சிலைத் திருடி விடுகிறான். கிட்டு அதைப் பார்த்து விடுகிறான். கிட்டு பாலுவின் நண்பன். ஆசிரியர் வருகிறார். திருடு கொடுத்த பையன், ஆசிரியரிடம் கூறுகிறான்—ஆசிரியர் விசாரிக்க கோபுதான் எடுத்தான் என பொய் சொல்கிறான் கிட்டு. கோபுவுக்குத் தண்டனை கிடைக்கிறது. குற்ற வாளி பாலு. தண்டனை பெற்றது கோபு. இதற்குக் காரணம் யார்? கிட்டுதானே? அவன் உண்மை யைக் கூறி இருந்தால் கோபுவுக்கு தண்டனை கிடைத்திருக்காது. ஆகையால்தான் ஔவையார் கூறுகிறார், கண்ணால் கண்ட தற்கு மாறாகப் பொய்ச் சாட்சி சொல்லாதே என்று.

படிப்பகம்


www.padippakam.com

# கண்டுபிடியுங்கள்! பார்க்கலாம்.

சிறுவர்களே! இந்தக் கூட்டுக்குள் அடைபட்டுள்ள
மிருகங்களைக் கண்டுபிடியுங்கள்!

இக் கூட்டில் உள்ள மிருகங்கள்

1. கி ங் வி சி ச் க ட ட் ஒ
2. றி ன் ப ம் ள ள் மு
3. ரை தி கு க் ரி வ
4. தை த் று சி
5. தை ழு க
6. லி பு
7. ம் க ரு மி டா ண் கா
8. ம் க ட ட் ஒ
9. ம் க ங் சி
10. ரை தி கு
11. னை யா



## அழகு குறிப்பு

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

முகத்திலும் வெளித் தோற்றத்திலும் அழகு நிலைத்திட நம் உள்ளம் மட்டும் தூய்மையாக இருந்தால் போதாது. உடலின் உள்ளுறுப்புக்களையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

உடல் என்னும் மெஷினை Over oil செய்யும் முறை தான் 12 டம்ளர் நீர் குடிப்பது. தினமும் 10 முதல் 12 டம்ளர் தண்ணீர் குடிப்பதால் தோலில் வறட்சி நீக்கப் படுகின்றது.

பச்சை காய்கறிகள், கீரைகள், கண்களுக்கு ஒளியையும் தோலுக்கு மென்மையையும் அளிக்கின்றது.

அளவான உணவு, உடலை கட்டுக்குள் வைக்கின்றது. அளவான உடற்பயிற்சி உடலை அழகாக வைக்கின்றது.

தினமும் விடியற்காலையில் திறந்த வெளியில் செய்யும் உடற் பயிற்சியும் மூச்சு பயிற்சியும் (பிராணயாமம்) தியானமும் முகத்தில் தேஜஸை ஏற்படுத்தும்.


படிப்பகம்

www.padippakam.com



# நண்பர்கள்

நண்பர் என்பவர் யார்? ஒருவரிடம் பாசத்தினால் அல்லது மதிப்பினால் ஒட்டிக் கொள்பவர். செல்வத்தின் மதிப்பு குறைந்து போனாலும், உண்மையான நட்பு மலர்ந்து மணம் வீசும். நல்ல காரியங்கள்மீது எமது எண்ணங்களை ஊன்ற வைக்கும்படி. ஓர் உண்மையான நண்பரால் முடியும். கஷ்டத்தில் இருக்கும்போது அவர்கள் எம்மை உற்சாகப்படுத்தி தூக்கி விடுவார்கள். உங்கள் துக்கத்திலும் பங்கு கொள்வார்கள். நீங்கள் பல பேரோடு நட்பை வளர்த்துக் கொண்டிருந்தால் உங்களுக்கு கஷ்டங்கள் வரும்போது அவர்கள் கைகொடுத்து உதவுவார்கள். நீங்கள் பெரிய தவறு ஏதாவது செய்துவிட்டால் அதை சுட்டிக்காட்டி அன்பான முறையில் ஆக்க பூர்வமான ஆலோசனையை உங்களுக்கு உண்மையான நண்பர் கொடுப்பார். நெருங்கிப் பழகும்

நண்பர்கள் கிடைப்பது அரிதான ஒரு வரம். அவர்கள் உங்கள் மீது நல்ல செல்வாக்கை செலுத்துவார்கள். உங்களின் வாழ்க்கையின் தரம் உங்கள் நட்பின் தரத்தைப் பொறுத்தே இருக்கும். தங்களுக்கு என வாழ்பவர்களுக்கு மகிழ்ச்சி இருக்காது. ஏனென்றால் அவர்களுடைய பொருட்களை அல்லது அவர்களுடைய எண்ணங்களை பகிர்ந்து கொள்ள அவர்களுக்கு யாரும் இருக்கமாட்டார்கள். "எனக்கு யாரும் இல்லை, நான் யாரையும் நம்ப முடியாது என பலர் சொல்வதைக் கேட்கிறோம். இவர்கள் நட்புக்காக ஏங்கித் தவித்து தனிமையில் வாடுபவர்கள். கம்பியூட்டர், செய்தித்தாள்களின் துணையைத் தேடுபவர்கள் பெருகிக் கொண்டு வருவது மனிதரோடு தொடர்பு வைத்திருக்க மக்களுக்கிருக்கும் ஆதங்கம். நிலையான நண்பர்களை சம்பாதித்து அவர்கள் இழந்துவிடாமல் இருப்பது ஒரு சவாலாக உள்ளது. அநேகர் இன்று மற்ற மனிதர்களோடு உறவுகளை வளர்த்துக் கொள்வதைவிட வீடு அல்லது கார் போன்ற பொருளுடைமை அல்லது தங்களின் வேலைகளில் அதிக ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர்.

அரிய நட்புக்கு நீங்கள் நல்ல நண்பராயிருங்கள். மன்னிக்கிறவராக இருங்கள், மற்றவர்களின் தனிமைக்கு மதிப்புக் கொடுங்கள், குணத்தில் தாராளமாக இருங்கள், அடுத்தவர் பேசும்போது செவிகொடுத்து கவனமாக கேளுங்கள், நட்பை வளர்த்துக் கொள்ள நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். நல்ல நண்பர் வேண்டுமானால் நீங்கள் நேசிப்பவரை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள், நட்பு என்பது அனைவரும் கொடுக்கவும் பெற்றுக்கொள்ளவும் முடிகிற பரிசு. பூ பூக்கும் ஒரு செடியைப் போன்றது நட்பு. அது பூக்கவேண்டுமானால் அதற்கு தண்ணீர் ஊற்றி கவனித்து வளர்க்க வேண்டும். அதற்கு நேரம் எடுக்கும். உண்மையான நண்பர், சிறிய தவறுகளை பொருட்படுத்தவே மாட்டார்கள். மன்னிக்க கற்றுக் கொள்வார்கள், தங்கள் நண்பர்களை இழந்துவிடுவதில்லை. தாராள குணத்தின் மூலம் நட்பு உருவாகிறது. கவனமாக செவிசாய்த்து கேட்பவர்களுக்கு நண்பர்கள் சுலபமாக கிடைத்துவிடுவார்கள். உங்களின் தேவைகளை குறித்து அக்கறையுள்ள ஒருவரை கண்டுபிடிக்க நண்பர்களின் உரையாடலின்போது செவிசாய்த்து கேளுங்கள். யாரும் கேட்பதற்கு தீவிரமாகவும் பேசுவதற்கு பொறுமையாகவும் இருக்க வேண்டும்.

MRS. Ranjana Thavaraj
Wadgassen / Saar



படிப்பகம்

குடியானவனின் மனைவி சென்ற பின்பு ஒரு பொந்திலிருந்து ஒரு கருநாகம் அங்கே வந்தது. தரையில் விரித்திருந்த துணியில் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. பாம்பு குழந்தையை நோக்கி வந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த கீரி பாம்பின் மேல் தாவிற்று.

கீரி பாம்பைக் கடித்துத் துண்டு துண்டாக்கி விட்டு, குடியானவனின் மனைவியின் வருகையை எதிர்நோக்கி நின்று கொண்டிருந்தது.

குடியானவனின் மனைவி குடத்தை நிரப்பிக் கொண்டு திரும்பினாள். அவள், வீட்டின் வெளியே கதவருகில் நின்று கொண்டிருந்த கீரியைப் பார்த்தாள். கீரியின் முகத்திலே இரத்தத்தைப் பார்த்ததும், அவள் தன் குழந்தையை இது கடித்துவிட்டதென நினைத்தாள். துக்கத்தாலும் கோபத்தாலும் நீர் நிரம்பிய குடத்தை கீரியின் மேல் போட்டாள். அப்பாவியான கீரி துடிதுடித்து இறந்துவிட்டது.

அந்தப் பெண் வீட்டிற்குள் ஓடினாள். அங்கே குழந்தை சுகமாய் தூங்கிக் கொண்டிருப்பதையும், ஒரு கருநாகம் கொல்லப் பட்டிருப்பதையும் கண்டாள். அப்பொழுது தான் அவளுக்குத் தன் தவறு தெரிந்தது. அவள் ஓடி கீரிக்கருகில் வந்து இறந்த கீரியை மடியிலெடுத்துக் கொண்டு அழத் தொடங்கினாள். ஆனால் அவளுடைய அழுகையால் இப்பொழுது என்ன பயன்? அதனால் தான் கூறப்படுகிறது "யோசிக்காமல் செய்துவிட்டு நோவதில் பலன் ஏது? காரியம் கெட்டால் உலகம் சிரிக்கும்."

எண்ணித் துணிக கருமம், துணிந்தபின்

எண்ணுவது என்பது இழுக்கு.


நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா ஒன்றுதான். மற்றப் பறவைகள் அனைத்தும் தலையை அண்ணாந்து தான் நீரை விழுங்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com






## நாயும் கள்வனும்

ஒரு வீட்டில் எவரும் இல்லாத நேரம் பார்த்து ஒரு திருடன் திருடுவதற்காக வந்தான். அந்த வீட்டிற்குக் காவலாக இருந்த நாய் அவனை உள்ளே விடவில்லை. திருடன் ஒரு மாமிசத் துண்டை நாயை நோக்கி விட்டெறிந்தான். நாயோ அந்த இறச்சித் துண்டைத் தொட விரும்பவில்லை. நாய் திருடனைப் பார்த்து "நான் எனது எசமானுக்குத் துரோகம் செய்ய மாட்டேன். இப்போது இந்த இறச்சியை உண்டு உனக்கு உதவி செய்தால் பின்பு எவர் எனக்கு உணவு தருவார்? ஒருவரின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்யக் கூடாது." என்றது.

## யோசிக்காமல் வேலை செய்யாதே

ஒரு குடியானவன் ஒரு கீரி வளர்த்து வந்தான். அக்கீரி மிகவும் கெட்டிக்காரத்தனமும், எஜமான விசுவாசமும் கொண்டது. ஒரு நாள் குடியானவன் எங்கேயோ சென்றிருந்தான். குடியானவனின் மனைவி தன் கைக்குழந்தைக்குப் பால் புகட்டிவிட்டு தூங்கச் செய்து கீரியை அங்கே விட்டு விட்டு, தண்ணீர் எடுத்து வர கிணற்றடிக்கு குடத்துடன் சென்றாள்.



படிப்பகம்

உருப்படியான ஒரு வரைபைத் தந்தால் அதனை எடுத்த எடுப்பில் நிராகரிக்காமல் அதனைப் படித்து அதில் சில திருத்தங் களைச் செய்து அதன் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படப்போகின்றது என்பது ஒரு நல்ல அறிகுறியாக இருந்தாலும் இதன் மூலம் என்ன கிடைக்கும் என்பது கேள்வியாக உள்ளது. அதேவேளை அடுத்தகட்ட பேச்சுக்கு இடைக் கால நிர்வாகமே முக்கியமானதாக இருக்கப்போகின்றது. கடந்த செப்ரம்பர் 16ம் திகதியும் அதே நிகழ்ச்சிநிரலுடன்தான் தாய்லாந்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. இது பேச்சுக்கள் மீண்டும் ஆரம்ப மான இடத்துக்கே வந்துள்ளது என்பதை உணர்த்துகிறது. இதுவரை அதாவது ஒன்பது மாதகாலமாக நடைபெற்ற பேச்சுக்கள் அனைத் தும் அர்த்தமற்றவையாகிவிட்டன என்ற உண்மையையும் தெளிவான முறையில் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

– ஆசிரியர் –

## 100வது இதழில்!....
## உங்களோடு!....

காலத்தின் அகவையில் "மண்" சஞ்சிகை 13 வருடங்களை கடந்து 100வது சிறப்பிதழாக வெளிவருகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும் இந்தக் காலகட்டத்தில் "மண்" தன் பணிகளை அக்கறையோடும், ஆர்வத்தோ டும் தொடர்வதற்கு உறுதுணை புரிந்துவரும் வாசகர்கள், படைப்பாளி கள், சிறுவர்கள், இலக்கிய ஆர்வலர்கள் யாவருக்கும். எமது உளப் பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நிரந்தரமற்ற புகலிடவாழ்வில், அந்நிய சூழலில் ஒரு தொடர்ச்சியான கலை, இலக்கயப் பணியை தொடர்வதென்பது இலகுவான காரிய மல்ல என்பது எல்லோரும் அறிந்ததே. இருப்பினும் பல கஷ்டங்கள் மத்தியி லும் "மண்" இதழ் தொடர்ந்து வெளிவருவது நீங்கள் எம்மோடு கொண்டிருக்கும் அன்பு, நம்பிக்கை, ஒத்துழைப்பு, ஒற்றுமை சேவையின் அடிப்படையுமே எனக் கூறலாம்.

"மண்" சஞ்சிகையை வர்த்தக நோக்கமின்றி புலம்பெயர் கலை, இலக் கியத்துறைக்குப் பங்காற்றும் உயரிய நோக்குடன் உருவானதை தாங்கள் அறிவீர்கள். இருப்பினும் தாயகமண்ணின் அவலங்கள் போக்குவதற்கு எம்மாலியன்ற சமூகப்பணியை மேற்கொண்டு வருகின் றோம். எதிர்காலத்திலும் இப்பணியைத் தொடர்வோம். உங்கள் ஒத்துளைப்பையும், பங்களிப்பையும் கைவிடாது கரங்கோத்து எம்மோடு உதவுங்கள்.

பணத்தை உழைத்தோம், உண்டோம், உறங்கினோம், இறந்தோம் என்று முடித்துவிடாமல் நாம் நன்றாக வாழ்ந்து நம் தேசத்து நலிந்த நம் மக்களுக்கு உதவி வாழ்வோம். கலை, இலக்கியப்பணியோடு சமூகப்பணி யும் தொடரும். நம்பிக்கை வளரட்டும். செயற்பாடு ஓங்கட்டும். வளர்வோம்... வாழ்வோம்...!

அன்புடன்,
ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com



# எங்கள் கருத்து

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப்பேச்சுவார்த்தைகளை மீள ஆரம் பிக்க அரசாங்கம் புதிய முயற்சிகளை முன்னெடுத்துள்ள அதே வேளையில் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் செயற்பட ஆரம்பித் துள்ளன. இந்த நிலையில் சமாதானப்பேச்சுவார்த்தைகளை முன்னேற் றப்பாதையில் கொண்டுசெல்வது எப்படி என ரணில் அரசு திண்டாடு கின்றது. பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையில்லாத ரணில் அரசு ஜனாதிபதியின் முடிவுகளோடு முரண்பட்டு நிற்கின்றது.

ஜப்பானில் உறுதியளிக்கப்பட்ட நிதிஉதவிகளை பெற்றுக் கொள்ளவேண்டிய அவசரத்தேவை இருப்பதால் சமாதானப் பேச்சுக் களை முடிந்தளவுக்கு விரைவாக ஆரம்பிக்கப்படவேண்டிய தேவை அரசுக்கு இருக்கின்றது. இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக அரசின் புதிய யோசனைகள் விடுதலைப்புலிகளின் பரிசீலனைக்கு விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது. இதன் மூலம் சுமூகமான நிலை மீண்டும் ஏற்பட்டுள்ளதாகக் காட்டிக் கொள்ள அரசு முற்பட்டிருக்கிறது. விடுதலைப்புலிகள் அரசு அடுத்த கட்ட பேச்சுவார்த்தை நிரலில் இடைக்கால நிர்வாகசபை அமைப்பது பற்றியே அரசு முன்னெடுக்கும். இந்த யோசனைகளை பரிசீலனை செய் வதற்கும் அதன் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கும் விடுதலைப்புலிகள் நோர்வேயிடம் இணக்கம் தெரிவித்திருப்பதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பரந்த அதிகாரங்களுடன் இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைக்க அரசு முன்வந்துள்ளது என்ற உணர்வை மக்கள் மத்தியில் அரசு ஏற்படுத்தினாலும் உண்மை நிகழ்வுகள் அப்படி அல்ல. இது தொடர்பாக விடுத்லைப்புலிகள் முன்வைத்துள்ள திருத்தங்களின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பது தான் அரசின் உபாயமாகும். ஆக இடைக்கால நிர்வாகம் உடனடியாக அமைக்கப்படப்போவ தில்லை. இது தொடர்பான பேச்சுக்களே ஆரம்பமாகப் போகின்றது.

இலங்கை அரசு இப்படியாகச் சில உபாயங்களை கடைப் பிடிப்பதற்கு சில காரணங்கள் உள்ளன. ரோக்கியோவில் ஒத்துக் கொள்ளப்பட்ட நிதியைப் பெறுதல் உள்நாட்டுப்பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை, ஆதரவை, ஏற்படுத்துதல் என்று கூறலாம். ஆனால் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை விடுதலைப்புலிகளிடம் கொடுப்பதற்கு இலங்கை எதிரணிக்கட்சிகளும் இந்தியாவும் எதிராக செயற்பட்டுவருவது ஜனாதிபதிக்கு பக்கபலமாக அமைந்துள்ளது. இந்த நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு பலமான எதிர்ப்பு, ஆபத்து வந்துவிடும் என ரணில் அரசு அஞ்சுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே


- ➢ எங்கள் கருத்து
- ➢ சிறுவர் வட்டம்
- ➢ ஆத்திசூடி, திருக்குறள்
- ➢ வினாவிடைப்போட்டி
- ➢ கவிதை, கட்டுரை
- ➢ தொடர்கதை, சிறுகதை
- ➢ அறிவியல், பொதுஅறிவு
- ➢ குறுக்கெழுத்துப்போட்டி
- ➢ செய்திச்சரம்
- ➢ 100வது இதழ்போட்டிமுடிவுகள்
- ➢ 100வது இதழ் வாழ்த்துக்கள்
- ➢ ஆதரவற்றோர் உதவிநிதி
- ➢ விளையாட்டுச் செய்தி


## ,,மண்" சஞ்சிகையின் தொடர்புகள்


அசிரியர்கள்: வ. சிவராசா
ப. சௌந்தரராசா

முகவரி: V.Sivarajah
Angertaler Str.98
47249 Duisburg – Germany

தொலைபேசி: 0203/706480
தொலைநகல்: 0203/6080581
மின்னஞ்சல்: mann_erde_sivarajah@hotmail.com

வங்கிவிபரம்: Stadtsparkasse Duisburg
*Kontonummer*: 225000421



படிப்பகம்